மொழிப்போர்த் தியாகி மாணவமணி

சாரங்கபாணி

வெல்க தமிழ்

நினைவுத்தூண் திறப்பு விழா

நினைவு மலர்

மன்னன்பந்தல் - 29.01.2007

பெரியார்-நாகம்மை நூலகம்
சே.எண்.
அம்பத்தூர், சென்னை-98

மொழிப்போர்த் தியாகி
மாணவமணி
சாரங்கபாணி
நினைவுத்தூண்
திறப்பு விழா
நினைவு மலர்

வெளியீட்டாளர் : தமிழ்த்திரு. **பழ. நெடுமாறன்**
தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு

நாள் : 29.01.2007

இடம் : வேலாயுதம் அரங்கம்
அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி)
மன்னன்பந்தல்

முனைவர் **கி. செம்பியன்**, தமிழ்த்திரு. **கு. தமிழ்நம்பி**
பேரா. **சு. தமிழ்வேலு**

மலர் வெளியீட்டுக்குழு

திருவள்ளுவர் படிப்பகம், திருவாரூர்ச் சாலை,
மயிலாடுதுறை - 609 001.

சாரங்கபாணி நினைவுத்தூண் அமைப்புக்குழு

ஒருங்கிணைப்பாளர்

முனைவர் கி. செம்பியன்
அலைபேசி : 94435 26213

தலைவர்

நாக. இரகுபதி
அலைபேசி : 94437 85594

செயலாளர்

கு. பெரியசாமி
தொ.பே.04364 225369

பொருளாளர்

கு. தமிழ்நம்பி
தொ.பே. 04364 259777

துணைத் தலைவர்கள்

மயில் (ஏ) எஸ். குருமூர்த்தி
ஊ.ம. த. மன்னன்பந்தல்

பேரா. **சு. விசுவநாதன்**

புலவர் **வே. புகழேந்தி**

துணைச் செயலாளர்கள்

பேரா. **சு. தமிழ்வேலு**
பேரா. **த. செயராமன்**
ந. கலியபெருமாள்

செயற்குழு உறுப்பினர்கள்

பேரா. **கோ. அதியமான்**
பால. முத்து
ந. செல்வமுத்துக்குமரன்
கவிஞர். வீதி
ஆ. அலக்சாண்டர்
நா.சா. அழகிரி
சிவ. செந்தமிழன்
கோவி. கருணாநிதி
மு. கண்ணன்
க. பாண்டியன்
தங்க. செல்வராசன்
கோ. அரங்கநாதன்
சாதி. இராமலிங்கம்
இரெ. ரசீத்கான்
வேலு. குபேந்திரன்
வே. ரா. பூபதி
சு. சரவணன்
மருதவாஞ்சேரி **கனகசபை**
மருதவாஞ்சேரி
சாந்தி பாஸ்கரன்,
ஊ.ம. தலைவர்

புரவலர்கள்

மரு. **செள. சுயம்புராசன்**
மதனா மருத்துவமனை

திரு. **எம்.ஏ.எம். சித்திக்**
மண்டல அரிமாசங்கத் தலைவர்

திரு. **எஸ்.வி. பாண்டுரெங்கன்**
வணிகர் சங்கச் செயலர்

பெரியார்-நாகம்மை நூலகம்
சே.எண்...............
அயந்தூர், சென்னை-

படையல்

தமிழ்மொழியைத்

தமிழ்ச் சொல்லைக் காக்கும்

போராட்டங்களில் ஈடுபட்டுச்

சிறையில் வாடியும்,

காவல் துறையின்

துமுக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டும்,

மேற்படியாரின் தடிகளால் அடிபட்டும்,

நஞ்சுண்டும்

தீக்குளித்தும்,

உடலை மண்ணுக்கு ஆக்கி

உயிரைத் தமிழுக்குத் தந்த

தமிழ்த்தாயின் தோன்றல்களுக்கு



ஈகி மாணவன் சாரங்கபாணி

மலர்
01.05.1945

விதை
15.03.1965

க. அன்பழகன்
நிதித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 19.01.2007

வாழ்த்துரை

அன்புடையீர்,

வணக்கம்.

தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்து, எந்நாளும் நினைவில் கொண்டு ஆண்டுதோறும் கொண்டாட வேண்டிய சிறப்புடையது, மாணவ மணி சாரங்கபாணியின் தன் இன்னுயிரையே ஈந்த தியாகம்.

தாய்மொழி தமிழின் உரிமையைக் காக்கவும், பெருமையை உயர்த்தவும் தமிழர்களெல்லாம் தங்களை ஒப்படைத்துக்கொள்ள அவர்தம் உணர்வை எழுப்பிய செயலன்றோ சாரங்கபாணியின் தியாகம்!

வாழ்க சாரங்கபாணி புகழ்!
வளர்க தாய்மொழிப் பற்று!

அன்பன்,

(க. அன்பழகன்)

பெறுநர்,
செயலர்,
மொழிப்போர்த் தியாகி மாணவமணி
சாரங்கபாணி நினைவுத்தூண் அமைப்புக் குழு,
மயிலாடுதுறை.

அரும்பு

மாணவன் சாரங்கபாணி தமிழுக்காகத் தனது இன்னுயிரை ஈந்து 41 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அவனது புகழ் பரவ, மயிலாடுதுறையில் அமைக்கப்பட்ட மேம்பாலத்திற்கு, அவனது பெயர் சூட்டப்பட்டுச் சாரங்கபாணி மேம்பாலம் என அழைக்கப்பட்டுவருகிறது. மேம்பாலம் கட்டப்படுவதற்கு முன்பு சாரங்கபாணி பெயரில் கூறைநாட்டில் ஒரு படிப்பகம் இயங்கிவந்ததாக அறிய முடிகின்றது. சாரங்கபாணியின் ஈகத்தை நினைவூட்டும் வேறு அடையாளங்கள் இல்லாதிருந்தன. குறிப்பாக அவன் தீக்குளித்த மன்னன்பந்தலில் எந்த அடையாளமும் இல்லை. தமிழார்வலர்களுக்கு இது குறையாகப்பட்டது. அடையாளப்படுத்தி நினைவூட்டும் செயலுக்குப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், வணிகர், அரசு ஊழியர், பல்வேறு அரசியல் சமூக இயக்கங்களின் பொறுப்பாளர்கள் எனப் பல நிலைகளில் செயல்படுவோர் அடங்கிய, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பொதுக்குழு அமைக்கப்பட்டது.

சாரங்கபாணிக்குச் சிலையா, நினைவுத்தூணா என்னும் கேள்வி எழுந்தது; நாடாளுமன்ற வளாகத்திற்குள் வைத்தால் பாதுகாப்பானது; பிற இடங்களில் நிறுவுவது என்றால் ஆபத்தானது என்னும் பதில் பிறந்தது! கண்ணகிக்கும் காந்திக்கும், அம்பேத்கருக்கும், பெரியாருக்கும், நேர்ந்தவைகளை உறுப்பினர்கள் மறக்க மறுத்தார்கள்; நினைவுத்தூண் வெற்றி பெற்றது! தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர், மறைந்த மாண்புமிகு கா. காளிமுத்து அவர்கள் 29.12.2005 ஆம் நாள் நினைவுத் தூணிற்கான அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார்கள். தூணுடன் சேர்த்து ஒரு மலரையும் வெளியிடக் குழு விரும்பியது. வழவழப்பான தாள், வண்ண வண்ணப் படங்கள், ஓவியங்கள், அரிய செய்திகள், உயரே இருப்பவரின் கவிதைகள், பேரறிஞர்களின் கட்டுரைகள், தமிழ்ப் பெருமைகளின் துணுக்குகள் இடம்பெறக் காப்பாற்றப்பட வேண்டிய பெட்டகமாக அது திகழவேண்டும் என்று அந்தக் குழு கனவு கண்டது! கனவு பலிக்கவில்லை! அதுவும் தமிழ்க்கனவு பலிக்குமா இந்தத்

தமிழ்த்திரு நாட்டில்! கோவில் உண்டியல் என்றால் கோடி கோடியாய்த் தங்கமும், வெள்ளியும், வைரமும், வைடூரியமும், பணமும், பொருளும் குவியும்! எங்களுக்கு அப்படிக் குவியவில்லை, நாங்கள் மனிதனைக் கோவிலாக்குவதால்! போகட்டும் சேர்ந்ததா; அதுவுமில்லை! இருப்பதைக் கொண்டு சிறப்புடன் படைக்கப்பட்டுள்ளது இந்த இன்பத் தமிழ் மலர்! இது தமிழுக்குத் தாஜ்மகாலாக இல்லாவிட்டாலும் நிழற்குடையாக விளங்கும்!

சில கட்டுரைகள் தமிழறிஞர்தம் நூல்களிலிருந்து எடுக்கப்பட்டன; சில அறிஞர் கவிஞர் வழிப் பெறப்பட்டன! தமிழின் பெருமைகளைத் தமிழரே சொன்னால் நாய் நக்கிக்கொள்கிறது என்பார் வளர்ந்துவிட்டவர்; அந்த அச்சத்தின் காரணமாக, அமெரிக்க அறிஞர் வாயிலாகத் தமிழ்த்தாயின் தாள்களைத் தொட்டு வணங்க வைப்போமே என்கிற பக்தி உணர்ச்சி மேலீட்டில், அவர்தம் ஆங்கில மொழியால் ஒரு கட்டுரை! கூடவே ஒரு தமிழன் (முனைவர் கி.இரா. சங்கரன்) தந்த அதன் மொழிபெயர்ப்பு! ஆங்கிலம் தெரிந்த அறிவாளிகளுக்கு ஓய்வு கிடைத்தால், ஒருவேளைத் தமிழைப்பற்றி அறிய ஆசைப்பட்டால், புரிந்துகொள்ளட்டுமே என்கிற நப்பாசையில்!

மலருக்குக் கட்டுரை எழுதித் தந்ததுடன், அதனை வெளியிடத் தனது உடல் நலக் குறைவினைப் பொருட்படுத்தாமல், சென்னையிலிருந்து மன்னன்பந்தல் வந்த, உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் **தமிழ்த்திரு பழ. நெடுமாறன்** அவர்களுக்கும், வெளியீட்டு விழாவினைக் கல்லூரி வளாகத்து வேலாயுதம் அரங்கில் அமைத்திட ஒப்புதலும், ஒல்லும் வகையெல்லாம் உதவிகளும் நல்கிய, அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரியின் ஆட்சிமன்றக் குழுத் தலைவர் **திரு. ச. கார்த்திகேயன்** அவர்களுக்கும், செயலர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும், தமிழ் முதல்வர் **முனைவர் மு. வரதராசன்** அவர்களுக்கும், கல்லூரியின் முன்னாள் இந்நாள் மாணவர்களுக்கும், இந்த நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக நினைவுத்தூணின் திறப்பு விழாவிற்குத் தமது 85 ஆவது வயதில் உடல் துன்பத்தை எண்ணாமலும், அமைச்சுப் பணியின் அலுவல் சுமையைக் கருதாமலும், தமிழார்வலர்களை

ஊக்கப்படுத்துவது ஒன்றையே உயிர் மூச்சாகக் கருதித், தமிழ்த்தொண்டர்களின் தொண்டை மதித்து வருகைபுரிந்த **நிதியமைச்சர் மாண்புமிகு க. அன்பழகன்** அவர்களுக்கும் தமிழார்ந்த நன்றி!

இது நல்ல செயல்தான்; செய்யப்பட வேண்டியதுதான், முன்பே செய்திருக்க வேண்டும் என்று நாங்கள் சென்றவிடமெல்லாம் நாவினால் பாராட்டிக் கையினால் பணம் தந்து, இறங்கிய நாடியை ஏற்றித் துடிக்கவைத்த தமிழ் உள்ளங்களுக்கும், மருதவாஞ்சேரியில் வாழும் சாரங்கபாணியின் உறவினர்களுக்கும், அந்த ஊரிலிருந்து நிதி திரட்டி, உதவிய நல்லுள்ளம் கொண்டோர்க்கும், மலருக்கு விளம்பரம் தந்து கைகொடுத்த தாராள மனம் படைத்தோர்க்கும், பல்வேறு அரசியல் கழகப் பணிகளுக்கு இடையே மலருக்கு மணம் ஊட்டிய தமிழைப் பிழைப்பாகக் கருதாமல் வாழ்வாக மதிக்கும் தமிழ்ச்சான்றோர்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை வரைந்த நிதியமைச்சர் முதலானோர்க்கும், கணிப்பொறிப் பணியை அழகுறவும் திறமையாகவும் செய்துகொடுத்த, மயிலாடுதுறை பரணி அச்சக நண்பர் கந்தசாமிக்கும், மலராக வடிவமைத்துத் தந்த சென்னை மணிவாசகர் அச்சகத்தார்க்கும் மலர்க்குழுவின் சார்பில் நவில்வது நன்றி!

நினைவுத்தூணைப் புதுமையாகவும் பொலிவுடனும் வரைபடம் எழுதி வடிவமைத்துத் தந்த பொறியாளர் திரு. ஜெகந்நாத் பிரசாந்த் அவர்களுக்கும் உயர்த்திய கையினைச் செம்பொன்னால் வார்த்துத் தந்த சிற்பி இராசாஇரவிசங்கர் (குடந்தை -மேலக்காவேரி) அவர்களுக்கும் நினைவுத் தூண் அமைப்புக் குழுவின் நன்றி!

தமிழா நீ ஆயிரம் ஆயிரம் படி! எழுது! அயல் நாடு செல்! ஆனால் தமிழைப் பாயிரமாக எழுப்பு! **நாம் தமிழர்** என்னும் அடையாளத்தை இழக்காதே!

- மலர்க்குழுவினர்

உள்ளுறை

		பக்கம்
1.	தீந்தமிழிற்காகத் தீயினுக்கு உணவானான்	12
2.	இந்தியால் தமிழன் கெடும்வகை	16
3.	தமிழ் ஒரு செம்மொழி	20
4.	இனம்!	24
5.	வடக்கத்தி இந்தி; வாலாட்டும் மந்தி!	44
6.	தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வழிவகுத்த போராட்டம்	46
7.	மன்னன்பந்தலைத் தாங்கும் நினைவுத் தூண்	52
8.	Statement on the Status of Tamil as a Classical Language	54
9.	உயர்தனிச் செம்மொழி	62
10.	மா தமிழ்த்தூண்	76
11.	கேட்டாலே சுடுகின்ற கேடு	78
12.	ஃகமும் அதுபோல வெல்லும்	82
13.	மொழி என் விழி	88
14.	இந்தி எதிர்ப்பு : பரிமாணத் தேய்மானம்	90
15.	தமிழ்நாட்டில் தமிழ் இல்லையா	102
16.	தமிழ் மொழியாம்...	111
17.	தமிழுக்குத் தன்னைக் கொடுத்தோன் சாவதில்லை	112
18.	தமிழர் வளர வழிகள் ஒரு முன்னோட்டம்	114
19.	விடலாமா?	132
20.	நினைவில் நிறுத்துவோம்	133
21.	தமிழ்ப் பேரறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்	135
22.	தமிழ் மறவன்	139
23.	கோவில்களும் தமிழும்	140
24.	காற்றினூடே...	143
25.	தமிழ் காத்தார்	144
26.	உலக நாடுகளில் ஆட்சி மொழி	145
27.	மொழிப் போராட்ட வரலாறு	149

உ

சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 609 206
சிவகங்கை மாவட்டம்
தொ.பே. 04577 - 264227

நாள் : 20.01.2007

வாழ்த்துரை

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்;
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"

என்ற பாவேந்தரின் பாடல் வரிகளுக்கு என்றும் உயிர் ஓவியமாய் திகழக்கூடிய நமது மொழிப்போர் தியாகி சாரங்கபாணி அவர்களின் நினைவைப் போற்றும் வண்ணம் நினைவுத் தூண் திறப்பு விழா காண்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்!

நினைவுத்தூண் திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் மலர், தமிழ், தமிழர் நலன், தமிழ் நாடு என்ற கொள்கையில், இளைய தலை முறையின் இதயங்களில் தொண்டு மனப்பான்மை தோன்றிடும் வண்ணம் கட்டுரைகள் கருத்துக்கருவூலமாக வெளிவரும் தியாகி சாரங்கபாணி அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் வரலாற்றுப் பெட்டகமாக மலர் மலர்ந்திடவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

பெறுநர்,
நாக. இரகுபதி அவர்கள்
தலைவர்
மொழிப்போர்த் தியாகி மாணவமணி
சாரங்கபாணி நினைவுத்தூண் அமைப்புக் குழு,
மயிலாடுதுறை.

1. தீந்தமிழிற்காகத் தீயினுக்கு உணவானான்

மாணவமணி சாரங்கபாணி வேளாண்குடும்பத்தில் கல்யாணசுந்தரம் - கோமளவல்லி இணையருக்கு 01-05-1945 ஆம் ஆண்டில் பிறந்தவர் ஆவார். இவரது ஊர் மயிலாடுதுறை திருவாரூர் நெடுஞ்சாலையில் உள்ள பூந்தோட்டம் என்னும் ஊரிலிருந்து நேர் மேற்கே 3 கி.மீ தொலைவில் இருக்கும் மருதவாஞ்சேரி என்பதாகும், இன்றைக்கு இவ்வூர் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்ததாக உள்ளது.

தொடக்கச் கல்வியை 1 முதல் 5ஆம் வகுப்புவரைத் தனது சொந்த ஊராகிய மருதவாஞ்சேரியில் பயின்றுள்ளார். உயர்நிலைக் கல்வியை 6 முதல் 11 ஆம் வகுப்புவரைக் கும்பகோணம் நகர (டவுன் ஹைஸ்கூல்) உயர்நிலைப் பள்ளியில் பெற்றுள்ளார்.

கல்லூரிக் கல்விக்காக மயிலாடுதுறைக்கு அருகே அமைந்துள்ள மன்னன்பந்தல் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரியில் (ஏ.வி.சி. கல்லூரி) சேர்ந்துள்ளார். அக்கல்லூரியில் இளங்கலைப் பட்டத்திற்குப் பொருளியில் பாடத்தினைத் (B.A., Economics) தேர்ந்தெடுத்துப் பயின்றுள்ளார். அந்த ஆண்டு 1964 - 1965 என்னும் கல்வி ஆண்டாகும். மூன்று ஆண்டுகள் பயிலவேண்டிய அந்தப் பட்டத்திற்கு இவர் முதலாண்டு மாணவராய்த் திகழ்ந்துவரும் காலத்தில்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன.

மாணவர் சாரங்கபாணி நற்பண்புகள் அமைந்தவர்; வெள்ளை வேட்டி வெள்ளைச் சட்டை அணியும் வழக்கத்தினர்; எப்பொழுதும் தூய ஆடையில் திகழ்பவர்; பாடம் கேட்பதில் மிகுந்த ஊக்கமுடையவர்; அவரைப் பார்த்துக்கொண்டே பாடம் நடத்தலாம் என்றெல்லாம் பேராசிரியர்களால் புகழப்படுபவர். கல்லூரி அமைந்துள்ள மன்னன்பந்தல் என்னும் சிற்றூரில், முதன்மைச் சாலையின் தெற்குப் புறத்தில் (கல்லூரி வளாகத்திலிருந்து சற்று மேற்கே காணப்படும் நாற்சந்தி அருகே)

ஒரு சிறு வாடகைக் குடிலில் ஓரிரண்டு நண்பர்களுடன் தங்கி, தானே சமைத்து உண்டுக் கல்லூரி நாட்களைக் கருத்தூன்றிக் கற்கும் பழக்கமுடையவராகத் திகழ்ந்துள்ளார். அதே வேளையில் மாணவர் இயக்கங்களில் மற்ற மாணவர் தலைவர்களுடன் இணைந்து முனைப்புடன் செயல்படும் போக்கும் இவரிடம் இருந்ததாகப் பேராசிரியர்கள் எடுத்துரைக்கின்றார்கள்.

1938 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம், பல்வேறு கூட்டங்களைத் தாண்டி மீண்டும் ***1965***-இல், திராவிட முன்னேற்றக் கழகம் முன்னிலைப்படுத்த பேரெழுச்சியாக வெடித்தது.

இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து **1965** ஜனவரி **26**-ஆம் நாளைத் துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் எனத் தி.மு.க. கேட்டுக்கொண்டது.

25.01.1965 - ஆம் நாள் முதல் தமிழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டனர். இயல்பான தன்னெழுச்சியினாலும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக ஓரளவு நெறிப்படுத்துதலினாலும் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, விருதுநகர், சிதம்பரம் ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஊர்வலம் சென்றனர். மதுரையில் **17**-ஆவது சட்டப் பிரிவிற்கு எரியூட்டப்பட்டது; சில இடங்களில் மாணவர்களைக் காங்கிரசுக்காரர்களும் பல இடங்களில் போலீஸ்காரர்களும் தாக்கினர்.

25.01.1965 -ஆம் நாள் தி.மு.க. உறுப்பினர் திருச்சி கீழ்ப்பழுவூரைச் சேர்ந்த திரு. சின்னச்சாமி என்பவரும், ***26.01.1965*** ஆம் நாள் அதிகாலை சென்னைக் கோடம்பாக்கம் சிவலிங்கம் என்பவரும் தீக்குளித்துத் தம்மை மாய்த்துக் கொண்டனர். ***26.01.1965*** ஆம் நாள் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ஊர்வலத்தின் மீது போலீஸ் சுட்டதில் திரு. இராசேந்திரன் மரணமடைந்தார். இராசேந்திரன் நினைவாகப் பல இடங்களில் நடத்தப்பட்ட மாணவர் ஊர்வலங்கள் போலீஸ் தடியடித் தாக்குதலுடன் முடிவடைந்தன. அப்பொழுது தமிழ்நாட்டின் முதன்மந்திரி எம். பக்தவத்சலம் என்கிற காங்கிரஸ்காரர். (***1963 - 1967***).

தமிழகம் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட மாணவர் அமைப்பு இல்லையெனினும் கூட, மாணவர் போராட்டத்தின் ஊடே மக்கள் திரண்டனர். கலந்து கொண்டு ஏறத்தாழ 50 நாட்களைப் போராட்டக் களமாக மாற்றித் தமக்குள் உறைந்துள்ள அரசாங்க எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டார்கள். நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாண்டனர். போலீஸ்காரர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான மோதல்களில் இரண்டு தரப்பினருமே மாண்டனர். தமிழகத்துக்குள் வரவழைக்கப்பட்ட இராணுவம் தமிழகத்தின் மூலை முடுக்குகளைக் காட்டுத்தனமாகத் தாக்கியது. வெகுண்டெழுந்த மக்கள் மைய, மாநில அரசாங்கக் கட்டடங்களுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தனர். 1947-க்குப் பின் தமிழகத்தில் நடந்த முதல் உள்நாட்டுப்போர் என்று குறிப்பிடக்கூடிய அளவில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது.

போராட்டக் காரணங்களினால் பல நாட்களாக மூடிக்கிடந்த தமிழகத்துக் கல்லூரிகள் 15.03.1965 ஆம் நாள் திறக்கப்படப் போவதாகவும், போராடிவந்த மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லப்போவதாகவும் அறிந்துகொண்ட சாரங்கபாணி, போராடிய காரணங்கள் நிறைவேறா முன்னம் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்வதா எனறு எண்ணிய சாரங்கபாணி, அதனைத் தடுத்துவிட எண்ணினார். இந்தச் சூழ்நிலையில்தான் மாணவர் சாரங்கபாணி 15.03.1965 ஆம் நாள் புலர்காலைப் பொழுதில் குடிலில் உறங்கிய நண்பன் விழித்தெழுவதற்கு முன்னர்த், தான் எழுந்து குடிலை வெளியில் தாளிட்டு (நண்பன் எழுந்து வெளியில் வரமுடியா வண்ணம்), முதல் நாள் இரவே ஆயத்தமாக வாங்கி வைத்திருந்த மண்ணெண்ணெய்யைத் தன் மீது ஊற்றித் தமிழ் வாழ்க தமிழ் வாழ்க என்று உரத்துக் கூவித் தீவைத்துக்கொண்டார். உயிர் பிரியும் நிலையிலும் மற்றவர்களைத் தமிழ் வாழ்க தமிழ் வாழ்க எனச் சொல்ல வைத்து, அத் தமிழோசையைக் கேட்டு இன்புற்றார். முடிந்தது அவர் வாழ்வு! முற்றுப்பெற்றதா தமிழின் தாழ்வு! அவர் தனது உடலில் வைத்துக்கொண்ட தீ தமிழ்த்தீயாகப் பரவட்டும்!

மலர் சிறக்க வாழ்த்துக்கள்

கசடறக் கற்க

மழலையர் முதல் கல்லூரி
வரையான பாட நூல்களும்
துணைவன்களும்கிடைக்கும்.

சமையல் கலை
ஆன்மீகத்திலிருந்து, நாத்திகம்,
சித்த மருத்துவம் வரையான
எல்லாவகை நூல்களும்
கிடைக்கும்.

புத்தகச் சோலை

25, மகாதானத் தெரு,
மயிலாடுதுறை.
தொ.பே. 258639

2. இந்தியால் தமிழன் கெடும்வகை

- பாவாணர்

1. தமிழ் மாணவர்க்கு வீண் கடுஞ்சுமை

இக்காலத்திற்கு இன்றியமையாத ஆங்கில மொழியையும் அதிலுள்ள அறிவியல்களையுமே கற்கப் போதிய காலமில்லாத போது பயனற்ற ஒழுங்கில்லாத ஒரு புதுமொழியைக் கற்பது தமிழ் மாணவர்க்கு வீண் கடுஞ்சுமையே.

பிறவற்றைக் கெடுக்கும் நச்சுப்பொருள்கள் (1) விரைந்து கொல்லி, (2) மெல்லக் கொல்லி என இருவகைப்படும். ஒரு நஞ்சு விரைந்து கொல்வதைக் கண்கூடாகக் காணலாம். மெல்லக் கொல்வதை நாளடைவில்தான் அறியமுடியும்.

அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என்னும் பழமொழிப்படி, சருக்கரையை மிகுதியாக உண்டால் புற்றுநோய் வரும் என்று ஒரு மருத்துவர் சொல்ல, ஒரு குறும்பன் தன் வாய் நிறையச் சர்க்கரைய்யை இட்டுக்கொண்டு எங்கே புற்றுநோய் வந்து விட்டது என்று வினவினான். இங்ஙனமே, முதன்முதல் இந்தி புகுத்தப்பட்ட சென்னைப் பள்ளிகளுள் ஒன்றாகிய இந்து மதவியல் உயர்நிலைப் பள்ளி அதிகாரிகள், அப்பள்ளி மாணவர் சிலரை மதுரைத் தமிழ்ச் சங்க மாணவர் தேர்வெழுதித் தேறவைத்து, இந்தியால் தமிழ் கெடும் என்ற இந்திய எதிர்ப்பாளரை நோக்கு எங்கே இந்தியால் தமிழ் கெட்டுவிட்டது என்ற வினவினர்.

சருக்கரையை மிகுதியாக ஒருவேளை உண்டதினால் மட்டும் புற்றுநோய் வந்துவிடாது. நீண்டநாள் அங்ஙனம் உண்டுவரின் இறுதியில் அந்நோய்வரும். அங்ஙனமே இந்தியால் தமிழ் கெடுவதும் நெடுங்கால விளைவேயன்றி உடனடியான விளைவன்று. ஆதலால், உணவுத்துறையில் தேர்ந்த மருத்துவர் சொல்லை நம்புவது போன்றே, மொழிக்கல்வித் துறையிலும் சிறந்த மொழிநூலறிஞர் சொல்லை நம்பவேண்டும். இதற்காகவே காட்சி, கருத்து, ஒப்பு என்னும் மூன்றொடு உரையையும் சேர்த்து உண்மையை யறியும் அளவைகள் நான்கென வகுத்தனர் ஏரண நூலார். மூத்தோர் சொல்லும் வார்த்தை யமுதம் என்றதும் இதுபற்றியே.

சிற்றறிஞர் என்றும் தங்கால நன்மையை நோக்குவர். பேரறிஞரே தங்கால நன்மையையும் வருங்கால நன்மையையும் ஒருங்கே நோக்குவர்.

மொழிகளின் இயல்பை அறியாத சிலர், ஒவ்வொரு மொழியும் ஒரு விளக்குப்போல்வ தென்றும், ஒரு விளக்கால் இன்னொரு விளக்குத் கெடாததுபோல ஒரு மொழியாலும் இன்னொரு மொழி கெடாதென்றும், தமிழ் மிகப் பெரிய மொழியாதலால் எந்த மொழியும் அதை அழித்துவிட முடியாததென்றும் எத்தனையோ வேற்றரசு வந்து பின்பும் அழியாது இவ்வளவு காலம் இருந்த மொழி இனிமேலா அழியப்போகிறது என்றும் பலவாறு தம் வாய்க்கு வந்தவாறு பிதற்றி ஆராய்ச்சி யில்லாரையும் மாணவரையும் மயக்குவதுண்டு.

மொழி என்பது மக்கள் வாயில் வழங்கும் ஒலித் தொகுதியேயன்றி அவரினும் வேறான ஓர் உயிரி அல்லது உருவம் அன்று. மக்கள் தம் தாய்மொழியைப் பேசினால் அது வாழும், அன்றேல் மாளும். ஆகவே ஒரு மொழி வழக்கிற்கு இன்றியமையாத சார்பு அல்லது நிலைக்களம் அதைப் பேசும் மக்கள் வாய் அல்லது நாவே. இதனாலேயே, மொழிவாயிலாய்க் கற்கப் பெறும் கலைகட்குத் தெய்வமும் நாமகள் அல்லது சொன்மகள் எனப் பெயர் பெற்றதும் என்க.

மொழிகட்கு மக்களினும் புறப்பான தனி உருவம் இருப்பின், புலி பூனையைப் பார்த்தமட்டில் வென்றுவிடுவதுபோல், தமிழும் இந்தியை எளிதாய் வென்றுவிடும். ஆயின், தமிழ் - இந்திப் போராட்டம் என்பது தமிழர்க்கும் இந்தியார்க்கும் நிகழும் போராட்டமே. இந்தியார் கையில் ஆட்சியதிகாரமும் படையுமிருக்கின்றன. தமிழர்க்கு அவையில்லை. இந்நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டே இந்தியர் தமிழரை மருட்டவும் வெருட்டவும் செய்கின்றனர். தமிழர் தமக்குத் தேவையில்லாததும் தமிழை நாளடைவில் வழக்கு வீழ்த்தற்கே புகுத்தப்படுவ்துமான இந்தியை ஏற்றுக்கொள்ளின், ஏற்கெனவே வடமொழியால் நலிந்திருக்கும் தமிழ், மேலும் நலிந்தும் மெலிந்தும் திரிந்தும் சுரிந்தும் நாளடைவில் தென்னிந்தியாக மாறிவிடுவது திண்ணம்.

சா. உ.

ஆரியர் இரண்டொருவராய் அல்லது விரல்விட்டெண்ணத் தக்கவராயிருந்தும், தம்மைத் தேவரென்று கூறி யேமாற்றித் தமிழரை அடக்கினர். இந்தியார்க்கு இடந்தரின், படைவலிமைகொண்டு தமிழரை அடக்குவர்.

2. தமிழர் குடிமைத் தாழ்வு

இந்தி இந்திய அரசியன் மொழியாயின், ஏனை மொழிய ரெல்லாரும் கதிரவனுந் திங்களுமுள்ள அல்லது இற்றை உலகம் நிலைக்குங் காலமெல்லாம் இரண்டாந்தரக் குடிவாணராகவே யிருப்பர். ஆளும் இனத்தானுக்கும் ஆளப்படும் இனத்தானுக்கும் இடையே ஏற்றத்தாழ்வான உளநிலை இருந்து கொண்டே யிருக்கும். தமிழ்நாட்டுத் தலைமைப் பதவிகளை யெல்லாம் இந்தியாரே தாங்குவர்.

3. தமிழர் பண்பாட்டுக் கேடு

அலுவற்பேறும் பதவியுயர்த்தமும் பிற ஏந்துகளும் (வசதிகளும்) நோக்கி, ஆயிரத்திற்கு 999.9 பேர் இந்தியரசிற்கு அடிமையராவது தேற்றம். இதற்குத் தமிழ்நாட்டுப் பேராயத் தலைவரே தலைசிறந்த எடுத்துக்காட்டாம்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராயிருந்து இந்தியை வன்மையாய் எதிர்த்துக் கொண்டிருந்த ஒரு தமிழர் மேலூர் மகந்து உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரிய ரானவுடன் பெருமகிழ்வுடன் அதை ஏற்றுக் கொண்டது, இங்குக் கவனிக்கத் தக்கது.

இனி, தமிழ முகமதியார் சிலர் உருது கற்று அதைத் தாய்மொழி போல் வழங்கி உருது முசிலீம் குடும்பத்தோடு மணஉறவு பூண்டு தம் குடியை உயர்த்திக் கொண்டது போலும், தாழ்த்தப்பட்டோர் சிலர் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகத் தழுவிச் சட்டைக்காரரானது போலும், பல தமிழக்குடியார் இந்தியைத் தாய்மொழியாக ஏற்றுச் சில தலைமுறைக்குப் பின்பேனும் இந்திக்காரராக மாறினும் மாறலாம்.

இத்தகைய சூழ்நிலையில், பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே பசிவந்தால் பத்தும் பறந்துபோம், உண்பாடின்றேல்

பண்பாடில்லை என்பனவே உண்மை மொழிகளாகும். எல்லாத் தொழிலும் ஒருசாண் வயிற்றிற்கே. ஆரியர் உயர்ந்தோர் என்னும் தவறான கருத்தினால், தூய தமிழ இனத்தார் தம்மை விசுவப்பிராமண ரென்றம், வன்னியகுலச் சத்திரிய ரென்றும் தனவைசிய ரென்றும் சற்சூத்திர ரென்றும் கூறிக்கொள்வதையும் நோக்குக.

4. தமிழ்ச் சான்றோர்க்கு வாழ்வின்மை

அருளில்லார்க்கு அவ்வுலக மில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை ஆகையால், பண்பாடே உருவான தமிழ்ச் சான்றோர்க்குத் தாங்கலிராமையால் வாழ்நாள் குன்றி மாய்வர். அதோடு, இந்திக்கு மாறானவ ரெல்லாரும் தேய இரண்டக ரென்றும் தீர்க்கப்பட்டுக் கடுந்தண்டனைக் குள்ளாவர்.

மறைந்துபோன தவத்திரு மறைமலையடிகளிடம் ஓர் அரசியல் தூதர் சென்று, நீங்கள் கட்டாய இந்தியை ஏற்றுக் கொண்டால் ஆயிரம் உருபாச் சம்பளமுள்ள பேராசிரியப் பதவி கிடைக்கும் என்றார். அதற்கு அடிகள் பத்தாயிரம் உருபாச் சம்பளமாயினும் கட்டாய இந்தியை ஏலேன் என்று கடுத்து விடையிறுத்துவிட்டார்கள்.

தவத்திரு மறைமலையடிகளைப் பொதுமக்களும் போற்ற வில்லை, பொருள் மக்களும் போற்றவில்லை, அரசியலும் போற்றவில்லை, (ஆரியப்) பல்கலைக் கழகங்களும் போற்ற வில்லை. அதனால் நூறாண்டு வாழ வேண்டிய அடிகள் 75 ஆம் அகவையில் மறைந்தார்கள்.

5. தமிழின மறைவு

தமிழின்றேல் தமிழனில்லை. ஆதலால் தமிழ் அழியின் தமிழ் என்னும் இனமும் நாளடைவில் மறைந்துபோம். இந்திய ரெல்லாரும் இந்தியாராகவே யிருப்பர். தமிழ்நாட்டுக் கல்லூரிகளிற் பெரும்பான்மையிடங்கள் இந்தி மாணவர்க்கே அளிக்கப்பெறும். அதனால் அலுவல்களிற் பெரும் பான்மையும் அவர்க்கே போகும்.

3. தமிழ் ஒரு செம்மொழி

மணவையார்

மொழி வரலாறு உணர்த்தும் பேருண்மை

உலக மொழிகளின் மொத்த எண்ணிக்கை 600. அதில் இலக்கிய, இலக்கணமுடைய மொழிகள் 300. இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட வரலாற்றையுடைய மொழிகள் 6. அவை தமிழ், சீனம், சமக்கிருதம், லத்தீன், ஈப்ரு, கிரீக் ஆகியன. இலத்தீனும் ஈப்ருவும் இறந்தவை. இசுரேல் அரசால் ஈப்ருவுக்கு உயிரூட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இறப்பின் எல்லைவரை சென்ற கிரீக் மொழி நாடு விடுதலை பெற்றபின் புதுவாழ்வு பெற்று வருகிறது. சமற்கிருதம் என்றுமே பேச்சு வழக்கு மொழியாக இருந்ததில்லை. எழுத்து வழக்கு மட்டுமே. எனவே, இயங்கா மொழி என்ற தகுதிப்பாட்டையே பெறுகிறது. பழைய மொழிகளாக உள்ள தமிழ், சீன மொழிகளில் சீன மொழி பட எழுத்துமுறையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் மனித உணர்வுகளையும் சிந்தனைகளையும் எண்ணிய எண்ணியாங்கு வெளிப்படுத்த இயல்வதில்லை என்பது மொழியியலார் கருத்து. மனிதச் சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளைப் பிசிறில்லாமல், அழுத்தம் திருத்தமாக, துல்லியமாக உணர்த்தும் ஆற்றல் தமிழுக்கு மட்டுமேயுள்ளது என மொழியியல் தந்தையான டாக்டர் எமினோ கூறியுள்ளது நினைவுகூரத்தக்கது.

ஐரோப்பாவை மொழிவழி அறிய இலத்தீன், ஈப்ரு, கிரீக் மொழிகளின் துணை தேவைப்படுவதுபோல், இந்தியாவை அறிய தமிழ், சமக்கிருதம் ஆகிய இரு மொழிகளின் துணை தேவை. இந்திய மொழிகளுக்குத் தாயாக இவ்விரு மொழிகளே உள்ளன.

இதில் இந்திய மொழிகளில் எதற்கும் இல்லாத தனிச்சிறப்பு தமிழுக்கு மட்டுமே உண்டு. அதுதான் பன்னாட்டு மொழி என்ற தகுதிப்பாடு. சிங்கப்பூர், இலங்கையில் ஆட்சி மொழிகளில் ஒன்று. மலேசியாவில் நாடாளுமன்ற மொழி. ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் அரசு மொழியாக அங்கீகரித்துள்ளதால் பன்னாட்டு மொழி என்ற தகுதிப்பாடு. இத்தனிச் சிறப்புகளுக்கு அப்பால், ஒரு மொழி செம்மொழியாவதற்குப் பதினொரு தகுதிப்பாடுகளை மொழியியல் வல்லுநர்கள் வகுத்தளித்துள்ளனர்.

தொன்மை

இலெமூரியாக் கண்டமெனக் குறிப்பிடும் குமரிக் கண்டத்தில் பிறந்த முதல் மாந்தன் பேசிய மொழி தமிழ் என்பது எலியட் போன்ற மாந்தரியல் ஆய்வாளர் கருத்து. இக்குமரிக் கண்டத்தில்தான் முதல், இடைத் தமிழ்ச் சங்கங்கள் அமைந்து தமிழ் வளர்த்தன. இந்நிலப் பகுதி கடலுள் மூழ்கியதால் இன்றைய மதுரையில் மூன்றாவது தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்க்கப்பட்டது. இஃது மூவாயிரம் ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தது.

தனித்தன்மை

தமிழ்மொழி மட்டுமல்லாது, தமிழ் இலக்கியமும் இலக்கணமும் தனக்கெனத் தனி நோக்கும் போக்கும் உடைய, மொழிக் கோட்பாடுகளைத் தன்னுட்கொண்டு இயங்குவதாகும்.

அனைவரும் ஏற்கும் பொதுமைப் பண்பு

மாந்த வாழ்வை அகம்-புறம் எனப் பிரித்தும், இனம், மதம், சாதி, நிறம் என்ற பேதங்களைக் கடந்தும் மாந்தகுலம் முழுவதையும் ஒன்றே குலம் என்று ஏற்றிப் போற்றும் பொதுப் பண்புடைய மொழி, இலக்கியப் படைப்புகளையுடைய மொழியாகத் தமிழ் உள்ளது.

நடுநிலை

சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சாராருக்குச் சொல்லப்பட்ட செய்தியாக இல்லாது, மாந்தர்கள் அன்னவரும் பின்பற்றியொழுகத்தக்கப் பொதுக் கருத்துகளை நடுவுநிலையில் நின்று பேசுகின்றன. இதுவே, தமிழ்மொழித் தொடர்புடைய தமிழ்க்கலை, இலக்கியப் படைப்புகளின் அடித்தளப் பண்பு.

பல மொழிகளுக்குத் தாயாக

தென்னக மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளுக்கு மட்டுமல்லாமல், பிராகுயி போன்ற வடபுல மலைவாழ் ஆதிகுடி மக்களின் மொழிகளுக்கும் தாயாக விளங்கி வருவதைக் கால்டுவெல், எமினோ போன்ற மொழியியல் ஆய்வாளர்கள் திறம்பட ஆய்ந்து கூறியுள்ளார்கள்.

பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு

வெறும் கற்பனைப் படைப்புகளாக இல்லாமல் மாந்தப் பட்டறிவின் முழு வெளிப்பாடுகளாக இலக்கியப் பண்பாடுகளும் கலையும் அமைய வேண்டும் என்பதற்குச் சங்கத் தமிழ் இலக்கியங்கள் இன்றும் வலுவான சான்றுகளாய் விளங்கி வருகின்றன. பட்டறிவை நுட்பமாக வெளிப்படுத்தும் ஆற்றல்மிகு அருங்கருவியாகத் தமிழ்மொழி அமைந்துள்ளது.

பிறமொழித் தாக்கமிலாத் தனித்தன்மை

பிறமொழித் தாக்கமே இல்லாத மொழி என்பதுதான் தமிழின் தனிப்பெரும் தனித்தன்மை. தமிழ் தனக்கென இலக்கண வரன்முறைகளையும், கட்டுக்கோப்பான இலக்கியக் கோட்பாடுகளையும் கொண்டு இயங்கி வருகிறது. இதனால் வேறு எந்த மொழி அல்லது மொழிகளின் துணை தேடவோ அல்லது அவற்றின் செல்வாக்கோடு இயங்கும் அவசியம் அறவே ஏற்படவில்லை. எனவே, உலகத்து மொழிகளில் தனக்கெனவுள்ள தனித்தன்மையோடு தனித்தியங்கும் மொழியாகத் தமிழால் மட்டுமே இயங்க முடிகிறது என்பது மொழியியல் வல்லுநர்களின் முடிவாகும்.

இலக்கிய வளம்

உலகத்து மொழிகளிலேயே சமயச் சாயலின்றி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு மாந்த வாழ்வை அகம்-புறம் எனப் பிரித்து, சங்க இலக்கியங்களை உருவாக்கிய பெருமை தமிழுக்கு உண்டு. உலக இலக்கியங்களின் முதன்மை பெற்ற சங்க இலக்கியங்களின் மொத்த வரிகள் 26,350 ஆகும். இந்த அளவுக்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் அந்தக் காலக்கட்டத்தில் உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் எனும் மொழியியல் பேரறிஞரின் ஆய்வு முடிவாகும்.

உயர் சிந்தனை

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என உலகப் பொதுமை உணர்வோடு பாடிய சங்கப் புலவர் தொட்டு ஒப்பற்ற

உலக நீதிநூலான திருக்குறள் அனைத்தும் உலக மக்களின் உயர்வாழ்வை மட்டும் கருத்தில் கொண்ட உயர்சிந்தனைப் படைப்புகளாகும்.

கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு - பங்களிப்பு

பட்டறிவு வெளிப்பாடே கலையும் இலக்கியமும் என்பதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகத் தமிழ்க் கலைகளும் இலக்கியங்களும் திகழ்கின்றன. உலகில் மொழி, கலை, இலக்கியத் துறைகளை இயல், இசை, நாடகம் என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு வளர்ந்து வளமடையச் செய்த இனம் தமிழ் இனமாகவே இருக்க முடியும். சாதாரண குடிமகனையும் மகளையும் கதாநாயகர்களாகக் கொண்ட உலகின் முதல் குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம் உணர்த்தும் கலைநுட்பச் செய்திகள் சங்ககாலத் தமிழர்களின் கலை இலக்கியத் தனித்தன்மைகளுக்குக் கட்டியங்கூறுவனவாகும்.

மொழிக் கோட்பாடு

2,500 ஆண்டுகட்கு முன்பு தமிழ்மொழி இலக்கண நூல் உருவாகியது. இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் என்பது மரபு எனத் தொல்காப்பிய இலக்கணம் உருவாவதற்கு முன்னதாகப் பல நூறு ஆண்டுகட்கு முன்பே தமிழ் இலக்கியம் வளமாகவும் பெருக்கமாகவும் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியம் தமிழ்மொழிக்கு மட்டும் இலக்கணம் கூறாமல் மாந்த வாழ்வுக்கே இலக்கணம் வகுத்துக் கூறவதாயுள்ளது. இவ்வகையில் அமைந்த உலகின் முதல் இலக்கண நூல் என்றதோடு இதில் கூறப்பட்டுள்ள மொழியியல் கோட்பாடுகளும் சொற்பிறப்பியல் கோட்பாடுகளும் இன்றைய மொழியியல் அறிஞர்கட்கும் வியப்பையும் திகைப்பையும் ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு செம்மொழிக்கான *11* கோட்பாடுகளும் முற்றிலும் பொருந்தும் ஒரே மொழியாகத் தமிழ் திகழ்ந்து வருகிறது.

-தமிழ்ச் சான்றோர் பேரவைச் செய்திமடலிலிருந்து.

4. இனம்!

அருளி

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழக வாகை வளாகத்தில் அமைந்திருக்கும் புலவிருந்தக எட்டாம் எண் அறையுள் ஒரு பத்து ஆண்டுகளும் - அதற்குப் பக்கத்துள்ள கட்டட மாடியில் உள்ள தனித்தமிழ் மனையுள் மறுபத்து ஆண்டுகளும் ஆகச் சற்றேறக்குறைய ஓர் இருபது ஆண்டுக் காலம் அறைவாழ்நனாக கல்வியுள்ளேயே ஊடாடி இயங்கிவரும் எனக்கு அவ்வளாகத்துள் உகப்புற அகவும் - அகலித்துப் பறக்கும் - ஆட்டமாடும் நூற்றுக்கணக்கான மயில்களைக் காண்பதிலும் - கூட்டங்கூட்டமாக அரம்பத்தனத்தொடு திரண்டோடியவாறே முரண்டாடிக் கொண்டிருக்கும் குரங்குகளை உற்று நோக்குவதிலும் ஒரு தனிஇ ஆறுதலும் ஈடுபாடும் இன்பமும் தொடர்ந்து கொண்டுள்ளன.

வகைவகையான பாம்புகள் பற்றிய செய்திகளோ, தனிச் சுவையின! பாம்பு வகையினத்தின் மணவேறுபாடுகள் கூட, எனக்கு ஓரளவுக்கு அகத்துப்படி! அதாவது, அத்துப்படி!... குரங்குகள் பண்ணும் அலம்பலும் ஆரவாரமுமான எல்லையற்ற இன்பந்த தருங்காட்சிகள் என் உள்ளத்தையே கொள்ளை கொள்ளுவன! நம் அனைவர்க்குமான பொது முந்தையர் என்ற உயிரியியல்சார் வரலாற்றுணர்வுடன், அவை இயங்கும் காட்சிகளில் நன்கு கவனம் செலுத்தும் வழக்கத்தினனாகவும் உள்ளேன்.

சிறுசிறு தின்பண்டங்களைச் சில நேரங்களில் தரும் வழக்கத்தினன் என்ற முறையுறவில் என்பால் ஓரளவுக்கு மதிப்புக் காட்டும் குரங்குகளும் அவற்றுள் சில, உள! குரங்குகளில் சில, ஏற்பட்ட பசி வருத்தத்தைத் தம் ஏக்க முகங்கள் ஊடாக மிகமிக அமைதியாக வெளிப்படுத்துந் திறமோ, தனிஇ அழகு வாய்ந்ததாய் இருக்கும்! (மூவாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள்...) அமைந்து எழுதிக் கொண்டிருந்த காலை வேளையில் - திடுதிப்பெனப் பலகணி வழியே நுழைந்து என் அறையின் ஒரு பகுதியில் தொங்கிக் கொண்டிருந்த வெற்றிலை - பாக்குப்பையைச் (பக்கை) சரேல் எனப் பறித்துக் கொண்டு வெளியேறி மாடியுச்சியில் சென்று

ஆரஅமர அமர்ந்தவாறு மிகக்கூர்ந்து பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு கடுவன் குரங்கிடம், வேண்டிக் கும்பிட்டுக் கெஞ்சிய என் வெற்று நடிப்பை உற்றுப் பார்த்துவிட்டுக் கீழிறங்கி வந்து அப்பையை என் அண்மையிலேயே வந்து போட்டு விட்டுச் செம்மாப்புடன் திரும்பிச் சென்ற காட்சியோ, ஓர் எழுதவியலாப் பேரிலக்கிய நிகழ்வு ஆகும்! இவைபோல் பற்பல!...

"ஏதாவது தருவேன்!" என்ற நம்பாசை (நப்பாசை) உணர்வோடு உள்ளகமாகத் தாழிடப்பட்டிருக்கும் என் அறைக் கதவைத் தொடர்ந்து தட்டிவிட்டு வெளியில் காத்திருக்கும் குரங்குகளும் சில உள! (இங்குள்ள மூன்றுக்கும் மேற்பட்ட குரங்குகளுக்கு வலக்கை முற்பகுதிகள் இல! சண்டைகளில் ஏற்பட்ட இழப்புகள் என்பதற்குரிய அடையாளங்கள் இவை என அவ்விடங்களில் உள்ள வடுப்பதிவுகளைக் கொண்டே நம்மால் உணர முடியும்!) அவற்றுள் பெரிய-முதிய கடுவன் ஒன்று, கிழமைக்கு (வாரத்துக்கு) ஓரிருமுறை என் அறைமுன் வந்து இரவு (பிச்சை) கேட்கும் வழக்கமுடையது! முதல் தடவையில் கதவைத் தட்டியபோது, யாரோ ஆள் ஒருவர்தான் தட்டுகின்றார் என்ற உணர்வொடு கதவைத் திறந்து பார்க்கையில், அங்கு ஏக்க முகத்தொடு குத்துக்கால் போட்டு உட்கார்ந்திருந்த (முன்கைப்பகுதியற்ற) அக்குரங்கு தன் கையை என்னை நோக்கியவாறு நீட்டிக்கொண்டே, "ஈஇஇ..." என்றவாறு உரத்துக் கூவி இரங்கி வேண்டியது! வியம்புலும் வியப்பு, அது! (ஈது எனக்கு ஈதல் என்னும் சொல்லுக்குரிய கருப்பொருளை விளக்கமாக்கிய காட்சி!) 'எனக்குத் தா!' (எனக்குக் கொடு) என்பதற்கான வேண்டுகை ஒலி, இது! (தா- என்பதற்கும் - கொடு என்பதற்கும் முன்னீடாக முந்தித் தோன்றிய அடிப்படைக் கருத்துச் சொல்லாகவும் தோன்றுகின்றது!)

இய் : பிரிவுக் கருத்துவேர்

இய் > இய் + அவு > இயவு = வழி

(ஓ.நோ. வய் - பிரிவுக் கருத்து வேர்)

வய் > வயி > வழி = நடந்து - நடந்து பிளவுண்டாற் போல் தோன்றுவதாகிய செல்வழி.

கற்பிறழ் இயவின் (அகம் 207:6)

இயவு + உள் > இயவுள் = வழி

பறந்தலை... இயவுள் (அகம் 29 : 17)

இயவு + ஐ > இயவை = வழி

(திவாகர நிகண்டு : 1078) (பிங்கல நிகண்டு : 472)

இயவு + உள் > இயவுள் = பிள்ளை

(தாயினின்றும் பிரிவெய்திய உயிரி)

இயவுள் என்பது பிள்ளைப் பெயரே

(அகராதி நிகண்டு : இம்முதல் : 25)

இய் > இய் + அல் > இயல் = பகுதி, உட்பிரிவு

இயல் = மாறுபாடு (தேவாரம் 979 : 9)

இயலு-தல் = மாறுபடுதல், போட்டி போடுதல் (தேவாரம் 601:8)

இயலு > இசலு (யகர சகரத் திரிபு)

இசலுதல் : மாறுபடுதல்

ஒன்றுக்கொன்று இசலி வளரா நிற்கும் (ஈடு : 4,10: 6)

இசல் > இசல் + இ > இசலி = பிணங்குபவன் (திருப்புகழ் :243)

இய் > இய்கு > இகு

இகு > இக:

இகத்தல் = 1.பிரிதல்.

பதி இகந்து நுகர்தலும் உரிய (தொல். பொருள். 189)

இகந்துறைவர் ஏதிலர் (குறள் : 1130)

2. மீறுதல், தாண்டுதல்

செறிந்த காப்பு இகந்து (அகம் 15: 12)

3. நீங்குதல்

முனிவு இகந்து (சிறுபாண் : 40)

நடுவு இகந்து (குறள் 113)

4. கழிதல்

இகந்த பின்னை (சூளாமணி 1446)

5. கடந்து போதல்

பொழுது நனி இகப்பினும் (தொல். பொருள் 105 :2)

6. அப்பாற்படுதல்

மூலமும் அறமும் முதன்மையின் இகந்த காலமும் விசும்பும் (பரிபாடல் : 13: 24)

இகு > இகு + அவு > இகவு

இகவு மலர் > இகமலர் : விரிமலர் (பிங்கலம்)

இகு > இகுவு + ஐ > இகுவை = வழி

(உரிச்சொல் நிகண்டு)

இகு + அல் > இகல் = பிரிவு

1. மாறுபாடு

இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை (குறள் : 856)

2. பகைமை

மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே (புறம் : 45 : 9)

இகல் + அவன் > இகலவன் = பகைவன் (பாரதவெண்பா : 511)

இகலோன் = பகைஞன் (திவாகரம்)

இகு + அவு > இகவு = (பிரிவு) நீங்குகை

ஈர் ஆறு நாளும் இகவற்க (ஆசாரக் கோவை : 42)

[இகு > சிகு (Prothesis) (முன்மிகை)

சிகு > செகு = (இகர எகரத் திரிபு)

செகு = வெட்டு, கொல்லு

இகுத்தலே செகுத்தல் (சூடாமணி நிகண்டு, ககரவெதுகை:7)

இகுத்தலெனும்... செகுத்தலும் (வடமலை நிகண்டு : 213)

செகு > செகுத்தல் = வெட்டுதல், கொல்லுதல் **ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று** (குறள் : 259)

செகு > (Latin) Secare = to cut

(Indo-European base) : Sek = cut

இதன்வழி உருவான ஆங்கிலச் சொற்களிற் சில : bisect, dissect, insect, intersect, secateurs, sector, segment, saw, seythe, sedge, sickle.]

இய் > ஈய். ஈய் + இர் > (ஈயிர்) > ஈர் = பிரி

ஈர்தல் = அறுத்தல், அரிதல்

கோடு ஈர் எல் வளை (ஐங்குறு : 196)

உயிர் ஈரும் வாள் (குறள் : 334)

ஈர்தல் = பிளத்தல்

ஈர்ந்தும் அறுத்தும் இறைச்சி உவப்பவர் (சூளாமணி: 1962)

ஈர்ப்பு = 1. பிளப்பு, 2. அறுப்பு (பெப்புரீசியசு அகராதி)

ஈர்வாள் = அரம்பம் (பிங்கலம் : 1561)

ஈர்வு = அரிகை, பிளக்கை, வெட்டுகை

ஈர் + உள் > ஈருள் = இரண்டு வகிர்களாக உள்ள நுரையீரல்

இரு வகிர் ஈருள் (அகம் : 294 :8)

ஈருள் > ஈரல் = நுரையீரல்

ஈர் = இரு, இரண்டு **ஈரசை கொண்டு மூவசை புணர்த்தும்** (தொல்.சொல்:320)

[ஒ.நோ.ஈரடி, ஈரரசு, ஈரறிவுயிர்]

ஈர் > ஈரு > இரு = இரண்டு

(இரு + அண் + து > இரண்டு)

இரு > இரி = பிரி, விலகு, ஓடு, கெடு

இரிதல் : பிரிதல், கிழிதல்,

அரிக்கூடுமாக்கிணை இரிய ஒற்றி (புறம் : 378 :9)

நீங்குதல் தடந்தாள் நாரை இரிய (பதிற்றுப்பத்து : 29:4)

இரு > இறு. இறு + தி > இறுதி = அறுப்புற்று முடிவுற்ற நிலை, முடிவு, அறுதி.

இறு > இற்று. இற்று விழுதல் = பிரிந்து விழுதல் (நைந்து) அறுந்து விழுதல்

ஈர் > ஈரு > ஈறு = இறுதி.

ஈறு இயல் மருங்கினும் இசைமை தோன்றும்

(தொல்.எழுத்:39)

நெட்டெழுத்து இம்பரும் தொடர்மொழி ஈற்றும்

(தொல்.எழுத்.36)

ஈர் > ஈர்+ஐ > ஈரை > இரை : அலகால் கொத்தி அல்லது உகிரால் கீறிப் பிரிக்கப் பெற்றதாகிய ஊன்; பறவை விலங்கு முதலியவற்றின் ஊண் அல்லது உணவு.

இரை > இறை. இறை+ச்+சி > இறைச்சி :வெட்டப்பெற்ற ஊன்துண்டு :இரைப் பொருள்.

இய்: பிரிவுக் கருத்து. இய் > ஈய்

ஈய்தல் = (பிரித்தல்) > பிரித்துக் கொடுத்தல் (அதாவது பகுத்துக் கொடுத்தல்) > கொடுத்தல் **உண்டும் தின்றும் இரப்போர்க்கு ஈய்ந்தும்** (புறம் 364:7)

ஊண் ஈய்ந்தார் (ஏலாதி : 56)

ஈய் > ஈய்வு > ஈவு = பிரிவு, இடைவெளி

ஈவுவிடுதல் = இடைவெளி விடுதல் (யாழ்ப்பாண வழக்கு)

ஈய் > ஈய்+ப்+பு > ஈய்ப்பு > ஈப்பு = கொடுத்தல்

ஈத்த வகையால் உவவாதார்க்கு ஈப்பு இன்னா

(இன்னா நாற்பது: 21:1)

ஈய் > ஈ = கொடு **ஈயப்படும்** (= கொடுக்கப்படும்) (குறள்:412)

ஈ: **தேர் ஈயும் வண்கையவன்** (கலி: 42:21)

வரைநிலையின்றி இரவலர்க்கு ஈயும்... கோடைப் பொருநன் (அகம்: 13:9)

ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே (தொல். சொல் : 445)

ஈ + தல் > ஈதல் = வழங்குதல், கொடையளித்தல் **தமர் நமக்கு ஈத்த தலை நாள் இரவின்** (அகம் : 136 : 8)

(மேலுங்காண் : குறள் : 226, 230, 842,1006, 1054)

ஈத்து உவத்தல் : கொடுத்து மகிழ்தல் **ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்** (குறள் : 228 :1)

ஈய் > ஈய் + கை > ஈய்கை > ஈகை = கொடை வழங்குகை

தவிரா ஈகை (புறம் : 3 :5)

தண்டா ஈகை (பெரும்பாண் : 460)

(மேலுங்காண்க : குறள் : 221,382, 953)

ஈகை + அன் > ஈகையன் = கொடையாளி

இனிய சொல்லினன் ஈகையன் (கம்பராமாயணம் :2:2:26)

ஈகை அரிய இழை = ஈத்தற்கு அரியதான தாலி.

ஈகையரிய விழையணி மகளிர் (புறம் : 127:5)

ஈய் + கு > ஈய்கு > ஈகு

ஈகுதல் = கொடுத்தல் (கம்பரா : 6:17:39)

ஈய் + வு > ஈய்வு > ஈவு = கொடை

ஈவோன் = கொடையாளி

இரவலர்க்கு ஈவோர் உண்மையும் காண் இனி

(புறம் : 162 : 3-4)

ஈகு > ஈகு + அம் > ஈகம். (தியாக(ம்) என்னும் சமற்கிருதச் சொல்லுக்கு நேரிதாக அண்மையில் உருவாக்கப் பெற்ற சொல்)

ஈய் > ஈய் + உ (**உ** என்பது, பண்டைப் பழங்காலத்தே சுட்டொலியாய்த் தொடங்கி முன்னிலையாகி நின்றானை அல்லது நின்றாளைச் சுட்டிக் கூறுதற்கும் வளர்ச்சி யெய்தியது! (**உ** என்பது உன் என்னும் வளர்ச்சிக்கு ஓங்கியதை இவ்விடத்தில் கருதிப் பார்த்தல் வேண்டும்). கொடு - நீ என்னும் பொருளிலாக ஈய் + உ என்பதே **ஈயு** என்றாகியது)

ஈயு > ஈமி > ஈனு. (ஈனு + தல் > ஈனுதல்

ஈனுதல் = புறந்தருதல், பெற்றெடுத்தல்).

(யகர - ஞகர - னகரத் திரிபு)

காண்க:

1. மய் : (கருமை) மய் + இல் > மய்யில் > மயில் ய > ஞ
மய் > மய் + ஐ (மய்யை) > மஞ்ஞை = மயில்
2. உய் > உய் + அல் > உயல் > உயல் + து > உயற்று
உயற்று > உஞற்று (உஞற்றுபவர்) (குறள் : *620, 1024*)
3. குடி > குடி+ஐ > (குடியை) > குடிஞை = மரப்பொந்தில் வதியும் கூகை; கோட்டான்
4. யா+ கட்டு, யாப்பு : கட்டுகை
யா > யா + அழ் > யாழ் (= நரம்புக் கட்டாலாகிய இசைக்கருவி)
யாழ் > ஞாழ்
ய > ஞ > ன
1. அய் > ஐ (ஐ+ஐ > ஐயை = அன்னை)
ஒ.நோ : அய் > ஆய் = அன்னை
அய் > அய்யை (= தாய்) > அஞ்ஞை = தாய்
அஞ்ஞை > அன்னை
2. புய் > புய் + அல் > புயல் = மழை, நீர் (குறள் : *14*)
புயல் > (புஞல்) > புனல் = நீர் (குறள் : *495, 737, 1134, 1167,1287*)
3. விய் > விய் + அல் > வியல் = அகலம், விரிவு
(தொல். சொல் : உரி:*66*)
விய் > (வியை) > (விஞை) > வினை : பெரிய கருமம், நீடிய செயல்
(ஒ.நோ : வியல் > வியல் + ஐ > வியலை > வேலை = பெரிய கருமம், நீடிய செயல். சான்று : வியர்வை > வேர்வை)

ஈனு > ஈன்
ஈன் + (அ)து > ஈன் + து > ஈன்று
ஈன்று > ஈற்று = ஈனப்பெற்றது, ஈன்புற்றது, பிறந்தது)
ஈனுகை, பிள்ளைபெறுகை, விலங்கு முதலியன குட்டிபோடுகை.
(ஒ.நோ: *1.* அன்ன அது. அன் + (அ)து > அன்+து > அன்று > அற்று = அன்னதன்மையது.

அற்றே தவத்திற்கு உரு

2. இன்ன அது. இன் + (அ)து> இன் + து > இன்று > இற்று = இன்னது, இன்னதன்மையது.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்

(தொல்.சொல். கிளவி:*19*)
3. இன்றை > இற்றை, அன்றை > அற்றை)

ஈற்று = ஈனுகை **பெண் ஈற்று உற்றென** (புறம் : 82:1)
ஈற்று + ஆ(பசு) > ஈற்றா = கன்று ஈன்ற (பசு) ஆ.
இல்லெழு வயலை ஈற்றா தின்றென (நற்றிணை : 179:1)
ஈற்று + அம் > ஈற்றம் = பிள்ளை பெறுகை,
ஈற்றம் விலங்காமைக் கோடல் (சிறுபஞ்சமூலம் : 72 : 2 -3)
ஈற்றுத்தாய் = பெற்றதாய் (பெரியாழ்வார். தி:3,9,4)
ஈற்றுத் துன்பம் = குழந்தை பிறப்பதற்குத் தோன்றும் வலி
(பட்டினத்துப் பிள்ளை - திருவிடைமருதூர் மும்மணிக்கோவை : 4:16-17) ஈற்று + உளைதல் > ஈற்றுளைதல் = மகப்பேற்றுக் கால வலியால் துயரப்படுதல்.
(கூர்மபுராணம் : 1,15,57)
இக்கால் பயிலப்பெறும் **பிரசவ வேதனை** என்னும் வடமொழி வழக்குக்கு நேரிதாகப் பண்டையில் தமிழில் வழங்கிய கூட்டுச்சொல்).
ஈற்றுக் கயிறு = குழந்தை பெறும் போது தாய் பற்றிக் கொள்ளும் கயிறு.
(இது **ஈத்துக் கயிறு** என்றவாறு இன்றும் ஊர்ப்புறங்களில் வழங்கப் பெறுகின்றது)
ஈற்றுப் புரை = குழந்தை பெறும் தாய்க்காக ஓலையால் அமைக்கப்பெறும் தனிச் சிறுகுடில்.

ஈனு ஈனுதல் = பெற்றெடுத்தல், கருவுயிர்த்தல்
ஈன்ற வயிறோ இதுவே (புறம் : 86 : 5) **ஈன்ற குழவி முகங்கண்டிரங்கி**
(மணிமேகலை: 11:114)
(கருத்துவிரிவாக்கம் : தருதல் > பெற்றெடுத்தல் > (கருவுயிர்த்தல்) > தோற்றுவித்தல் (மரம் பயிர் முதலியன காய்-தோகை-கதிர் போன்றவற்றைத் தோற்றுவித்தல்,(சான்று: ஈனல்: கதிர்விடுதல் **ஈனல் செல்லா ஏனற்கு** (புறம் : 159:18) > உண்டாக்குதல் > படைத்தல்)

ஈனுதல் : ஈனும் = கொடுக்கும், தரும்
(குறள் : 32,74,180,311,361,754)
ஈனு > ஈன் : ஈனு
அருளென்னும் அன்பு ஈன் குழவி

(குறள்:751) (ஈன்பது = தருவது (குறள் : 165)
ஈன் + தல் > ஈன்றல் = பெற்றெடுத்தல்

ஈன்ற தாயானும் பிறன் போல நோக்கப்படும் (குறள் : 1047)

ஈன்ற மகன் = பெற்றெடுத்த மகன்
(பதிற்றுப்பத்து:2-3, 4-3, 5-3, 6-3, 7-3, 8-3, 9-3)
ஈன்று + (வ்) + அள் > ஈன்றவள் = ஈன்றதாய் (கலி: 29:2)
ஈன்றவள் > ஈன்றாள் = ஈன்ற தாய்

ஈன்றாட்கு ஒரு பெண் இவள் (பரிபாடல் : 8:58)

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் (குறள் : 656)

ஈன்றாள் > ஈன்றோள் (ஆ > ஓ).

ஈன்றோள் நீத்த குழவி போல (புறம் : 230:7)

ஈன்ற + அண் + இ > ஈன்றணி = (பிள்ளைபெற்ற) குட்டி பெற்ற அண்மைக் காலம்.
இனமருப்பு எருமை ஈன்றணிக் காரான் (குறுந்தொகை:181)
ஈன்ற + அணிமை > ஈன்றணிமை : ஈன்றணி

புனிறு என் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே
(தொல்.சொல்:375)

ஈனாத் தாயர் : செவிலித் தாய்மார். பெற்றெடுக்காத தாய்மார்

ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள் (அகம் : 105 : 6)

ஈன் + இல் > ஈனில் : பிள்ளைப் பேற்றுக்கான அறை, மகப்பேற்று அறை, பறவை முட்டையிடுவதற்கான கூடு.

சூல் முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர் கரும்பின் நாகு வெண்பூக் கொழுதும் (குறுந்தொகை : 85:3)

ஈனு > ஈன் ஈன் + அம் > ஈனம் > இனம்
(அம் என்பது ஒரு சொல்லாக்க ஈறு போல் பொதுப்படத் தோன்றினும் அடிப்படையில் ஆர்ந்த பொருள் வழிப்பட்டது! **உம்** என்பது சேர்க்கைக் கருத்து வேர்களில் ஒன்று! இவ்வொன்றுகைக் கருத்தின் அடிப்படையை இது இணைப்பிடைச் சொல்லாக நின்று வழங்கும் உம்மை வகைப் பாங்கு விரிவுஆர்வுகளிடையே பரக்கக் காணலாம்! எண்ணும்மை முதலாக ஐயவும்மை ஈறாகவுள்ள எண் (எட்டு) உம்மைகளின் ஆளுமையோ வலியதும் பாரியதும் ஆகும்! **உம்** என்பதே **ஓம்** என்றாகிப் பின்னர் **அம்** எனும் சேர்க்கைக் கருத்து ஈறாகத் திரட்சியைக் குறித்துப் பெருமைப் பொருள் தரும் பின்னொட்டு (augmentative suffix) -

ஆகச் சொல்லாக்கங்களிடையே விரிவார்ந்துள்ளது. இவ்வகைமையிலேயே ஈனப்பெற்ற பெருந்தொகுதிக்கும் பொருந்தி வருகின்ற ஈறாக நின்று, ஈண்டு ஒட்டி உறவார்கின்றது!)

ஈனம் > இனம் : ஈனப்பெற்ற பிள்ளைகளின் தொகை.

(**இய்** என்னும் பிரிவுக்கருத்தின் (பிரிவுறுகைக் கருத்தின்) வேர் வழியே ஈய், ஈன் முதலாகிய பல சொற்கள் தோன்றியுள்ளன என்னும் சொல் வரலாற்றைக் கண்டோம்! அதே கருத்துப் போக்கிலேயே **பிள்ளை** என்னும் சொல்லுந் தோன்றியுள்ளது என்னும் உண்மை, ஈண்டு ஒப்புநோக்கிக் கருதிப் பார்த்தற்குரியது.

விய் : (பிரிவுக் கருத்து வேர்) பிரிவுக்கருத்து அகலக் கருத்திற்கு வழிவகுத்தது.

காண்க: **வியல் என் கிளவி அகலப் பொருட்டே**

(தொல். சொல். உரி:66)

விய் > வியல் > வில். (வில் > விள்)

விள் > விளி = பிரி

விளிந்தார் = பிரிந்தார், இறந்தார் (குறள் :143)

விளியும் = கழியும், நீங்கும் (குறள் : 1202)

விளியாது = நீங்காது (குறள் : 145)

விள் > விண் + து > விண்டு = பிளந்து

விள் > பிள். (வகர பகரத்திரிபு)

பிள் > பிள் + (ள்) + ஐ > பிள்ளை = தாயினிடமிருந்து பிரிந்து புறம்வந்த மகவு (குழவி, சேய்)

(**பிள்ளை** என்பது ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்குமாக ஒருசேர ஆளப்பெற்ற பொதுச்சொல். ஆண்பிள்ளை என்பது **ஆம்பிள** என்றவாறான கொச்சை வழக்கிலும் பெண்பிள்ளை என்பது **பொம்பிள** என்றவாறான கொச்சை வழக்கிலும் நிலை கொண்டுள்ளமையில் இவ்வுண்மையை உணரலாகும்!)

பிள்ளை > (Latin) filius : son filia : daughter (latin) > (English) filial: மகன் / மகள் சார்ந்த குறிப்பிட்ட பெற்றோருக்குப் பிறந்த குழந்தையிது என்னும் நிலையுண்மை. (Eng) filicide : குழந்தைக் கொலை)

பத்துப் பிள்ளைகள் - பதினாறு பிள்ளைகளெனப் பெற்றெடுத்து வளர்த்து நிலை நிறுத்திய தாயரின் - (தந்தையரின்) காட்சிகள் - இன்றைக்கு முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முந்தைக்கு நடைமுறை வாழ்வியல் உண்மைகள்! இவற்றிற்கும்

முற்பட்ட பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இத் தொகை இன்னும் அதிகமாக இருந்திருக்க மிகவும் வாய்ப்புண்டு!

ஒரு குடும்பத்துள் ஒரு தாய் தந்தையர்க்குப் பிறந்த பிள்ளைகளின் ஒட்டுமொத்தத் தொகையையே இனம் என்னும் சொல் குறித்தது என்னும் உண்மையை, இச்சொல்லே இனம் குறிக்கின்றமையை வேர்வழி ஆவணப் பதிவுகள் உணர்த்துகின்றன! ஒரு குடும்பத்தில் பிறந்த மற்றப் பிள்ளைகளின் தொகுதியும் இதனுள் பின்னர் அடங்கியுள்ளது! இப்போங்குமுறை - குடும்பத்தொடு மரபுத்தொடர்புடைய மற்றைய உறவுக் குடும்பங்களின் பிள்ளைகளையும் தொடர்ந்து இணைத்துள்ளது. சுற்றம் என்றவாறு சுற்றிச்சூழ வாழ்ந்து வந்த -, தொடர்புடைய இனவுறவுக் கட்டும், இனம் என்ற சொல் கொண்டே சுட்டப்பெற்றுள்ள ஆவணப் பதிவுகளும் இவ்விடத்திற் கருதத்தக்கன!

இனம் = சுற்றம். இனம் > இனன் (மகர, னகரத் திரிபு)
(ஒ.நோ:திறம் > திறன். அறம் > அறன். உரம் > உரன்)

இருங்கிளை இனன் ஒக்கல் கருந்தொழில் கலிமாக்கள்
(பட்டினப்பாலை:61-62)

இனன் ஆகிலியர் *(புறம் : 29:12).*

குன்றா இனனும் அறிந்தியாக்க நட்பு *(குறள் : 793)*

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் *(குறள்: 1158)*

இனம் : உற்றார்.

இனம் போன்று இனமல்லார் *(குறள் : 822:1)*

இனத்து ஆற்றுதல் : இனத்தாரோடு கலந்து இயங்குதல் *(குறள்:568:1)*

இனம் : ஒத்த தொழில் செய்யும் வகைமையினர்.

இனக் களமர் *(பொருநராற்றுப் படை:194).*

இனம் = குலம்.

விலை வேண்டார் எம் இனத்து ஆயர் மகளிர் *(கலி:103:71)*

குலம் > (கூட்டம்) **இனம் காக்கும் வேழம்** *(கலி:25:9)*

விலங்குக் கூட்டம் **களிற்றினம்** *(மதுரைக் காஞ்சி : 242).*

வெருகினம் *(குறுந்: 139:2)*

பறவைக் கூட்டம் **இனநாரை** *(பொருந : 204)* இனமயில் *(நற்:248:8)*

வம்ப நாரை **இனன்** ஒலித்தன்ன (அகம்:100:14)
பிற உயிரிகளின் கூட்டம். **இனமீன்** (அகம்:30:2)
இனவண்டு (முல்லை:3)
இனம் : ஒட்டு மொத்தக் கூட்டு ஒன்றில், இவை இன்ன பகுதி சார்ந்தன என ஒரு தொகுதியை வகை பிரித்து, அதனையும் **இனம்** என்றவாறே தொகுதிப்பொருள் சுட்டும் வழக்கமும் எழுந்தது.
இனம் : வகைத் தொகுதி, வகை
ஒற்றிடை இனம் மிகா மொழியுமாருளவே (தொல். எழுத். குற்றியலுகர : 7)
இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க்கொடை (தொல். சொல். கிளவி:18:1)
ஈன் > ஈன் + அம் > இனம் : ஒரு பொது முந்தையர் வழியில் அதாவது ஒரு பொதுக்கால் வழியில் (By one common descent) தோன்றி மிகப் பல குலமரபினராகப் பிரிவெய்தியுள்ள மரபுக் கூட்டமே **இனம்** என்பதாகும்.
ஈன(ம்) > இன(ம்) > (Greek) genea:
1. race (=இனம்)
2. generation (இனமரபு / வழிமரபு)
3. offspring (கான்முளை, கான்வழி வழித் தோன்றல்)
ய > ஜ : திரிபு
(ஓ.நோ: பண்ணியம் (பண்ணப்பட்ட பொருள்) > வண்ணியம் > (ப > வ) வண்ணியன்: பண்ணப்பட்ட பொருள்களை விற்பனை செய்பவன். வண்ணியன் > வணியன் > வாணியன்.
(காண்க : வாணியன்பாடி (இன்று, இது வாணியம்பாடி).
வணியன் என்னும் சொல்லினின்றே சமற்கிருதத்தில் Vanij என்னும் சொல் திரித்துக் கொள்ளப் பெற்றுள்ளது. இருக்குமறை காலத்திலேயே இத் திரிபு பதிவெய்தியுள்ளது.
வணிய(ன்) > Vanij அடி > (யதி) > Jati அகம் > யக(ம்) > jaga, jagat யோகி > jogi இயக்கி > ஜக்கி.
இயக்கி அம்மை > (தெலுங்கு) ஜக்கம்மா.
தொட்டியர் வழிபட்டுவரும் நாட்டுப்புறச் சிறுதெய்வம்
யாமம் (தமிழ்) > ஜாமம். யாழ்ப்பாணம் > Jaffna
(சமற்கிருதம்) yatha > (Hindi) jatha : (இரட்டை)
இவ்வகை வகைமை போன்ற யகர ஜகரத்திரிபே, கிரேக்கத்திலும் பண்டையில் நேர்ந்துள்ளது.

[ய > ஜ-திரிபு போன்றதே, (ய > க) - திரிபும் ஆகும்.
காண்க : நடி + ஐ > நடிகை > நடிகை, நடியன் > நடிகன்
குடி+ஐ குடியை > குடிகை
வாணியன் > வாணிகன்
வாயில் > (கன்னடம்) பாகிலு
பயின் (=பசை, அரக்கு) > (கன்னடம்) ஹகினு]

ஈன்-ஈனம் > இன(ம்) Greek : Genea
(Greek) genealogia = trace or pedigree : (கால்வழி, குடிவழி, கொடிவழி) > (Late Latin) > (old French) > (Middle English) > (English) genealogy
(genealogist, genealogize)
[(Greek) genealogia > (Latin) geneologia]
இன(ம்)> (Greek) genos: 1. race (இனம்), stock (இனத்தொகுதி) Kin (உறவுத் தொகுதி), direct descent (நேரிடைக் கால்வழி, நேரிடை மரபுவழி),

2. offspring (கான்முளை, வழித்தோன்றல்) (even of a single descendant)

3. (அ) generally race, of beings (உயிரிகளின் இனம்)
(ஆ) clan, house, family (குலம், இல்லம், குடும்பம்)
(இ) tribe (குக்குலம்)
(ஈ) caste (சாதி)

4. Gender (பகுப்பு, பால்)

5. Class, sort, kind (வகைப்பிரிவு, வகுப்பு, இனவகை)

(Greek) genos > (Latin) genus = birth, descent, origin, a race, stock (p :810, LAT. Dic) (GreeK) genarcheo.

[ஈன் >ஈன(ம்) >இன(ம்)> gen]

[அரசு > archeo]=

1. to be the ancestor of the human race
2. Ruler of created beings

(Greek, genos > (Latin) genus > gens = a race or clan embracing several families united together by a common name and by certain religious rites.

(ஒன்றன் பொதுப் பெயராலும் - குறிப்பிட்ட வழிபாட்டுச் சடங்குமுறைக் கடைபிடிப்பு வழியாலும் பொருந்தி நிற்கும் மிகப் பல்வேறு குடும்பங்களின் ஒருங்கமைவுத் தொகுதியாகிய இனக் கூட்டம் அல்லது குலம்) (p:808. LAT. Dic)

[காண்: பக்கங்கள் :343, 344. A Greek - English Lexicon : Henry George Liddle and Robert Scott. - பக்கம்: 806 A Latin Dictionary:Lewis & Short]

ஈன் >ஈனம் > இன(ம்) > (Greek) genea + genesis : generation, production, coming into being, creation (:all created beings)

(பண்டைய (குருத்துவ) மோசசு பெருமான் எழுதிய படைப்பாக்க வரலாறு (The history of the creation) என்னும் முதல் திருப்பொத்தகத்தின் பெயரும் "genesis" என்பதுவே)

ஈனம் > இன(ம்) > (Greek) genea : race, kind, offspring >(German) pan-gen :ultimate unit of heredity.

(தமிழ்) பல் >பல. பல் >பன் (பல் + நாடு) > பன்னாடு. பன்மொழி. (<பல்+மொழி) பல் >பன் > (Greek) Pan = all

பன், ஈன் (இன(ம்) ஆகிய அடிப்படைத் தமிழ்ச் சொற்களின் - கிரேக்கத் திரிபுச் சொற்களாகிய pan-genos என்பவற்றினின்றே தியுத்தானியமொழிகள் வகைக்குட்பட்ட செருமன் மொழியிலும் **pan gen** என்னும் கூட்டுச் சொல் வழக்கெழுந்தது. அக்கூட்டுச் சொல்லுள் பின்னமைந்துள்ள gen என்பதனின்றே **gene** என்றவாறு **மரபி** அல்லது மரபுருவைக் குறிக்கும் புத்தம் புதிய அறிவியற் கருத்துச் சொல் - அண்மையில் கடந்து சென்ற இவ்விருபதாம் நூற்றாண்டிலேயே வழக்கில் வந்தது!

(Greek) genos > (Latin) genus (> genrare) > gener > (Roman) genero> (Italian) gendre > (Spanish) genero > (old french) Genders > (Middle English) gender > (English) gender (பகுப்பு) பால்

(காண்க: ஆண்பால், பெண்பால், பலர்பால், பலவின் பால்)

(old French) gendre > (Modern French) genre > (English) genre.

ஈன், இனம் என வரும் நம் செந்தமிழ் மொழிக்குரிய வகைமைச் சொற்களினின்று தோன்றிய கிரேக்க இலத்தீன் தியுத்தானிய வகைப்பட்ட பல்வேறு இந்திய - ஐரோப்பிய மொழித் திரிபுச் சொற்களின் வழியே, ஆங்கில மொழி வாங்கி உட்கொண்டுள்ள இவ்வகை முறைச் சொற்கள் நூற்றுக்கும் மேற்பட்டன.

அவற்றுள் சில இவை:

(Greek) genos (=Kin) genes > (French) gene > (English) gene. oxy-gene> oxygen. nitrogene > nitrogen, endo-gen> endogen. exogene > exogene.

மேலுங்காண்க : heterogeneous, homogeneous, Genus > (L) gener > (Eng) gener, ate generation

(L) gener > (French) generigue > (Eng) generic belonging to genus, general.

(Greek) genos > (Latin) genus = race, kind

[(தமிழ்) > Indo-European base (?) gen-gon-gn-]

(Gothic) Kuni > (Old Norse) Kyn > (Old High German) Chunni > (Dutch) Kunne > (old Saxon) Kunni > (Old Frisian) Kin, Ken > (Old English) cyn (a) > English) Kin = race, family, class, kind (காண்க: kith and kind)

Kin.> (German) Kin chin : Diminutive of kind, child (Kinchin : boy, girl, child) (German) kindgarten > kinder garten = children's garden.

(குழந்தைகளுக்கான பயிற்றுப் பள்ளி) (Froebel's method)

மேலும் இவ்வகையிலாகத் தோன்றிய ஆங்கிலச் சொற்களுள் சில : gendarme gendarmerie, general, generable, generative, genetotrophic, genic, genital, genetic engineering, genetics, genitive, genitor, genome, genophobia, genotype, genteel, (gentleman) gent, gentile, gentility, generous, progency...

கிரேக்க இன வழி வந்த பார்ப்பனர்கள், இம் மண்ணகத்துள் புகுந்தபோது genos என்னும் கிரேக்க வடிவத்தின் அடிப்படைகளையே தம் நாடோடியர் மொழியிலும் கொண்டிருந்தனர்! தமிழ்ச் சொல்லாகிய இன(ம்) (ஈன்) என்பதன் கிரேக்கத் திரிபே **gen** என்பது. இதுவே, வடமறை மொழியுள் **Jan** என்றவாறு சற்றே திரிபெய்தியுள்ளது.

(Skt) Jan : (Rig veda, Adharva veda) : பிறப்பு, கருவுயிர்ப்புறு, உருவாக்கு, பிறத்தற்குக் காரணமாயிரு, வளர்த்து, வளர்.

Jana : உயிரி, வாழும் உயிரி, மாந்தன், ஆள்

Janana : பிறப்பு, உருவாக்கம்

Janman : பிறப்பு

Genos என்னும் கிரேக்க வடிவத்தினின்று இலத்தீனத்தில் சற்றே genus திரிபெய்திய **Genus** என்னும் வடிவத்தின் சாயலிலேயே **Janus** என்றவாறான வடிவைப் பார்ப்பனர்கள்

பின்பற்றினர். (Sanskrit) Janus : பிறப்பு, உருவாக்கம், கான்முளை, கான்மரபு. (R.V.: 7:58,2). வகுப்பு, வகை, (R.V.2:42:1) [பக்கம் : 411. A Sanskrit - English Dictionary - Monier Monier Williams]

"Janas" என்றவாறு பயன்படுத்தப் பெற்ற சமற்கிருதச் சொல்லாட்சி, **genos** என்னும் கிரேக்கச் சொல்லினின்று தோன்றிய மெல்லிய திரிபொலிப்புக் கொண்டதாகும். [காண்க: R.V :2:2,4]

இவை யாவும் - நம் இனம் ஈன்ற மொழியில் உருவான **இனம்** எனும் சொல் ஈன்ற அடிப்படைக் கரு விளைவுகள் ஆகுவன! இவை போலும் பல்லாயிரம் உண்மைகளும் அகத்தே உள!

பழங்குடி *(மலைபடு:479)* முதுகுடி *(தொல். பொருள் :3:77:14) (கலி:105:2) (புறம்:58:5)* - நீள்குடி *(அகம்:54:16, 71:17)*-தொல் குடி *(முருகு:178) (கலி:105:3) (அகம் 290:8) (புறம்:202:14, 289:4, 353:11)* - தொல்லிசைக் குடி *(கலி:104:5)* - நல்லிசைக் குடி *(பதிற்றுப் பத்து : 81.12)*- வீவில் குடி *(கலி:104:5)* (வீவு = அழிவு. (= அழிவு அற்று அறாது தொடர்ந்து வரும் குடி)... நம் தமிழ்க் குடியாகிய தமிழினம் தொன்று தொட்ட மீமுது பழமையுடையது என்னும் இவ்வகையிலான தெளிந்த கருத்துணர்வு, இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னீடாக வாழ்ந்த நம்மவர்க்கு இருந்தது!

வாழ்க்கை வாழ்தற்கென அதாவது பிழைப்புக்காக வேறு ஒரு தேயத்திற்குச் சென்று வாழவேண்டிய தேவையே இல்லாதபடி, ஈண்டேயே இயற்கை விளைவும், உழைப்பு முறையும் ஒன்றோடு ஒன்று ஒத்துச் செழிப்பெய்தியிருந்தன! **பதியெழுவு அறியாப் பழங்குடி** என்றவாறு நம் தமிழினத்தைப் பற்றிப் பதிவு செய்துள்ள இளங்கோ அடிகளின் வரலாற்று ஆவண வரியும் ஈண்டு ஆழ்ந்து கருதுதற்கு உரியது. *(சிலம்பு : 1:15)*

இத் தமிழினம் - ஒரு தங்க இனம்!... இத் தமிழ்க்குடி - ஒரு பொான் குடி!... என்றவாறான ஒரு மாசற்ற இனப்பாசம் அல்லது இனவொருமை ஒர்மை, நம் திருவள்ளுவர் பெருமானுக்கு இருந்தது! இது, உட்பகையால் படிப்படியாக தேய்க்கப்பெறுகின்றதே என்றவாறு நெஞ்ச அவலத்தோடு கதறித் துடித்தவர், அவர்! **அரம் பொருத பொன் போலத் தேயும் உரம் பொருது உட்பகையுற்ற குடி** என்பது, அவரின் எச்சரிக்கை மொழி! *(குறள்:888)* **இந்தக் குடி, ஒரு**

குன்றாத பெருவிளக்கு!, **இன்று இது சோம்பேறிகளின் ஒய்வுக்கூடாரமாக ஒடுங்கிப்போய்க் கொண்டிருக்கின்றதே!** என்றவாறு குமுறிக் குமைந்து நொந்துலைந்தவர், அவர். **குடி யென்னும் குன்றா விளக்கம் மடி யென்னும் மாசூர மாய்ந்து கெடும்** (குறள்: 601) என்பது, இதற்கென அவர் அரற்றிய அரவக் கூக்குரல்!

உட்பகை நீங்கி ஆர ஒன்றும் ஆக்கவுணர்வும்-சோம்பல் தவிர்த்து வினையாண்மைக்கென எழும் ஊக்கவுணர்வும் ஆட்சியும் எய்த வேண்டும் என்பதற்காகவே - திருக்குறள் என்னும் மா மறையை யாத்தளித்தார்! **குடிசெயல் வகை** என்னும் அவரின் அதிகாரக் கருத்துரைகள்-நாம் அன்றன்றும் ஊன்றிக் கற்று அவற்றை ஒன்றொன்றாய்ச் செயற்படுத்தி மீட்சி பெற வேண்டும் என்பதற்காகவே யாத்துச் செறித்தளித்த பொதிவார்ந்த மதி - மந்திரங்கள்!

நாமோ, படிக்கவே மாட்டோம்! கடை பிடிக்கவே மாட்டோம்! என்றவாறான ஒட்டாரவுறுதியொடு கவலாது கவிழ்ந்து கிடக்கின்றோம்! நம் மொழி தமிழ் மொழி! (நாம் தமிழர்!) நம் இனம் தமிழினம்! நம்நாடு தமிழ்நாடு... என்னும் முந்நிலைத் தெளிவுக் கொள்கை, நம்மவர் ஒவ்வொருவருக்கும் நெஞ்சக் கருத்துகளில் குடிகொண்டாக வேண்டும்! இது வெறியன்று! உரிய நெறி! **இனம்** என்பதனையே **சாதி** என்றவாறான பொருளிலும் வரலாற்று அறிவில்லாது இன்று பயன்படுத்துகின்றோரையும் நாம் பார்க்கின்றோம்! **சாதி** என்னும் பண்டைய செந்தமிழ்ச் சொல்லுக்குக் கூட்டம் (-திரள்) என்பது மட்டுமே பொருள் ஆகும்! குலப்பகுப்பைக் குறித்தற்கென இதனையேற்றிக் கொண்டாடுவது, நம் மடமையை மன்றாட்டும் பேதைமையே ஆகும்.

குலப் பகுப்பு சுட்டி, அவற்றுள் தாழ்ச்சி உயர்ச்சி கூறிக் களிக்கும் எக் கொடியவனையும் இன்னும் - இன்னும் நாம் விட்டுவைத்தல் ஆகாது! **சாதிகள் இல்லையடி பாப்பா! இதில் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல், பாவம்!** என்றவாறான தாலாட்டு மெத்துத்தனப் போக்கு மிக மிகக் கரவும் - காழ்ப்பும் - கயமையும் நிறைந்தது! **சாதிகளே இல்லையடி பாப்பா! இதில் தாழ்ச்சி உயர்ச்சி சொல்வோன் சாவான்!**

என்றவாறான நெருப்பெழுச்சி, நம் நெஞ்சில் மூண்டாக வேண்டும். **ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி?** என்பது, நமக்கு ஏதோ ஒரு அறவீறு சான்ற அரிய அறிவுக் கேள்வி போல் தோன்றலாம்! **அட, மட மூட முட்டுக்கட்டைப் பேதையே! நீங்கள் ஆயிரம் சாதிகளாகப் பிரிந்து நார்நாராகக் கிழிந்து நைந்து கிடந்து நாறுவதால்தானடா அயலான் இங்குவந்து ஆர அமரக் குந்திக் கொண்டு வயணமாய் வாய் துறுக்கின்றான்!** என்றவாறு தெளிவுறுத்துவதற்கு மாறாக - **இப்படி நுண்ணுட்பமாக ஏய்க்கின்றானே இம்மா மாவுப் புலவன்!** தெளிவுணர்வுதான் நமக்கு முற்பட வர வேண்டும்!

இத்தமிழக எல்லையுள் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பார்ப்பனர் பலர் நம் இனத்தையே மல்லார்க்கக் கிடத்தி மார் மீதேறிமடக்கி அமர்ந்து கொண்டே ஏதோ பகையை அழிக்க வந்தவனைப் போல அமரச் சமர்செய்து கொண்டிருக்கின்றார்! ஒவ்வொருவரும் ஒரு தனி நிறுவனம் போலவே இவ்வகையிற் செயற்படுகின்றார்! இப்போது, அந்தணர் வரலாறு வேறு எழுதிவிட்டு, **மண்ணின் மைந்தர்கள் நாங்கள்** என்றவாறு திருப்பியடிக்கின்றார். **அயலவர்களிற்** சிலரும் ஆங்காங்கும் இயன்றமட்டும் இவ்வகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர்! இவ்வகைக் குறும்புக் குசும்புகளைத் தொடர்வோரை-இம் மண்ணின் இனமான ஓர்மைசான்ற கூட்டம் தெளிவாரப் பட்டியற்படுத்தி வைத்துவர வேண்டும்!

நம்மினத்திலேயே படித்த பையல்களிற் சிறும்பாலோர்க்கு சாதிச்சீழ் வேறு, நெஞ்சிலும் தலையிலும் கோத்துள்ளது. பகைவர்க்குப் பாலங்கட்டி வைப்பது போன்ற நிலையுடையது. இது உரிய அறுவை செய்து அவர்களைத் தேற்றி நிறுத்த வேண்டிய கட்டுப்பாடும் நம் முன் உள்ளது.

உரிய இக்கட்டுக் காலத்தில் - இடர்ப் போழ்தில் - அளுர்க் காலத்தில் துன்பக் காலத்தில் - காப்பாற்றியுதவும் ஏமப்படகு (Life-boat) போன்றது, **இனம்** ஆகும் என்றார், வள்ளுவப் பெருந்தகை! **இனம் என்னும் ஏமப்புணை** என்பது, அவரின் வாழ்மொழி! (குறள் : *1164*) (ஏமம் >சேமம் = காப்பு. சேமம் >(சமற்கிருதம்) க்ஷேமம் = காப்பு, நலம்) (**இனநலத்தின் ஏமாப்பு** என்னும் தொடர் மொழியும் ஈண்டுக் கருதுதற்குரியது (குறள்: 459).

தமிழகத்தில் ஈராயிரம் ஆண்டுகளாக வாழும் வந்தேறிய பார்ப்பனர்களையும் படிபடியே ஈண்டு ஈண்டிவந்து இறங்கி இடங்கொண்ட பிந்திய பார்ப்பனர்களையும் சில நூற்றாண்டுகளாக இங்கு வந்து தங்கிக் குடியேறி வாழும் அயல் மாநிலத்தவர்கள் பலரையும் - பல்வேறு மொழிச் சிறுபான்மையினரையும் பகைமைப் படுத்திப் பார்க்கும் எதிருணர்வு-உண்மையான தமிழினத்தவன் எவனுக்கும் எழாது! இது, பண்பாட்டுச் செழுமை வாய்ந்த மண்! கண்ணுக்கு எதிரிலேயே, நேருக்கு நேராகவே பெயக்கண்டும் நஞ்சுண்டு அமையும் நாகரிக முன்னோரின் மண்! புலம் பெயர் மக்களிடம் நலம் விழைந்து குலவி உயிர்க்கும் நன்னெஞ்சம் தமிழனுடையது! புலம் மக்கள் பால் கலந்தினிது உறைந்த பண்டை வரலாற்று இலக்கியப் பண்பாட்டுக் காட்சிகளிடையே நம் முன்னையோர் கடைப்பிடித்து வந்த நடைமுறை வாழ்வியல் - நமக்கும் இன்றும் என்றும் ஒப்புதலே! (**புலம் பெயர் மக்கள்** என்றவுடன் நம் யாழ்ப்பாணத் தமிழர்களோடு இந்நிலையை எவனும் முடிச்சு போட்டு விடலாகாது. அவர்கள் - நம்மவர்கள்! நம் இனத்தவர்! மற்றுமொரு சேய்த் தமிழகத்துச் சீர் தமிழர்கள், அவர்கள்! நம் மொழியானர்! நம் குருதியானர்! நம் பண்பாட்டினர்! நம் நாகரிகப் பழைமையர்! அவர்களுக்கும் இம்மண்ணகத்து ஈடான உரிமை உண்டு! காலத்தின் பிறழ்வோட்டத்தில் இக்கால் சிற்சில தடங்கல்கள் தடைக் கற்களாகி இடையிற் கிடக்கின்றன! அவ்வளவே!)

தமிழகத்தில் தமிழைத் தம் தாய்மொழியாகவே கொள்ளாமல், தமிழரோடு கரைந்துவிடாமல், உள்ளம் ஒன்றி ஓர்மைபடாமல் அவரவர் மொழியையும் (வீட்டில் தம்மொழி-வீதியில் தமிழ்மொழி என்றவாறான ஒட்டாரக் கோட்பாட்டோடு-) அவரவர் பண்பாட்டையும் சடங்குக் கருமங்களையும் அவரவர் மாட்டில் கடைப்பிடித்துவரும் அயலவர்களான யாவரும் தமிழக மக்களே! எள்ளளவும் - எள்ளின் நுனிமூக்கு அளவும் இதில் நமக்கு மறுப்பில்லை! எதிர்ப்புமில்லை! அதேபோது, அவர்கள் தமிழர்கள் அல்லவே அல்லர்!

நம் தமிழினம் பழமையும் பெருமையும் நாகரிகமும் பண்பாடும் திறமும் மறமும் வாய்ந்த மிகப் பெரும் புகழ்ப் பேரினம்! இப் பேரினமே தன் மொழிவழியாய் உலக அறிவுக்கே ஊற்றுக் கண்ணாயிருந்து! இருக்கின்றது! தொடர்ந்து இருக்கும்!

இவ்வுண்மையோ - ஆழத்தில் ஆழ்ந்து அகப்பட்டுக் கிடக்கின்றது! இது வெளிவரும் போது எங்கும் இங்கு ஒளி வரும்!

இனநலம் எல்லாப் புகழும் தரும் என்பது வள்ளுவமந்திரம்! (குறள் : 457)

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின் கண் ஐயப்படும் என்பார், நம் முந்தைத் தந்தை வள்ளுவ முதுமான்! நலம் என்பது, இங்கு மொழிநலம், இனநலம், நாட்டு நலம். இவற்றுள் நம் இனத்தான் ஒருவனுக்குப் பற்றின்மை காணப்பெற்றால் அவன் பிறப்பு முறையிலேயே ஏதோ ஓ... ஒரு கோளாறு என்றவாறு அவர் கான்று உமிழ்ந்து விட்டுப் போனது - மனத் திரைப்படத்தில் காட்சியாகவே ஓடுகின்றது! (குறள் : 958).

(ஆய்வறிஞர், தலைவர் - தூயதமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் துறை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்)

✹ தமிழில் கையெழுத்துப் போடுவதைக் கூடச் செய்யமுடியாமல் தமிழ் மொழிச் சிறப்புப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவன் - முட்டாள்.

✹ தாய் மொழித் தமிழில் முன்னெழுத்தைக் (தலைப்பெழுத்தை) கூடப் போட முடியாமல் ஆங்கிலத்தைக் கலந்து இருமொழியில் எழுதிக்கொண்டிருப்பதற்காக வெட்கப்படாத ஒரே இனம் தமிழினம் தான்.

✹ உலக மொழிகளில் 189 இல் தாய், தந்தை, அப்பா, அம்மா, பா, மா என்பவைப் பெற்றோரைக் குறிக்கும் சொற்களாக உள்ளன. ஆம் தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்.

5. வடக்கத்தி இந்தி; வாலாட்டும் மந்தி!

மா. செங்குட்டுவன்

வடக்கத்தி மந்தி வந்திங்கு வாலாட்ட
இடந்தர லாமோ? என்னருந் தமிழா!
சங்கத் தமிழிருக்கச் சந்தைமொழி, இந்தி
இங்குவர விடலாமோ? எழடா தமிழ்மறவா!
இந்தியத் தேசியம், எனச் சொல்லித் திணிக்கும்
இந்திமொழித் தேசியம், எதற்கடா நமக்கு?
தேசியமும் காந்தியமும், செந்தமிழை அழிப்பதற்கா?
மோசடியை நம்பாதே முனைந் தெழடா தமிழா!
பதவியைக் காப்பாற்றப் பக்த வத்சலனார்
இதயமின்றித் தமிழர்க்கே எதிரி யாகிவிட்டார்!
அடக்குமுறைச் சட்டங்கள் ஆகட்டும் தூள் தூளாய்!
ஒடுக்க நினைப்போரை ஒடுக்கிடவே கிளர்ந்தெழுவாய்!
காவல் துறையிலுள்ள காக்கிச் சட்டைகளை
ஏவி விடுகின்றார் இரக்கம் சிறிது மின்றி
துப்பாக்கிக் குண்டுகள் துளைத்து மாளுகின்றார்
தப்பிக்க வழியின்றித் தமிழ்காக்கும் வீரர்கள்!
மானத்தமிழ் மறவரெல்லாம் மாய்கின்றார் அந்தோ!
ஈனத் தமிழ்ப்பகைவர் இந்நாட்டை ஆளுவதா?
மாணவ மணிகளையும் மண்ணில் சாய்க்கின்றார்
ஆணவ ஆளவந்தார் ஆர்த்தெழுடா தமிழ்மறவா!
காக்கை குருவிபோல் கண்டதும் சுடுகின்ற
போக்கை முறியடிக்கப் பொங்கி எழு தமிழா!
பாதுகாப்புச் சட்டத்தைப் பாய விடுகின்றார்
ஏது தமிழர்க்கு இந்நாட்டில் பாதுகாப்பு?
செந்தமிழ் காத்திடச் சிங்கத் தமிழர்பலர்
வெந்தணலில் வேகின்றார், வீறுகொண்டு எழுதமிழா!
நாளை இந்த நாட்டை ஆள இருக்கின்ற
காளைய ரெல்லாம் கடுஞ்சிறையில் வாடுகின்றார்
பாளையங் கோட்டையிலே பைந்தமிழ்க் கலைஞர்
ஆளரவ மில்லா அறையினில் சிறைப்பட்டுத்
தமிழைக் காத்திடத் தவங்கிடக்கும் காட்சி!

இலக்கிய உலகின் இணையற்ற மறத்தமிழர்
இலக்குவ னாரும் இன்று சிறையில்
ஆதிக்க இந்தியை எதிர்த்து முழங்கிய
ஆதித்த னாரும் அடைபட்டார் சிறையில்
இந்தக் கொடுமை இனியும் நடக்கலாமோ?
செந்தமிழ்ச் சிங்கங்காள் சிலிர்த்து எழுவீர்காள்.

(1965 ஆம் ஆண்டு மூண்ட இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தின் போது மா.செங்குட்டுவன் எழுதி வெளியிட்ட கவிதை)

---

* மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்தில் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது நீக்கப்பட்ட வரிகள்,

“கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும்
துளுவும் உன் உதிரத்துதித்தெழுந்து ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையா உன்”

* சித்தர்கள் நூலில் சொல்லப்பட்ட **சரக்கு வைப்பு** என்பது செற்கையாக ஒரு வேதிப்பொருளை உற்பத்தி செய்வது. அதாவது வேதியல் தெரிந்த பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாம்.

* நல்ல பாம்பின் விஷம் அர்சனிக் என தற்போது சொல்லப்படுகின்ற வீரம், பூரம் போன்ற விடப் பொருள்களை மருந்தாகச் செய்து பயன்படுத்தக்கூடிய வேதியல் அறிவைப் பெற்றிருந்தவர்கள் தமிழர்கள்.

6. தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வழிவகுத்த போராட்டம்

பழ. நெடுமாறன்

இந்தியா ஒரு நாடன்று, அது ஒரு துணைக்கண்டம் பல்வேறு மொழிவழித் தேசிய இன மக்கள் அங்கு வாழ்கிறார்கள் என்ற அடிப்படையான உண்மையை மறைத்து இந்தியாவை ஒரே நாடாகவும், இங்கு வாழும் பல்வேறு தேசிய இன மக்களை ஒரே இந்திய தேசிய இனமாக உருவாக்கவும் நிண்டகாலமாகவே முயற்சிகள் நடைபெற்று வந்தன, வருகின்றன. இந்தப் பின்னணியின் தொடர்பாகத்தான் இந்தியாவின் தேசிய மொழியாகத் தற்போது இந்தியையும் பின்னர் சமற்கிருதத்தையும் ஆக்கும் முயற்சி நடைபெறுகிறது. இம்முயற்சி ஒருபோதும் வெற்றிபெறப்போவதில்லை.

ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு அனைத்துத் தேசிய இனமக்களும் ஒன்றுபட்டுப் போராடினார்கள். உயிர்த்தியாகங்கள் செய்தார்கள், அந்நிய ஆட்சியின் அடக்குமுறைகளை இன்முகத்துடன் ஏற்றார்கள். இந்தி மொழி பேசுகிற தேசிய இனம் மட்டுமே நாட்டின் விடுதலைக்காகப் போராடவில்லை. அனைத்துத் தேசிய இனமக்களும் இணைந்து போராடியதால்தான் விடுதலைபெற முடிந்தது என்பதை இந்தி வெறியர்கள் உணரவோ, ஒப்புக்கொள்ளவோ இன்னமும் மறுக்கிறார்கள்.

1920 ஆம் ஆண்டில் விடுதலைப் போராட்டத் தலைமையை காந்தியடிகள் ஏற்றபோது ஓர் உண்மையைத் தெளிவாக உணர்ந்திருந்தார். பல மொழி பேசும் மக்களையும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டுமானால் அவரவர் மொழியில் அணுகியே ஈர்க்க முடியும் என்பதை உணர்ந்த அவர் காங்கிரசுக் கட்சியை மொழிவழி மாநில அமைப்புகளாகத் திருத்தி அமைத்தார். அவருக்கு முன்பு வரை ஆங்கிலேய ஆட்சியில் பலமொழி பேசும் மக்களைக் கொண்ட பல மாகாணங்களும் சுதேச

சமஸ்தானங்களும் கொண்ட ஓர் அமைப்பாக இந்தியா விளங்கியது. மொழிவழியாகத் திருத்தி அமைக்கப்பட்ட காங்கிரசுக்கட்சி விரைவில் வெகுசன இயக்கமாக மாறியது. ஆங்காங்கே தலைவர்கள் தோன்றி மக்கள் மொழியிலேயே பேசி மக்களை அணிதிரட்டினார்கள். விடுதலைப் போராட்டம் பல கட்டங்களில், பல வடிவங்களில் சூடு பிடித்தது. இதன் விளைவாக ஆங்கிலேயர் வெளியேற நேர்ந்தது.

விடுதலைபெற்ற இந்தியாவில் அனைத்து மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்கப்பட்டு சமச்சீரான வளர்ச்சியை அடைவதற்குப் பதில் இந்தி மொழிக்கு மட்டும் முதன்மை கொடுக்கும் போக்கும், பிறமொழிகளை இரண்டாந்தர மொழிகளாக்கும் போக்கும் தலை தூக்கின. அதைப்போல மொழிவழியாக மாநிலங்களைப் பிரித்தால் தேசிய ஒருமைப்பாடு சிதறிப் போகும் என்ற ஏகாதிபத்திய போக்கும் வளர்ந்தது. இந்த இருவிதமான போக்குகளை எதிர்த்துத்தான் மொழி அடிப்படையிலான கிளர்ச்சிகள் வெடித்தன.

முதலாவதாக மொழி அடிப்படையிலான மாநிலங்கள் வேண்டும் என்ற கிளர்ச்சி இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மூண்டெழுந்தது. பிரதமர் நேருவின் தலைமையிலிருந்த மத்திய அரசோ இந்த நியாயமான கோரிக்கையை ஏற்கப் பிடிவாதமாக மறுத்தது. இரண்டு, மூன்று மாநிலங்களை ஒன்றாக இணைத்து இந்தியாவையே ஐந்து பெரும் மாநிலங்களாகப் பிரித்துவிடவேண்டும் என பிரதமர் நேரு விரும்பினார். அந்த எண்ணத்துடன்தான் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களையும் இணைத்து தட்சிண பிரதேசம் உருவாக்க வேண்டும் என அவர் கூறிய யோசனையைத் தமிழகம் ஒட்டு மொத்தமாக ஏற்க மறுத்துவிட்டது. காங்கிரசுக்கட்சியின் சிந்தனையிலிருந்து ஆர்.எஸ்.எஸ். சனசங்கம் போன்ற இந்துத்துவா வாதிகளும் வேறுபட்டு நிற்கவில்லை. மொழிவழியாக மாநிலங்களைப் பிரிக்கக்கூடாது என்று, மாறாக. மூன்று அல்லது நான்கு மாவட்டங்களைக் கொண்ட நூறு சனபாத அமைப்புகளை இந்தியாவில் ஏற்படுத்திவிட வேண்டும், அனைத்தும் மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இயங்கவேண்டும் மாநில அரசுகளே தேவையில்லை என்றும், இந்துத்துவாவாதிகள் கூறினார்கள்.

இந்தியத் தேசியவாதிகளுக்கும், இந்து தேசியவாதிகளுக்கும் இடையே மொழிவழி மாநிலங்கள் கூடாது என்ற நோக்கத்தில் எத்தகைய வேறுபாடும் இருக்கவில்லை. ஏக இந்தியா என்னும் கோட்பாட்டில் இருவரும் அன்றும் இன்றும் ஒன்றுபட்டே இருக்கிறார்கள். இந்தியாவின் தேசிய மொழி இந்தி மட்டுமே இருக்க வேண்டும் என்பதிலும், இரு தரப்பினரும் ஒரே கருத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏக இந்தியவாதிகளின் ஆதிபத்திய கருத்துகளுக்கு எதிராகத்தான் மொழிவழி மாநிலப் போராட்டங்கள் நடந்தன. ஆந்திராவைச் சேர்ந்த பொட்டி ஸ்ரீராமுலு என்பவரின் உயிர்த்தியாகத்தின் விளைவாக தெலுங்கு பேசும் மக்கள் கொந்தளித்தார்கள், அவர்களுக்குத் தனி ஆந்திர மாநிலம் கொடுத்துத் தீரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வேறுவழி இல்லாமல் பிரதமர் நேரு அக்கோரிக்கையை ஏற்றார். அதைத் தொடர்ந்து மொழிவழியாக மாநிலங்களைப் பிரித்துத் தீரவேண்டிய நிலைமை உருவாகியது.

மொழிவழியாக மாநிலங்களைத் திருத்தி அமைத்த பிறகு அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் அரியணை ஏறத் தொடங்கின. இந்த இயற்கைவழிப்பட்ட போக்கினை இந்து வெறியர்கள் விரும்பவில்லை. அங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மத்திய-மாநில அரசு நிருவாகத்தில் ஆங்கிலம் அரசோச்சியதைப் போல, இந்தி அரசோச்ச வேண்டும் என்று விரும்பினர், அதற்கான நடவடிக்கையில் இறங்கினார்கள். இதன் விளைவாக இரண்டாவது மொழிப்போராட்டம் தொடங்கிற்று.

முதலாவது போராட்டம் அந்தந்த மொழிக்குரிய மண்ணை மீட்பதற்குரிய போராட்டமாகவும், இரண்டாவதாக அவ்வாறு மீட்கப்பட்ட மண்ணின் அரசோச்சும் மொழியாக மண்ணின் மொழியை ஆக்கும் போராட்டமும் வெடித்தெழுந்தன. தமிழ்நாட்டில் *1938* ஆம் ஆண்டிலிருந்து இந்திக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. சென்னை மாகாணப் பிரதமராக இருந்த இராஜாஜி கட்டாய இந்தி அரசாணையை *24.4.1938* இல் வெளியிட்டார். அதற்குக் கடும்

எதிர்ப்பு எழுந்தது. மறைமலையடிகள், ச.சோமசுந்தர பாரதியார், கி.ஆ.பெ.விசுவநாதன், உமா மகேசுவரனார் போன்ற தமிழறிஞர்களும், பெரியார் ஈ.வே.ராமசாமி, சௌந்தர பாண்டியனார், கே.எம்.பாலசுப்ரமணியம், செ.நெ.நாயகம், அறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சண்முகாநந்த அடிகள் போன்ற அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து இந்திக்கு எதிராகக் களம் இறங்கினார்கள். இப்போராட்டத்தில் நடராசன், தாளமுத்து இரண்டு இளைஞர்கள் சிறையில் மாண்டனர். இதன் விளைவாக இந்தித் திணிப்புத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

1946 ஆம் ஆண்டில் மீண்டும் கட்டாய இந்தித் திட்டம் கொண்டு வரப்பட்டது. பெரியார் தலைமையில் அறிஞர் அண்ணா தளபதியாக இருந்து இதற்கு எதிரான போராட்டத்தை நடத்தினார். ஏராளமானவர்கள் சிறை புகுந்தனர். எதிர்ப்பை சமாளிக்க இயலாத அரசு கட்டாய இந்தியைக் கைவிட்டது. *1963* ஆம் ஆண்டு இந்தியாவின் ஆட்சிமொழி இந்தி மட்டுமே என மத்திய அரசு அறிவித்தது. இதற்கு எதிராக அரசியல் சட்டத்தின் *17*ஆவது பிரிவை எரிக்கும் போராட்டத்தைத் தி.மு.க. நடத்தியது. அனைத்து மாவட்டங்களிலும் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடந்தது. ஏராளமானோர் கைதாகி சிறைத் தண்டனை பெற்றனர்.

1965 ஆம் ஆண்டு சனவரி *26*ஆம் தேதி முதல் இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியை அமுல்படுத்துவதென மத்திய அரசு அறிவித்தது. இதில் *1965* ஆம் ஆண்டு சனவரி *25* ஆம் தேதி கிளர்ந்தெழுந்த மாணவர் போராட்டம் தமிழக வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திற்று. தமிழ்மொழியைக் காப்பதற்காகக் கீழப்பழூவூர் சின்னசாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், அய்யம்பாளையம் வீரப்பன், வீராலிமலை சண்முகம், மயிலாடுதுறை சாரங்கபாணி ஆகியோர் தீக்குளித்தும் கீரனூர் முத்து, கோவை தண்டபாணி ஆகியோர் நஞ்சுண்டும் உயிர்த்தியாகம் செய்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் இராசேந்திரன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இப்போராட்டங்கள் நடைபெற்ற பல்வேறு இடங்களில் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடுகளின் விளைவாக *500*

சா.4.

பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். 5000த்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தப் போராட்டத்தில் மாணவர்களும் அவர்களுக்கு ஆதரவாக மக்களும் காட்டிய மனஉறுதியும் அஞ்சாமையும் இந்தி வெறியர்களைப் பின்வாங்கச் செய்தது. தமிழ்த் தேசிய எழுச்சிக்கு இப்போராட்டம் பெருமளவில் காரணமாக அமைந்தது.

தமிழ்த்தேசிய இனம் தனது மொழியையும் உரிமையையும் பாதுகாப்பதற்காக நடத்திய போராட்டம் தமிழர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாபெரும் போராட்டமாகும். இந்தப் போராட்டத்தில் மயிலாடுதுறை மன்னன்பந்தல், ஏ.வி.சி. கல்லூரியின் மாணவன் சாரங்கபாணி தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்த நிகழ்ச்சி மயிர்க்கூச்செறிய வைப்பதாகும். வாழவேண்டிய இளம் வயதில் தனது மொழியை வாழவைக்க அவன் தன்னைத் தானே அழித்துக்கொண்டான். அந்த மாவீரனின் நினைவைப் போற்றும் வகையில் அவனுக்கு நினைவுத்தூண் எழுப்புவது மிகச் சிறந்த பணியாகும். களத்தில் வீரத்தை நிலைநிறுத்தி வீழ்ந்துபட்ட வீரனைப் போற்றும் வகையில் நடுகல் நட்டு வணங்குவது தமிழர் மரபாகும். மாவீரன் சாரங்கபாணி நினைவாக எழுப்பப்படும் தூண் பார்க்க நேரும் ஒவ்வொருவருக்கும் வீர உணர்வையையும், தியாக உணர்வையும் ஊட்டுமாக.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன் - தமிழ்விடு தூது

செய்யுள் அமைப்பில் கிரேக்க மொழியினையும் இலக்கியப்
பெருமையில் இலத்தீன் மொழியினையும் வெல்ல வல்லது தமிழ்
- அறிஞர் வின்ஸ்லோ

உன்னுடைய தாய்மொழியைக் காப்பாற்றிக் கொண்டால்
உன்னுடைய தாய்நாட்டை எப்படியும் காப்பாற்றி விடலாம்
- ஏமன் டிவேலரா

விழா சிறக்க வாழ்த்துக்கள்

கேட்டீஸ் ஐ ரெடிமேட்டீஸ்

நாராயணபிள்ளை தெரு,
மயிலாடுதுறை.

சீனிவாசா சித்த மருத்துவ மையம்

பாலக்கரை அருகில், எண்.92, பட்டமங்கலத்தெரு,
அப்துல் ஜபார் நாட்டு மருந்துக்கடை மாடியில்,
மயிலாடுதுறை - 609 001.

தீராத தலைவலி, கண்புரை, ஆரம்ப புற்றுநோய், கல்லடைப்பு சதையடைப்பு, நீரடைப்பு, சர்க்கரைநோய், இரத்த சோகை, மஞ்சக்காமாலை, மாலைக் கண்நோய், சிறுநீரகக் கல் அடைப்பு நீக்குதல், மூட்டுவலி, மூலம், பவுத்திரம், குழந்தையின்மை, பால்வினை நோய்கள் மற்றும் மூட்டு தேய்மானம், சூரணம், லேகியம், தைலம், பற்பம், செந்தூர முறைகளைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படும். குழந்தைகள் மாந்தம், கணை, வலிப்பு, பிரலி வாய்வு நோய்களுக்கான சிகிச்சை மற்றும் மருந்துகள் அளிக்கப்படும்.

தினமும் காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை மாலை 4.00 மணி முதல் 9.00 மணிவரை மருத்துவம் பார்க்கப்படும். ஞாயிறு விடுமுறை.

இப்படிக்கு,

சீ. சண்முகம்,

பரம்பரைச் சித்தமருத்துவர். தொ. பே. 227321

7. மன்னன்பந்தலைத் தாங்கும் நினைவுத் தூண்

புதுவை. தமிழ்நெஞ்சன்

தமிழுக்காய் தன்னுயிரை ஈந்தமகன்
தான்கண்ட கனவுகளை நனவாக்க
தமிழ்மறவர் இருக்கின்றார் என்றெண்ணி
தமிழ்மான சாரங்க பாணியாரும்
தமிழ்மூச்சை விட்டதற்கு மகிழ்ந்திருப்பார்
தமிழ்காக்க சாரங்கபாணி போலத்
தமிழிளைஞர், மாணவர்கள் இன்றிருந்தால்
தமிழ்மொழியும் தமிழகத்தில் வாழ்ந்துவரும்

இந்தீயில் சாரங்க பாணியெனும்
இனவுணர்வு தமிழ்மறவர் சாம்பலானார்
இந்தீயும் இன்றுவரை அணையவில்லை
இனவுணர்வு மட்டுமிங்கே காணவில்லை
செந்தீயாய் தல்லநிமிர்ந்து வாழ்ந்திடாமல்
சொரணையற்றுக் கிடப்பதுவும் இழிவாகும்
முந்தியுள்ள மாணவர்போல் இன்றிருந்தால்
முத்தமிழைக் காத்திடலாம் என்றுமிங்கே.

தமிழ் வாழ்க! தமிழ்வாழ்க! என்று சொல்லி
தீக்குளித்தார் சாரங்கபாணி - அந்தத்
தமிழ்மொழியில் ஆட்சியில்லை ! அலுவவில்லை!
தமிழனவன் தமிழ்நாட்டை ஆளவில்லை
தமிழ்காக்க தமிழ்மறவர் இன்று வேண்டும்
தமிழின்றித் தமிழினத்தின் வாழ்வுமில்லை
தமிழுக்காய் வாழ்ந்தவரை மதித்திருந்தால்
தமிழினமும் தலைநிமிர்ந்து வாழ்ந்திருக்கும்

தன்மான சூடேற்ற வேண்டுமென்று
தன்னுடலில் தீவைத்துச் சூடுதந்தாய்
தன்மொழியை இழந்தயினம் வீழ்ந்துபோகும்
தாய்மொழியைக் காப்பதுவே மானமாகும்
இன்றுவரை உம்நினைவைப் போற்றுகின்றோம்
இனியுன்னை வரலாறாய்ப் படிக்க வந்தோம்
என்று வரை தமிழினமும் வாழ்ந்திருக்கும்
எம்நெஞ்சில் அன்றுவரை வாழ்வீர்கள்

தமிழ், தமிழர், தமிழ்நாடு தான்வாழ
தம்முயிரைத் தந்தசாரங்க பாணிவீரர்
தமிழுணர்வை மாணவர்கள் பெற்றிருந்தால்
தமிழகத்தில் இன்றுயேனோ காணவில்லை
தமிழ் அழிந்தால் தமிழினமும் தமிழ் நாடும்
தானழிந்து போகுமென்று எண்ணவேண்டும்
தமிழ்வாழ்வே தம்வாழ்வாய் எண்ணுகின்ற
தமிழ்மானம் தமிழருக்கு வேண்டுமென்றும்.

தமிழ்வளர்ந்த தமிழ்வாழ்ந்த தமிழ்நிலத்தில்
தமிழில்லை படிப்பதற்கு! பேசுதற்கு!
தமிழ்வாழ வில்லையென்றால் தமிழினமும்
தான்வாழ இல்லையென்று பொருளாகும்
தமிழ் மண்ணின் மைந்தர்கள் திரைப்படத்துத்
தீமைகளை வரவேற்று வீழுகின்றார்
தமிழ் செழித்த தமிழ்நிலத்தில் சாதிமதம்
தழைத்தோங்கி வருவதுவும் கேடாகும்.

செந்தீயில் தன்னுயிரை விறகாக்கிச்
செம்மொழியாம் நம்தமிழைக் காத்தவீரன்
முந்திவந்த முதல்மொழியாம் முத்தமிழை
மூச்சாக மாற்றிவிட்ட கொள்கைத் தீரன்
இந்திமொழி திணிப்பெதிர்த்து எரிதழலாய்
எரிந்திங்கே தமிழ் ஒளியைத் தந்தமாறன்
எந்தமொழி ஆனபோதும் திணிப்பென்றால்
எதிர்த்திடவே துணிவதுதான் வீரமாகும்.

மொழிப் போரில் முன்நின்று தம்முயிரை
மானமுடன் தமிழ்காக்கத் தந்தவரை
விழிபோலக் கருதாது ஒப்போலை
வாங்கிடவே பயன்படுத்தித் தன்னலமாய்ச்
செழிப்பவரே இன்றுவரை ஆளுவதால்
செம்மொழியும் செம்மையாக வாழவில்லை
அழுதவிழி சிவந்திடவே ஆர்த்தெழுவீர்
அன்னைத்தமிழ் வாழ்ந்திடவே ஒன்றிணைவீர்!

தமிழ்மொழி இல்லம்,
10, இளங்கோ அடிகள் தெரு, மீனாட்சிப் பேட்டை
புதுச்சேரி - *609 009*. செல்லிடப்பேசி : *94421 88915*

8. Statement on the Status of Tamil as a Classical Language

George L. Hart
Professor of Tamil
Chair in Tamil Studies.

Professor Maraimalai has asked me to write regarding the position of Tamil as a classical language and I am delighted to respond to his request.

I have been a professor of Tamil at the University of California, Berkeley, since 1975 and am currently holder of the Tamil Chair at that institution. My degree, which I received in 1970, is in Sankrit, from Harvard and my first employment was as a Sankrit professor at the University of Wisconsin, Madison, in 1969. Besides Tamil and Sankrit, I know the classical languages of Latin and Greek and have red extensively in their literatures in the original. I am also well - acquainted with comparative linguistics and the literatures of modern Europe (I know Russian, German and French and have read extensively in those languages) as well as the literatures of modern India, which, with the exception of Tamil and some Malayalam, I have read in translation. I have spend much time discussing Telugu literature and its tradition with V. Narayanarao, one of the greatest living Telugus cholars, and so I know that tradition especially well. As a longstanding member of a South Asian Studies department, I have read in detail about Mahadevi Varma, Tulsi, and Kabir.

I have spend many years most of my life (since 1963) - sttudying Sanskrit. I have read in the original all of Kalidasa, Magha, and parts of Bharavi and Sri Harsa. I have also read in the original the fifth book of the Rig Veda as well as many other sections, many of the Upanisads most of the Mahabharata, the Kathaṣaritsagara Adi Sankara's works, and many other works in Sanskrit.

I say this not because I wish to show my erudition, but rather to establish my fitness for judging whether a literature is classical.

Let me state unequivocally that, by any criteria one may choose, Tamil is one of the great classical literatures and traditions of the world.

The reasons for this are many, let me consider them one by one.

First, Tamil is of considerable antiquity. It predates the literatures of other modern Indian languages by more than a thousand years. Its oldest work, the Tolkappiyam, contains parts that, judging from the earliest Tamil inscriptions, date back to about 200 BCE. The greatest works of ancient Tamil, the Sangam anthologies and the Pattuppattu, date to the first two centuries of current era. They are the first great secular body of poetry written in India, predating kalidasa's works by two hundred years.

Second Tamil constitutes the only literary tradition indigenous to India that is not derived from Sanskrit. Indeed, its literature arose before the influence of Sanskrit in the South became strong and so is qualitatively different from anything we have in Sanskrit or other Indian Languages. it has its own poetic theory, its own grammatical tradition, its own esthetics, and above all a large body of literature that is quite unique. It shows a sort of Indian sensibility that is quite different from anything in Sanskrit or other Indian languages and it contains its own extremely rich and vast intellectual tradition.

Third the quality of classical Tamil literature is such that it is fit to stand beside the great literatures of Sanskrit, Greek, Latin, Chinese, Persian and Arbic. The subtlety and profundity of its works, their varied scope (Tamil is the only premodern Indian literature to treat the subaltern extensively,) and literatures of the world. Everyone knows the Tirukkural, one of the world's greatest works on ethics; but this is merely one of a myriad of major and extremely varied works that comprise the Tamil classical tradition. There is not a facet of human existence that is not explored and illuminated by this great literature.

Finally Tamil is one of the primary independent sources of modern Indian culture and tradition. I have written extensively on the influence of a southern tradition of the Sanskrit poetic tradition. But equally important, the great sacred works of Tamil Hinduism, beginning with the Sangam Anthologies, have undergirded the development of modern Hinduism. Their ideas were taken into the Bhagavata Purana and other texts (in Telugu and Kannada as well as Sanskrit), Whence they spread all over India. Tamil has its own works that are considered to be as sacred as the Vedas and that are recited alongside Vedic mantras in the great Vaisnava temples of South India (Such as Tirupathi) And just as Sanskrit is the source of the modern Indo-Aryan languages, classical Tamil is the source language of modern Tamil and Malayalam. As Sanskrit is the most conservative and least changed of the Indo-Aryan languages, Tamil is the most conservative of the Dravidian languages, the touchstone that linguists must consult to understand the nature and development of Dravidian.

In trying to discern why Tamil has not been recognized as a classical language, other Indian languages may claim similar status. This is an unnecessary worry. I am well aware of the richness of the modern Indian languages - I know that they are among often medieval) literature that can stand with any of the major literatures of the world. Yet none of them is a classical language. Like English and the other modern languages of Europe (with the exception of Greek), they rose on preexisting traditions rather late and developed in the second millennium. The fact that greek is universally recognized as a classical language in Europe does not lead the French or the English to Claim Classical status for their languages.

To qualify as a classical tradition, a language must fit several criteria : it should be ancient, it should be an independent tradition that arose mostly on its own not as an offshoot of another tradition and it must have a large and extremely rich body of ancient literature. Unlike the other modern languages of India. Tamil meets each of these requirements. It is extremely old (as old as Latin and older than Arabic); it arose as an entirely independent tradition, with almost no

influence from Sanskrit or other languages; and its ancient literature is indescribably vast and rich.

It seems strange to me that I should have to write an essay such as this claiming that Tamil is a classical literature it is akin to claiming that India is a great country or Hinduism is one of the world's great religions. The status of Tamil as one of the great classical languages of the world is something that is patently obvious to anyone who knows the subject. To deny that Tamil is a classical language is to deny a vital and central part of the greatness and richness of Indian culture.

பேரா. மறைமலை அவர்கள் தமிழின் செவ்வியல் நிலைபற்றி என்னிடம் கேட்டார். அவர் கோரிக்கையினை கேட்டு நான் வியந்தேன்.

1975 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து வருகிறேன். தற்போது தமிழிற்கான இருக்கையில் பணியாற்றி வருகிறேன். என் முதல் பட்டப்படிப்பு 1970 இல் சமஸ்கிருத மொழியில் ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் பெறப்பட்டது. 1969 இல் இருந்தே மெடிசனில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தேன். தமிழ், சமஸ்கிருதம் தவிர இலத்தீன், கிரேக்கம் போன்ற செவ்வியல் மொழிகளையும் அறிவேன். அம்மொழியிலக்கியங்களை அந்தந்த மொழிகளிலேயே படித்தேன். ஒப்பீட்டு மொழியியலில் எனக்கு நல்ல பயிற்சி உண்டு. நவீன அய்ரோட்டில் மொழிகளையும் நன்கு அறிவேன். ரஷ்யன், ஜெர்மன், பிரஞ்சு மொழிகளையும் நன்கு அறிவேன். அம்மொழி இலக்கியங்களில் எனக்கு பரவலான வாசிப்பு உண்டு. அதே அளவிற்கு நவீன இந்திய மொழிகளிலும் எனக்கு பரீட்சயம் உண்டு. தமிழ், மலையாளம், தவிர பிற இந்திய மொழி இலக்கியங்களை, மொழி பெயர்ப்பின் மூலம் படித்துள்ளேன். தெலுங்கு மொழி இலக்கியத்தினையும் அதன் மரபினையும் ச.நாராயணராவிடம் விவாதித்துள்ளேன். தென் ஆசியவியல்

துறையில் பல்லாண்டுகள் பணியாற்றியதால் இந்தி மொழி இலக்கியத்தின் வளமையினை நன்கு அறிவேன். துளசிதாசர், கபீர்தாசர் படைப்புகளையும் மகாதேவவர்மாவின் படைப்புக்களையும் நன்கு அறிவேன்.

வாழ்வின் பெரும்பகுதியினை **1963** முதல் சமஸ்கிருதம் பயிலவே செலவிட்டேன். காளிதாசனின் படைப்புகளை அம்மொழியிலேயே நேரடியாகப் பயின்றேன். ரிக்வேகத்தின் 5 ஆம் இயலினை மூல வடிவிலேயே பயின்றேன். உபனிசத்துகள் பெரும்பாலானவற்றையும், மகாபாரதத்தினையும், ஆதி சங்கரரின் படைப்புக்களையும் கதா சரி சாகர என்ற நூல்களையும் அவற்றின் மூல வடிவிலேயே படித்தேன்.

இவற்றைக் குறிப்பிடுவது என் புலமையினைக் காட்டுவதற்கல்ல; ஒரு மொழியின் செவ்வியல் தன்மை பற்றிப் பேசுவதற்கான என் தகுதியினையே நான் இங்குக் குறிப்பிடுகிறேன். எவ்விதத் தகுதியின் அடிப்படையில் பார்த்தாலும் தமிழ்மொழி மிக உயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும் மரபினையும் கொண்டுள்ளது எனச் சொல்லாம். அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒவ்வொன்றாகச் சொல்ல வேண்டும்.

முதலாவதாகத் தமிழ் பழந்தொன்மையானது. இந்தியாவின் எந்தவொரு நவீன மொழியினையும் விட 1000 ஆண்டுகள் முந்தியது. இதன் ஆகப்பழைய நூல் தொல்காப்பியம். தமிழின் தொன்மையான கல்வெட்டு கி.மு. 200 இல் கிடைக்கிறது. சங்க நூற்களின் தொகையும் பாட்டும் கிறித்துவ சகாப்தத்தைச் சேர்ந்தவை. இவையே இந்தியாவில் முதன் முதலில் எழுதப்பட்ட மதச் சார்பற்ற நூல்கள் காளிதாசரைவிட 200 ஆண்டுகள் முந்தியன.

இரண்டாவதாக, இந்தியாவில் தமிழ் இலக்கிய மரபு மட்டுமே சமஸ்கிருத தாக்கம் இன்றித் தன்னியல்பாக உருவானதாகும். சமஸ்கிருத தாக்கம் உருவாகும் முன்பே இவ்விலக்கியங்கள் தோன்றிவிட்டன. தகுதியின் அடிப்படையில் பார்த்தாலும் சமஸ்கிருதம் உள்பட பிற இந்திய மொழிகளைவிட தமிழ் தகுதி வாய்ந்ததாக உள்ளது. இதற்கென்று தனித்த இலக்கியக் கொள்கைகள் உள்ளன. இலக்கண மரபு உள்ளது. தனித்த

அழகியல் கூறுகள் உள்ளன. இக்கூறுகள் சமஸ்கிருத இலக்கியத்தினின்றும் பிற இந்திய மொழி இலக்கயிங்களினின்றும் வேறுபடுகின்றன. பரந்த செறிவான அறிவுத்திறம் வாய்ந்த மரபினைப் பெற்றுள்ளது.

மூன்றவதாகச் செவ்வியல் தன்மையின் அடிப்படையில் பார்த்தாலும் தமிழ் இலக்கியங்கள், சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் சீனம், பாரசீகம், அரபி மொழியின் இலக்கியங்களோடு ஒப்பிடத் தகுதியானவை இந்தியாவின் நவீன காலத்திற்கு முந்திய காலக் கட்டத்தில் விளிம்பு நிலை ஆய்விற்குப் போதுமான தரவுகள் தமிழ் இலக்கியத்தில் மட்டுமே உள்ளன. திருக்குறள், அனைவராலும் அறியப்பட்ட ஒரு நூல் ஒழுக்கம் பற்றிப் போதிக்கும் உலக இலக்கியங்களில் முதன்மையானது. தமிழ்ச் செவ்வியல் மரபில் பன்முகத்தன்மை வாய்ந்த வெவ்வேறு நூல்களில் இதுவும் ஒன்று. மனிதனின் பல்வேறு பண்புக் கூறுகளை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

இறுதியாக நவீன கால இந்தியப் பண்பாட்டுக் கூறுகளையும், மரபுகளையும் பற்றியறிய தமிழினை முன்மையான சான்றுகளாகக் கொள்ளலாம். சமஸ்கிருத செய்யுள் மரபின் மேல் தென்னிந்திய மரபு ஏற்படுத்திய தாக்கத்தினை ஆன்றகழ்ந்து ஆய்ந்துள்ளேன். ஆனால் சங்கத் தொகைப் பாடல்களில் சொல்லப்பட்ட தமிழ் இந்துத்துவக் கருத்துக்கள் நவீன கால சிந்தனைப் வளர்ச்சிக்குக் கைகொடுக்கவில்லை எனலாம். ஆனால் அவற்றிலுள்ள கருத்துக்கள் பாகவத புராணத்தில் சேர்க்கப்பட்டன. தெலுங்கு, கன்னட, சமஸ்கிருத நூல்களில் காணக் கிடைக்கின்றன. பிறகு, இந்தியா முழுமைக்கும் பரவின. வேதத்திற்கு இணையாகத் தென்னிந்திய வைணவக் கோயில்களில் ஓதப்படும் தமிழ் இலக்கியங்கள் உண்டு. சமஸ்கிருதம் எப்படி நவீன இந்தோ ஆரிய மொழிகள் ஆய்வு செய்யப் பயன்படுகிறதோ அதே போன்று நவீன தமிழ், மலையாளம் மொழிகளை ஆய்வதற்குத் தமிழ் பயன்படுகிறது. சமஸ்கிருதம் வைதீகத் தன்மை கொண்டது மட்டுமல்ல, இந்தோ ஆரிய மொழிகளில் மிகக் குறைவாக மாற்றமடைந்த மொழியாகும். தமிழ் பழந்தன்மையான மொழியென்றாலும் திராவிட மொழிகளின் இயல்புகளையும் வளர்ச்சியையும் கண்டறிய தமிழைத்தான் மொழியில் அறிஞர்கள் உரைகல்லாகப் பயன்படுத்த வேண்டும்.

அரசியல் காரணங்களுக்காகவே தமிழின் செவ்வியல் தன்மை இன்னும் அங்கீகரிக்கப்படாமல் உள்ளது என்பதை நானறிவேன். தமிழ் செவ்வியல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விடாமல் பிற இந்திய மொழிகளும் அவ்வுரிமையினைக் கோரும் என்ற அச்சம். இது தேவையற்ற கவலை. இந்தியாவின் நவீன மொழிகளை நான் நன்கு அறிவேன். இப்பூமியின் வளம் வாய்ந்த மொழிகளுடன் அவற்றையும் சேர்க்கலாம். அவை நவீன காலத்தில் நல்ல இலக்கியங்களைத் தந்துள்ளன. அவையனைத்தும் உலக இலக்கியங்களோடு இணைந்து நிற்கத் தகுந்தன. ஆனால் அவற்றுள் எந்த வொன்றும் செவ்வியல் மொழியன்று. கிரேக்கம் செவ்வியல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால், ஆங்கிலமும், பிரஞ்சும் செவ்வியல் அந்தஸ்து கோரி வரிந்து கட்டிக்கொண்டு வரவில்லை.

ஒரு மொழி செவ்வியல் / செம்மொழித் தகுதியினைப் பெற பல கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும். *1)* தொன்மையனதாக இருக்கவேண்டும். *2)* சுய மரபின் அடிப்படையில் தன்னியல்பாக இயங்க வேண்டும். *3)* பிறிதொரு மரபின் கிளையாக இருத்தல் கூடாது. *4)* தொன்மையான இலக்கியங்கள் பல இருத்தல் வேண்டும். இவ்வணைத்துக் கூறுகளையும் தமிழ் மொழி கொண்டுள்ளது. பிற நவீன இந்திய மொழிகளுக்கு இத்தன்மைகள் இல. தமிழ்மொழி இலத்தீனைப் போன்று பழமையானது. அரபிக் மொழியை விட மூத்தது. தனித்த மரபின் மேல் வளர்ந்த ஒன்று சமஸ்கிருதத்தாலோ பிற மொழிகளாலோ தாக்கம் பெற வில்லை. பழந்தமிழ் இலக்கியங்கள் பரந்து விரிந்த வளமையனவை.

தமிழின் செவ்வியல் தன்மையினைச் சுட்டும் பொருட்டு அதற்காக நான் ஒரு கட்டுரை எழுதவேண்டியுள்ளது என்பது எனக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது. இந்தியா ஒரு பெரிய நாடு என்றும் இந்து மதம் உலக மதங்களில் ஒன்று என்றும் சொல்ல பெரும் பிரயத்தனம் செய்வதற்கு ஒப்பாகும். தமிழுக்கு செவ்வியல் உரிமை கோருவது ஓர் அறிஞன் தம் துறையில் பெற்ற அறிவின் காப்புரிமைக்காக வாதிடுவது போலுள்ளது. தமிழின் செவ்வியல் தன்மையினை மறுப்பதென்பது வளமையும், பெருமையும் கொண்ட இந்தியப் பண்பாட்டின் மையக் கூறினையே மறுப்பதாகும்.

கவிஞர். **கோ. கலைவேந்தர்,** எம்.ஏ., பி.எட்.,

நூல்கள்

கவிதைகள்

ஒரு மன நோயாளியின் குழந்தைகள்	35.00
தமிழ்த்துடிப்பு	30.00
பயிரை மேயும் வேலிகள்	30.00
ஊஞ்சல் பிள்ளைகள்	40.00
வாழ்க வளத்துடன்	25.00
பார்வை பெற	40.00
உயிரிகளின் ஊர்வலம்	40.00
செம்மலர்	40.00
எழுக தோழீ	40.00
கொலை வாளினை எடடா	20.00
பொறுத்தது போதும்	50.00
குறிஞ்சித் தமிழன்	35.00
எல்லாம் இருந்தும்	20.00
அழுகையை நிறுத்து	25.00
மனிதப் போர்வைகள்	25.00
உள்ளே புகுமுன்	50.00
பயணப் பதிவுகள்	50.00
நட(டி)ப்பும்	50.00
மனக்காயங்கள்	50.00

புதினங்கள்

உயிர்க்காற்று	20.00
அவள் ஒரு குழந்தை	30.00
மேலே வா	40.00
வாழ விடுங்கள்	35.00
கூலிச் சிறைகள்	80.00
நெருப்பு வேலி	50.00
செல்வமணி	50.00

சிறுகதைகள்

புயல் பூக்கள்	20.00
சறுக்கல்கள்	60.00
சிரிப்புக்குள் கண்ணீர்	50.00
அத்துமீறல்கள்	30.00

சிறுவர் சிறுகதைகள்

நன்றிக்கு உயிர் கொடு	20.00
அறிவே துணை	20.00
வெற்றி உன் கையிலே!	40.00
பேய் வந்தது	20.00

நாடகங்கள்

எம்முயிர் நீயே	30.00
எரிமலை அழலாமா?	25.00
ஒளி வந்தபோது	25.00
அவளா இவள்?	50.00
ஓ, அடிமைகளே!	50.00

கட்டுரைகள்

கடவுளைக் காண வேண்டும்	40.00
போராட்டக் களங்கள்	70.00

வங்கி வரைவோலையோ,
பண அஞ்சலோ, விலை
கொடுப்பு அஞ்சலோ
ஒவ்வொரு நூலுக்கும் பாதி
உருவா மட்டுமே
கோ. கலைவேந்தர்
பெயருக்கு விடுத்திடுக கழிவு
50% அஞ்சல் செலவு
எங்களுடையது.

தேங்கனி பதிப்பகம்,

17, புதுநகர், குத்தாலம் - 609 801.

மயிலாடுதுறை வட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம்

9. உயர்தனிச் செம்மொழி

கா. அப்பாதுரையார்

ஒரு நாடு உலகை நோக்கப் பிற நாடுகளைப் பார்க்கப் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருத்தல் கூடும். ஆனால், எந்த நாடும் அந்த நாட்டு மக்களுக்கு மிகச் சிறிதாகத் தோற்றும் அளவுக்குச் சிறுமையுடையதாகாது. உலகில் மிகச் சின்னஞ்சிறிய நாட்டிலும் அந்நாட்டின் மக்கள் தம் நாட்டைப் பொன்னெனப் போற்றாதிரார். மொழியின் நிலையும் இதுவே. ஆனால், இந்தியப் பெருநிலப் பரப்பில் எங்கும் வாழ்ந்த தமிழ் மக்கள் - தம்மொழி, தம் இனம், தம் நாடு ஆகியவற்றின் பெயரைக்கூட ஏற்க நாணமடைந்து வந்திருக்கின்றனர். அதன் பயனாகத் தமிழினத்தவர் என்று கொள்ளலாயினர். தமிழகத்திலும் உயர் வகுப்பார் என்று தம்மைக் கூறிக் கொள்பவர் பலர் தாம் தமிழர் அல்லர்; ஆரியர் என்று தம்மைக் கூறிக் கொள்ளவும் தம் பெயரைப் பிறமொழிகளில் கொண்டும் பிற நாட்டு மக்கள் ஒலிமுறை, சொற்கள், மொழிகள் ஆகியவை பேணியும் தமக்கு மேம்பாடு தேடுவாராயினர். அறிவூரியாகிய இவ்வழியில், தம்மினம் மறுத்த பிறமொழியாளர்கூடத் தம் மொழியைப் பேணி அதிலேயே எழுதவும் பேசவும் முனையும் நாளில், தமிழர் மட்டும், அந்தோ, பிறமொழி பேசுதலும் எழுதுதலும் உயர்வென்று கொண்டு வயிற்றுக்காகத் தன் மதிப்பையும் மொழியையும் விற்கும் நிலையிலிருக்கிறார்கள்.

தமிழ், தமிழகம், தமிழ்ப் பண்பு ஆகியவை பற்றி இன்று பழிப்பவர் மட்டுமேயன்றிப் புகழ்பவர்கள் கூட அதன் உள்ளார்ந்த மதிப்பையும் வளத்தையும் நன்கு உணர்வதில்லை. உலக மக்கள் நோக்கில் தமிழ் இன்னும் சிறுமைப்பட்டே காணப்படுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் தமிழின் இன்றைய நிலையையும் தமிழரின் இன்றைய நிலையையும் கொண்டு அதனை மேற்போக்காக மதித்து விடுகின்றனர். இன்று உலகில் பெரும்பாலாகப் பேசப்படும் மொழிகள் ஆங்கிலம், சீனம், இந்தி, வங்கம் முதலியவை. தமிழ் பேசுவோர் தொகை இவற்றினும் மிகக் குறைவு. பேசப்படும் இடமும் மிகக் குறுகிய இடம். எனவே,

இந்நிலையிலுள்ள பல மொழிகளுடன் வைத்தே தமிழ் எண்ணப்படுகிறது. வழங்கா மொழிகளாகிய வடமொழி இம்முறையில் எண்ணப்படுவதில்லை. வரலாற்று முறையிலும் இலக்கியப் பண்பாட்டு முறையிலும் அதன் உயர்வு உணரப்படுவது இதற்குரிய காரணம் ஆகும். தமிழுக்கும் இத்தகைய உயர் பண்பாடு உண்டென்பதை இன்றைய தமிழர் நிலையும்- தமிழ் நிலையும்-தமிழர் புறக்கணிப்பும்- திரையிட்டு மறைக்கின்றது. ஒருவேளை தமிழும் வடமொழிபோல் வழங்காதிருப்பின் இவ்வுள்ளார்ந்த பண்புகள் மதிப்புப் பெறக்கூடும் என்றுகூடக் கூறலாம். ஆகவே, காய்தலுவத்தலின்றித் தம்மொழியில் கருத்தூன்றும் தமிழ் இளைஞர்க்கும் பிறநாட்டு நல்லார்க்கும் தமிழின் வளம், தனிச் சிறப்புகள் ஆகியவற்றை அறிவியல் வரலாற்று முறைகளில் பிறழாது எடுத்துக் கூறுவது பயனுடையதாகும்.

தற்கால மொழி என்ற முறையில் பெறப்படாத உயர்வு தமிழுக்குத் தொன்மொழி- என்ற நிலையில் பெறப்படலாம் என்று நாம் கருதக்கூடும். தொன்மொழிகளில் மக்கள் வாழ்க்கைக்கு நிலையான பயனுடையவையாய், முக்காலத்தும் அதன் வழிகாட்டிகளாய் இயங்கும் மொழிகள் உயர்தனிச் செம்மொழிகள் எனப்படும். கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியும் ஐரோப்பியரால் உயர்தனிச் செம்மொழிகள் எனப் போற்றப்படுகின்றன. இன்று வடமொழியும் அவற்றுடன் ஒப்ப உயர்தனிச் செம்மொழி என்று ஏற்கப்பட்டிருக்கிறது. உலகின் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் கிரேக்க இலத்தீன் துறைகளுடனொப்ப வடமொழிக்கும் தனித்துறை வகுக்கப்பட்டுள்ளது. இம்முதன் மொழிகளுக்கும் அடுத்தப்படியாக உலகப் பெருஞ் சமயங்களின் தாயக மொழியாகிய ஏபிரேயம், அரபு முதலியவையும் பாரசிகமும் இடம் பெறுகின்றன. உயர்தனிச் செம்மொழிகள் நிலையிலன்றாயினும் வரலாற்றுச் சிறப்பும் இடச் சிறப்பும் உடையவையாக ஐசுலாண்டிக், காதிக், பழம்பாரசிகம் முதலிய சில்லறைத் தொன்மொழிகள் இயங்குகின்றன.

நாட்டு வரலாற்றாராய்ச்சியும் இலக்கிய வரலாற்றாராய்ச்சியும் தொடக்க நிலையிலிருந்த காலத்தில் தமிழ் இலக்கியம் மற்ற வட இந்திய, தென் மொழிகளிலும் பழமையுடையது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால், அது எவ்வளவு தொலைவு பழமையுடையது என்பது உணரப்படாமலே இருந்தது. தமிழில் பெரும்பற்றுடைய கால்டுவெல், போப் ஆகியவர்கள்கூட இன்றிருக்கும் தமிழிலக்கியத்தின் மிகப் பழைமை வாய்ந்த திருக்குறள், சங்க இலக்கியம் ஆகியவற்றின் காலம் எட்டாம் நூற்றாண்டு என்றே கருதியிருந்தனர். அவை கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சார்ந்தவையென்பதும் தொல்காப்பியம் அவற்றினும் மிகத் தொன்மை வாய்ந்ததென்பதும் இப்போது தெளிவுபட்டுள்ளது. தமிழில் இக்காலத்துக்கு முன் இலக்கியமே இல்லை என்று கொண்டால்கூட இந்தியாவில் வடமொழி உட்பட எல்லா மொழி இலக்கியங்களுக்கும் தமிழ் ஆயிர ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் முற்பட்டதாகும். இக்காலத்திலும் பழைமையுடைய உலக இலக்கிய மொழிகள் உயர்தனிச் செம்மொழிகளுள் முதல் இரண்டு மொழிகளும் எபிரேயமும் மட்டுமேயாகும்.

ஆனால், தமிழில் தொன்மை மிக்கவை என்று நாம் சொல்லும் நூல்களுடன் எதுவும் கலைப் பண்பாட்டு வகையில் தொடக்கப்படி இலக்கியத்தைச் சார்ந்த நூலாகக் காணப்படவில்லை. தொடக்கப்படி நாகரிகத்தைக் குறிப்பதாகவும் இல்லை. முதல் இலக்கிய நூலான திருக்குறள், அன்றும் இன்றும் தமிழகத்தில் மட்டுமன்றி உலகிலேயே ஒப்பும் உயர்வுமற்ற தனிப்பெருநூல். தொல்காப்பியமும் இன்றிருக்கும் இலக்கணங்களுள் பழமையுடையதாயினும் பிற்கால இலக்கண நூல்கள் அனைத்தையும் விட விரிவானது. சங்க இலக்கிய நூல்களுள் முற்ற வளர்ந்த ஓர் இலக்கியத்தின் சிதறிய துணுக்குகளின் தொகைகளேயாம். மேலும் தொல்காப்பியத்துக்கு முன்னும் விரிந்த இலக்கண இலக்கியங்கள் இருந்தன என்பதை அதில் காணப்படும் அகச் சான்றுகளாலேயே உய்த்தறியலாம். மரபுரையோ இதற்கு நெடுங்கால முன்னதாகவே இருபெருஞ் சங்கங்கள் இருந்ததாகவும் இன்றிருக்கும் இயல்பகுதி மட்டுமன்றி அக்காலத்தில் இசை, நாடகம் என்று இருவேறு பெரும் பிரிவுகளிருந்ததாகவும் குறிப்பதுடன், அத்தகைய நூல்கள் பலவற்றின் பெயர்களும் பகுதிகளும் மேற்கோளுடைகளும் தருகின்றன. இவற்றை ஒரு சார்பின்றி நோக்கினால் தமிழிலக்கியம் உண்மையில் வடமொழி இலக்கியத்தினும் மற்றெவ்விலக்கியத்தினும் மிக்க தொன்மையுடையதாய் இருந்திருத்தல் வேண்டும் என்பதைக் காணாதிரார்.

ஆகவே, தமிழில் தொன்மை ஒன்றை நோக்கினாலும் உயர் தனிச் செம்மொழிகளுள் அது இடம்பெறத் தக்கது என்பது தெளிவு. ஆனால், அதன் தனிச் சிறப்பு இதனுடன் நின்றுவிடவில்லை. இலக்கியப் பரப்பிலும் இலக்கியச் சிறப்பிலும் அதற்குத் தனி உரிமைகள் உண்டு. அத்தோடு பிற உயர்தனிச் செம்மொழிகள் அனைத்தும் இறந்துபட்ட மொழிகளாயிருக்க, தமிழ் ஒன்று மட்டும் இன்றும் உயிருடனியங்குவதுடனன்றி, இன்னும் எத்தனையோ தடங்கல்களையும் புறக்கணிப்புகளையும் பூசல்களையும் தாண்டி வளம்பெற்று வளரத்தக்க நிலையை உடையதாகவே இருக்கிறது.

தமிழ், தமிழகம், தமிழிலக்கியம் ஆகியவை பற்றி அறிஞர் உலகில் கூடப் பல தப்பெண்ணங்களும் அறிவுக் குழப்பங்களும் உண்டு. நாட்டு வரலாறுகள், மொழி ஆராய்ச்சி, பழம்பொருள் ஆராய்ச்சி, தற்கால வாழ்வியலாராய்ச்சி ஆகியவற்றின் முடிபுகள் ஒருமுகப்படுத்தப்படின் இவற்றைப் பற்றிய உண்மைகள் விளக்கம் பெறக்கூடும். ஆனால், தமிழகத்திலும் இந்திய மாநிலத்தின் பிற பகுதிகளிலும் பொதுமக்களிடையே ஆராய்ச்சி முடிவுகள் எளிதில் சென்றெட்டுவதில்லை. தமிழர்களின் இன்றைய அவல நிலையும் தமிழகத்தின் அடிமைச் சூழ்நிலைச் செறிவும் இவ்வகையில் அறியாமைத் திரையோடு மேலும் இருட்டடிப்புத் திரையிட்டு வருகின்றன.

மேனாட்டினர் உள்ளத்தில் இலக்கிய வளமுடைய மொழி என்றாலும் தாய்மொழி என்றாலும் அது தற்காலப் புதுமொழி என்றே பொருள்படும். ஏனெனில், உலகில் தற்கால மொழிகள் கிட்டத்தட்ட அனைத்தும் இலக்கிய அளவில் ஒன்றிரண்டு அல்லது நான்கு நூற்றாண்டுக் கால வாழ்வே உடையவை. நேர்மாறாகப் பண்டைய மொழிகள் எனப்படுபவை ஆயிரமாண்டு முதல் மூவாயிரமாண்டு வரை முற்பட்ட மொழிகள். ஆனால், இவை யாவும் (சீன மொழி நீங்கலாக) இறந்துபட்ட மொழிகளே. ஆகவே, பண்டை இலக்கிய மொழி அல்லது உயர்தனிச் செம்மொழி என்றால் இறந்துபட்ட மொழியாகவே இருக்கும் என்ற தப்பு எண்ணம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தப்பெண்ணத்துக்கு ஆளான மொழி தமிழ் ஒன்றே.

சா. 5.

இரண்டு உலகுகளை இணைக்கும் பாலம்

உலக மொழிகளிடையேயும் சரி, இந்திய மாநில மொழிகளிடையேயும் சரி, தமிழ் பல வகைகளிலும் தனித்தன்மையுடையது. பண்டைய வேதமொழிக்கும் கிரேக்க, உரோம நாகரிகங்களுக்கும் முற்பட்ட எகிப்திய பாபிலோனிய நாகரிகங்களுடன் தோழமைபூண்டு, அவற்றினும் முற்பட்டதும் மேம்பட்டதும் ஆனதென்று அறிஞரால் கொள்ளப்படும் மொகஞ்சதாரோ நாகரிகத்துடன் இணைந்த நாகரிகப் பழைமையுடைய மொழி தமிழ். ஆகவே, இம்மொழி உண்மையில் இறந்துபட்ட ஒரு பேருலக நாகரிகத்துக்கும் சென்ற 2000 ஆண்டுக்குள் அதன் அழிபாட்டின் மீது புதுவதாக வளர்ந்த இன்றைய உலக நாகரிகத்துக்கும் இடையே அமைந்த ஒரு பாலமாகும். மாந்த நாகரிகத் தோற்ற வளர்ச்சிகளை ஆராய விரும்பும் உலகப் பற்றாளர்களுக்குத் தமிழகம் ஒரு வற்றா உயிர் ஒழுக்குடைய கருவூலமே எனலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட உலக மொழிகளான ஈபுரு, அரபு முதலிய செமித்திய இனமொழிகளுடன் திராவிட மொழியினத்துக்கு உறவு உண்டு. அவ்விரு சார்பு மொழிகளையும் ஒருங்கே ஆராயும் ஆராய்ச்சி இன்னும் ஏற்கபடவில்லை. ஆனால், பண்டிருந்தே அந்நாடுகளுடனும் கிழக்காசிய நாடுகளுடனும் தமிழகம் வாணிக, அரசியல், ஆட்சித் தொடர்புகள் கொண்டிருந்தது. இன்றும் ஏழு கடல்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் தமிழ் மட்டுமே பரவியுள்ளதும் இவ்வுள்ளார்ந்த தொடர்பின் பயனே என்று காணலாம். கடல் கடந்த இந்திய மிகப் பெரும்பாலோர் தமிழரே என்பதும் கடல் கடந்து பேசப்படும் இந்திய மொழி தமிழ் ஒன்றே என்பதும் ஆராய்ச்சியாலறியப்பட வேண்டாத பொது அறிவுச் செய்திகளாயினும் பொதுமக்களிடையே எக்காரணத்தாலோ அறிவிக்கப்படாத செய்திகளாகவே உள்ளன.

தமிழிலக்கிய வாழ்வின் தனிச்சிறப்புகளைக் கழக வாழ்வு, முத்தமிழ்ப் பாகுபாடு, பொருள் முதன்மை, நாட்டு வாழ்க்கைத் தொடர்பு, ஐந்திணை வாய்மை, சமய ஒப்புரவு எனத் தொகுத்துக் கூறலாம்.

கழக வாழ்வு

தமிழில் முதல் இடை கடை என முச்சங்கங்கள் இருந்தன என்பதும் முதலது கடலுட்பட்ட குமரி-பஃறுளி நாடுகளிலமைந்த தென் மதுரையிலும் இடையது அதேயிடத்தில் கபாடபுரத்திலும் மூன்றாவது வைகைக்கரை மதுரையிலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்வுபெற்றிருந்தன என்பதும் நெடுநாளைய தமிழ்நூல் மரபு. இவற்றைப் பலர் ஒப்புக்கொள்ள முடிவதில்லை. ஒப்புக்கொள்ள முடியாமைக்கான காரணங்களாவன: 1. சங்கம் என்பது வடசொல். 2. சங்கங்கள் பற்றிய விவரங்கள் ஆயிரம் பதினாயிரக் கணக்கான ஆண்டு, புலவர் தொகையுடையதாய், மிகைப்பட்டதாய், வட்டத் தொகை உடையதாய்க் காணப்படுகிறது. 3. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டுச் சங்கம் பற்றிய செய்திகள் இல்லை.

சங்க வாழ்வின் மெய்ம்மையை ஒப்புக்கொள்ள விரும்பாதவர் இன்னொரு காரணமும் கூறுகின்றனர். இலக்கிய வளர்ச்சிக்குச் சங்கம் அமைப்பதென்பது மிக நவீன கால மரபாயிற்றே. இது அக்காலத்திலேயே தமிழரிடையே இருந்திருக்க முடியுமா? என்கின்றனர் அவர்கள்.

கடைப்பட்ட இக்கேள்விக்கு விடை எளிது. அக்காலத்தில் மட்டுமென்ன? இக்காலத்தில்கூட நவீன மேல்நாடுகளில் பிரான்சு தவிர எங்கும் திட்டமடைந்த இலக்கியமொழிக் கழகங்கள் இல்லைதான். தமிழர் குறிப்பிடும்படியான கழகம் முக்காலத்திலும் இதுவரை வேறெங்கும் உண்மையில் இருந்ததாகத் தெரியவில்லை. இதனால் அது தமிழுக்கே சிறப்பு எனப்படத் தக்கதேயாகும்.

மேலும் இது நவீனம் என்பவர்களே. முன்னுக்குப்பின் முரணாக, ஒருவேளை சமணர் சங்கங்களை யெண்ணி இம்மரபு தோற்றியிருக்கலாம் என்கின்றனர். சமணர்க்குத் தோற்றக்கூடியது தமிழர்க்குத் தோற்ற முடியாது போலும்.

சங்கம் என்ற சொல் வடசொல் என்பவர் பட்டி, மன்றம், கழகம், கூடல் முதலிய சொற்களும் வழங்குவதை மறந்தனர். சங்கக் கட்டடமே பட்டி மண்டபமெனப்பட்டது. மேலும் சங்கம் வடசொல் என்பவர் அது வடமொழிச் சொல்தானா என்று ஆராய்வார்களாக. வடமொழியோடொத்த பிற அரிய மொழிகள்

எதனிலும் அச்சொல் இல்லை. எனவே, தூய ஆரியச் சொல் அல்லாத பெரும்பான்மை வடமொழிச் சொற்களில் அது ஒன்று என்பதை அவர்கள் அறிவார்களாக. கழகம் என்பதைக் கலகம் என்று எள்ளிப் பேசியும் வடமொழிக் கடிகா வின் சிதைவே என்று இன்பக் குழப்பம் எய்தி உழல்பவர்கட்கும் இதுவே தக்க விடையாயமையும். ஏனெனில் கல என்பதே அதன் பகுதியாகும்.

சங்க மரபுரைகள் மிகைப்பட்டிருப்பதும், ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் அதாவது தேவார, பெரியபுராண, கம்ப இராமாயண காலங்களில் அடிபடுவதும் உண்மையே. ஆனால், இவ் ஆரியமாயைக் காலத்திலிருந்த தமிழிலேயே தமிழ் இலக்கியம், கலை ஆகியவற்றையும் உண்மைத் தமிழ்ப் பண்பையும் காணும் இவ்வன்பர்கள் இவ்வொன்றில் மட்டும் தங்கள் முன்னோர்களிடம் அவநம்பிக்கை கொள்வதேனோ. இது தவிர மற்ற எதில் அவ்விடைக் காலத்தவர் மிகைப்படுத்தவோ போலி உண்மைகள் புகலவோ இல்லை. உண்மைச் செய்தி யாதெனில், இப்பொய்ம்மைக் காலத்தின் பொய்கள் பலவற்றையும் விரும்பித் தழுவும் இவர்கள் பொய் கலந்த இம்மெய்யில் தாம் விரும்பாத மெய்யும் கலந்துவிட்டதே என்று அழுபவர்போல, நீரில் பால் கலந்துவிட்டதே என்று அழுந்தொழிலாளரும் உண்டல்லவா?

தலைச்சங்கம் இடைச்சங்கம் பொய்ச் செய்திகளல்ல

ஒரு சார்பின்றி ஆய்பவர்கட்குச் சங்ககால வாழ்வின் தன்மை மலை மேலிட்ட விளக்கம் ஆகும். இரண்டு தலைமுறைகளில் இயற்றப்பட்ட கடைச்சங்க இலக்கியமே பன்னூறாக, பல்நாடு, பல்வகுப்பு, பல்தொழில் ஆன பல்வகைப்பட்ட புலவர்களை உடையது. தொகை மிகுந்ததனால் தன்மை குறையவும் இல்லை. சங்கச் செய்யுள்களில் ஒரு சிறு செய்யுள் நூறு பெரிய புராணத்துக்கும் ஆயிரம் கம்ப இராமாயணத்துக்கும் மேம்பட்டது என்பது யாவரும் அறிந்ததே.

கடைச்சங்க இலக்கியத்தில் காணப்படும் வரலாற்றுச் செய்திகள், இலக்கியமுறை, மொழிநிலை, பண்பாடு, கலைவளம் ஆகிய அனைத்தும் பிற்காலத் தமிழிலக்கியம் எதனினும் காணப்படாத புதிய உலகம் ஆகும். இஃது ஒன்றே கடைச்சங்கமிருந்ததென்பதற்குச் சான்று ஆகும். இதனை இன்று மறுப்பவர்களும் மிகக் குறைவு. கடைச்சங்க காலத்தாயினும் கடைச்

சங்க நூல்களுள் சேராத சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் மூலமும் புறநானூறு, முத்தொள்ளாயிரம் முதலியவற்றின் மூலமும் நாம் அறியும் மொழி, கலைப் பண்பாடுகள் கடைச் சங்க நூல்களில் காணாப் புது உலகமேயாகும். எனவே, இடைச் சங்க வாழ்விருந்ததும் மெய்ம்மையே எனலாம். மேலும், அடியார்க்கு நல்லார், பெருங்கதை எழுதிய கொங்குவேள் ஆகியவர் காலம்வரை இடைச்சங்க நூல்களான குருகும் பெருநாரையும் வெண்டாளியும் இருந்ததாகத் தெரிகிறது. ஏனெனில், அவற்றைக் கற்றே கொங்குவேள் பெருங்கதை யாத்ததாக அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். பெருங்கதை மொழி வழக்கும் செய்யுள் வழக்கும் கடைச்சங்கத்தின் வழக்கின் வேறாயிருப்பதை டாக்டர் உ.வே.சா. அவர்கள் எடுத்துக்காட்டி இக்கருத்தை வலியுறுத்துகிறார். உயர்திரு. வையாபுரி அவர்கள் வெளியிட்டுள்ள புறத்திரட்டிலும் உரைகளின் மேற்கோள்களிலும் வரும் இறந்துபட்ட நூல்களின் பெயர்களும் செய்யுள்களும் தலை இடைச் சங்க நூல்கள் முடிவுக்கும் பிற நூல்கள் முடிவுக்கும் சான்று பகரும்.

சங்க காலம் பற்றிக் குறிப்பிடும் அதே நூன்மரபு தொல்காப்பியத்துக்கு முன்னர் அவிநயம், அகத்தியம் முதலிய இலக்கண நூல்கள் இருந்ததாகவும் அகத்தியம் தொல்காப்பியம் போல் இயல் தமிழுக்கு மட்டுமிலக்கணமன்று. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் இலக்கணம் என்றும் கூறுகின்றன. அறிஞர் பலர் அகத்தியர், அகத்தியம் கட்டுக்கதை என்கின்றனர். இஃது எப்படியாயினும் ஆகுக. தொல்காப்பியத்துக்கு முன் இலக்கிய இலக்கணம் தொல்காப்பியத்தினும் விரிவாக இருந்ததென்பதைத் தொல்காப்பிய மூலமாக உரைகள், மேற்கோள்கள் மூலமும் காண்டலாகும். அத்தோடு அகத்தியம் போன்ற முத்தமிழ் இலக்கணம் கிடைக்காலிவிடினும் சிலப்பதிகாரம் போன்ற முத்தமிழ் இலக்கியம் இருந்ததென்பது வெள்ளிடைமலை. அம்முத்தமிழ் கடைச்சங்கக் காலத்திலேயே பாராட்டுதல் இல்லாமையால் பெரிதும் மங்கிவிட்டது. சோழப் பேரரசர் ஆட்சிக்குள் அழிந்து தடமற்றுப் போயிற்று. கடைச்சங்க இலக்கிய காலம்கூடப் பண்டைத் தமிழிலக்கிய வாழ்வின் நிறைவுக் காலமன்று. நலிவு தொடங்கிவிட்ட கரும்பொற்காலமே என்றும் அதற்குமுன் வெண்பொற்காலமும் செம்பொற்காலமும் இருந்திருத்தல் அறியலாம்.

முத்தமிழ் வாழ்வு

பண்டைத் தமிழர் போற்றிப் பெருமை கொண்ட முத்தமிழில் ஒரு தமிழான இயலை மட்டுமே இன்று நாம் போற்றிப் பெருமை கொள்கிறோம். இதுவும் சங்க காலத்துக்கு முன்னிருந்தே தேய்ந்து வந்துள்ளதேயன்றி வளர்ந்து வரவில்லை. பின்னாளைய இலக்கணப் புலவர்கள் தமிழிலக்கணத்தை ஐந்திலக்கணமாக வகுத்தனர். அவ்வைந்து: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பது. தொல்காப்பியத்தில் பிரிவுகள் மூன்றாயினும் இவ்வைந்து பகுதிகளும் உள்ளன. ஆனால், வடமொழியில் அகத்தியத் தோடிணையாகச் சைவப் புலவர்களால் குறிக்கப்படும் பாணினியத்தில் எழுத்தும் சொல்லுமே உண்டு. வடமொழியாளர் தமிழகத் தொடர்பு கொண்ட பின்னரே, யாப்பியலும் அணியியலும் விரிக்கப்பட்டனவாதலால் அவை பாணினி மரபில் வந்த இலக்கணத்துக்குப் புறம்பாக யாக்கப்பட்டன. தமிழகத் தொடர்பு ஏற்படுமுன் வேதமொழியில் சில சமய நூல்கள் இருந்தனவேயன்றி வடமொழி என்ற இலக்கிய மொழியும் இலக்கியமும் தோன்றவில்லையாதலால் பாணினிக்குப் பேச்சு மொழியின் இலக்கணமாகிய எழுத்தும் சொல்லும் மட்டுமே தேவைப்பட்டது. எழுது, எழுத்து என்ற சொல்லே பாணினிக்கு முன் கையாளப்படவில்லை என்பது அறிஞர் கூற்று.

உயர்கலைப் பண்பு

சங்க இலக்கியத்தின் இன்னொரு மாண்பு உயர்கலைப் பண்பாடு. கிரேக்க இலக்கியத்தின் வடிவமைப்பும் செறிவும் தூய்மையும் இதில் களி நடம்புரிகின்றன. இன்று இது உலகில் அறியப்படாதது சங்ககாலத் தமிழின் குற்றமன்று. இன்றைய அறிவுலகின் குற்றம். கிரேக்க இலக்கியம் இருட்கால மேனாட்டில் பட்டபாடுதான் இன்று தமிழ்ச் செம்மைக்கால இலக்கியம் இக்காலத்தில்படுகிறது.

கலைக்கோப்பும் கட்டுப்பாடும் உடைய கவிதை பாலை நீர் ஊற்றுபோல் எளிதாகவோ பாறை நீரூற்றுப்போல் அரும்பெறலாகவோ இருக்கலாம். சங்க காலத்தில் பழம் பாடல்கள் பல முந்திய வகை. பிற பிந்திய வகை. ஆனால்,

இரண்டிலும் உயர்கலைப் பண்பு உண்டு. இடைக்காலத் தமிழ் நூல்கள் கற்பவர் அறிவு நிலைக்கோ, இடைக்கால மொழியாகிய வடமொழி கற்பவர் அறிவு நிலைக்கோ இது எட்டாதது. தற்கால வட ஐரோப்பியக் கலைஞர்கள் நெறிகளையும் கிரேக்க இலக்கிய நெறிகளையும் கற்றுத் தீட்டப்பட்ட கலைப் பண்பாட்டுடன் செல்பவர்க்கு அவையெல்லாம் கோபுரவாயில்களாகவும் தமிழ் இலக்கியம் கோவிலாகவும் காணப்படும். இவ்வுயரிய கட்டுக்கோப்பின் ஆராய்ச்சியே ஐந்திணை நெறியாக இலக்கணங்களில் வகுக்கப்பட்டது. இது முழு அளவில் தமிழுக்கே சிறப்பானது. கிரேக்க மொழியின் பண்பில் இதன் ஒரு கூற்றைக் காணலாம். பாட்டின் உவமையும் சொல்லும் வாழ்க்கையுடனும் இயற்கையுடனும் இயைந்ததாயிருத்தல் வேண்டும் என்பதே திணைநெறியின் அடிப்படையாகும்.

சுருங்கக் கூறின், தமிழிலக்கியம் தமிழ் நாட்டவர்க்கும் தமிழுலகுக்கும் மட்டுமேயன்றி, பெருந் தமிழகமாகிய திராவிட மொழிக்குழு நாட்டுக்கும் அதன் பண்டைப் பழம்பதியாய் இந்திய மாநிலத்துக்கும் பொது உரிமையுடைய ஓர் ஒப்பற்ற கருவூலம் ஆகும். கீழ் நாடுகளுக்கே தமிழிலக்கியம் ஓர் எச்சரிக்கை தரப்போதியது. போலித் துறவறம், கிராம வாழ்க்கையில் நிறைவு பெறல், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஆன்மீகம் என்றும் கீழை நாட்டுப் பண்பாடென்றும் தழுவி ஏமாந்து மேனாட்டின் சுரண்டலை விரும்பி ஏற்கும் இவ்வடிமை அரை உலகுக்குத் தமிழக இலக்கியம் ஒரு பெருமித மறுப்பு ஆகும். ஏனெனில், கீழ்நாட்டின் பொற்காலத்தில் திட்டமிட்ட நகரங்கள், துறைமுகப் பட்டினங்கள் உயர்தர வாழ்க்கை வசதிகள் ஆகியவை பெருகியே இருந்தன.

உலகின் சீனமொழியொன்றுக்கு அடுத்தபடியாக உலகில் மிக நீண்ட நாள் வாழ்நாள் உடைய இலக்கிய மொழி தமிழேயாகும். கடை இடை தலைச் சங்க நூல்கள் அழியாதிருந்தால், அல்லது இனி அகப்பட்டால் சீனத்தினும் அது நீண்ட வாழ்வுடையதாயிருக்கக் கூடும்.

உயர்தனிச் செம்மொழிப் பண்பு

அடிப்படை மொழி இயக்கம் ஏற்படுமுன் நிலவிய கலப்புமொழி இயக்கத்தவர் அடைந்த சிறிதளவு வெற்றிக்குக்கூட உயர்தனிச் செம்மொழிகளாகிய இலத்தீனம், கிரேக்கம், சமற்கிருதம், அரபு, பாரசீகம் ஆகியவையே மூலக் காரணம் ஆகும். இவ்வுயர்தனிச் செம்மொழிகளின் வளங்கள் முற்றிலும் மொழிக் கலப்பால் வந்த வளங்களல்ல என்பது தெளிவு. உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றான தமிழின் தனித் தமிழ் வளம் போன்ற அல்லது அவ்வாறு கருதப்படுகிற தூய தாய்மொழி வளங்களே அவை. இதனைக் கலப்புமொழி இயக்கத்தார் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எண்ணிப்பார்க்கவில்லை.

தமிழ் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாக நின்று தனித்தமிழ் வளர்த்ததனாலேயே, உயர்தனிச் செம்மொழிகளைச் சார்ந்து வளரவேண்டிய தேவையில்லாமல், உயர்தனிச் செம்மொழிகளுடன் சரி ஒப்பாக வளர முடிந்துள்ளது. ஏனை மொழிகள் உயர்தனிச் செம்மொழிகளின் உயரிப் பண்பை மறந்து அவற்றின் அடிமைகளாக வளர்ந்தன. தாமரைக் குளங்களில் தாமரையின் தேனை நுகரும் உணர்வின்றித் தேனுண்ணும் வண்டுகளை உண்டு வாழ்ந்த தவளைகளாகவே அவை இயங்கின. ஆனால், தமிழோ, தானே உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாதலால் அவற்றின் உயர்பண்பைத் தன் பண்பாகக் கொண்டு இயங்கி வந்தது. இயங்கி வருகிறது.

உயிர்ப் பண்புக் கூறு

தமிழ் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று மட்டுமன்று. அவற்றில் அதுவே தலைசிறந்தது. ஏனெனில் உயிர்தனிச் செம்மொழிகளின் உயிர்ப் பண்பை அது முற்றிலும் பேணியதனாலேயே, உலகின் மற்றெல்லா உயர் தனிச் செம்மொழிகளும் மாண்டழிந்ததுபோல, அது மாண்டழியவில்லை.

உயர்தனிச் செம்மொழிகளிடையே உயிர்வளமுடைய, வளர்ந்து வருகிற ஒரே உயர்தனிச் செம்மொழியாய்த் தமிழ் இயங்குகின்றது. அதே சமயம் உலகத் தாய்மொழிகளிடையேயும் அது ஒரே உயர்தனிச் செம்மொழியாய் இயங்குகிறது.

பண்டு முதிரா நாகரிகமுடைய மிக முற்பட்ட காலத்தில் தமிழ் உலகப் பொது மொழியாயிருந்திருத்தல் வேண்டுமென்று அறிஞர் பலர் உய்த்துக் காண்கின்றனர். அஃது எப்படியாயினும், வருங்கால உலகப் பொதுமொழியாவதற்குரிய பண்பு அதற்குக் கட்டாயம் உண்டு என்பதில் ஐயமில்லை. வேறு எம்மொழிக்கும் ஆங்கிலம், சீனம், இந்துசுத்தானி ஆகியவற்றுக்கு இருக்கும் உயிர்ப் பண்பைவிட, அதற்குரிய உயிர்ப் பண்பின் தகுதி பெரிதாகும். உயர்தனிச் செம்மொழிகள் கடந்த, தாய்மொழிகள் கடந்த இவ்வுயிர்ப் பண்புக்குக் காரணமென்ன? அதுவே தமிழ் வளர்த்துக் கொண்டுள்ள தனித்தமிழ்ப் பண்பு ஆகும்.

---

* இந்தியே பேசாத மாநிலமக்களுக்கு மும்மொழித்திட்டம் (தாய்மொழி, ஆங்கிலம், இந்தி) இந்தி பேசும் மாநிலமக்களுக்கு ஒரு மொழித்திட்டம் (இந்தி மட்டும்)

இந்திய குடிமக்கள் அனைவரும் சம உரிமை உடையவர்களா,? சிந்திப்பீர்

தமிழ்நாட்டில் மும்மொழித் திட்டத்தை ஆதரிக்கும் கட்சிகள் இந்தி மொழி பேசும் மாநில மக்களிடம் சென்று ஏதேனும் ஒரு தென்னிந்திய மொழியைப் படிக்கச் சொல்லிச் சொல்லத்தயாரா?

நல்வாழ்த்துக்களுடன்

சுழற்சங்க உறுப்பினர் ஆர்.ஜி.சங்கர்,
சி.இ.ஓ.

ஏ.கில் டிராவல்ஸ் கோ

விமானப் பயணச்சீட்டு : தீன் பிளாசா, தரைத்தளம்
ஸ்டேட் பேங்க் ரோடு,

தொலைபேசி 04364 : 222068, 241059

கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) உதவி : பரீதா காம்ளக்ஸ்,
தரைத்தளம்,
27பி4, நகர விரிவாக்கம்,

தொலைபேசி (04364) : 222049, 240915

மயிலாடுதுறை -609 001, தமிழ்நாடு, செல் : 9842424477

புரொபஷனல் கூரியர்ஸ்

பதிவு அலுவலகம் : புஷ்பா வளாகம்
30ஏ/15, நகர் விரிவாக்கம்,

தோலைபேசி : 04364 - 223223

செயல் மற்றும் பதிவு : ஸ்டேட் பேங்க் ரோடு,

தொலைபேசி : 04364 - 243333, 243323

மயிலாடுதுறை - 609 001. தமிழ்நாடு

செல் : 98424 24477, 9842955755

மலர் சிறக்க வாழ்த்துக்கள்

அப்சரா திருமண அழைப்பிதழ்கள்

நகர் விரிவு

மயிலாடுதுறை.

போன் : 224139

அப்சரா பேப்பர்கள்

புஷ்பா வளாகம்

மயிலாடுதுறை.

போன் : 223881

தமிழ்நாடு பிரிண்டர்ஸ்

நஜீம் வளாகம்

மயிலாடுதுறை.

போன் : 226449

10. மா தமிழ்த்தூண்

முதுமுனைவர் **வீ. உண்ணாமலை@மித்ரா**
பேராசிரியர், தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

வெள்ளையனை விரட்டிட்டோம் நாட்டில்!
வேண்டும் மட்டும் சுவாசித்தோம்!
சொல்லறியா சுதந்தரக் காற்றை!
தெள்ளுதமிழ் அமுதுண்டோம்! திகட்டிடவே,
குள்ளநரியாய்ப் புகுந்திட்டான் வடபுலத்தான்!
கள்ள மனத்தால் பருகிடவே,
கண்டனைய தாய்ப்பால் இருக்க,
தறுதலை இந்திப்பால் கொடுத்தான்!
தமிழர் நெஞ்சில் கோப
எரிமலைகள் கோடியாய் கனன்றிடவே
தண்டமிழ் நாட்டில் மூண்டது
மொழிப்போர்! திரண்டது போர்ப்படை!

தெரிக்கின்ற தோட்டாக்கள் தமிழர்நெஞ்சில்
தேடின தமிழ் உணர்வை!
குறி தவறாமல் பறந்திட்ட
குண்டுகள் தமிழன் குருதியில்
புரட்சித்தீ மூட்டியது, புதுப்போர்ப்
பரணி பாடியது தமிழ்ப்படை!

போர்க்களத்தில் காவலர்கள், போராளிகள்
தலைகளைச் சிதறுதேங்காய் களாக்கினர்
உலகின் உயர்வுக்கும் உயிர்துடிப்பிற்கும்
ஆதாரம் பொருளாதாரம் என்று
உள்ளபடி அறிந்து உயர்பொருளாதாரம்
கற்றிட்ட மாணவன்தான் சாரங்கபாணி!
நல்லதமிழ்க் கம்பனையும் நலம்சேர்

வள்ளுவனையும் வளர்தமிழில் வாசித்தானோ!
கற்றறிந்தோர் போற்றும் கனித்தமிழைக்
கனிவோடு இதயத்தில் எழுதினானோ!
பொற்புடனே இவன்விட்ட மூச்சுக்காற்றில்
முந்நூறு புரட்சி வரும்!
தீயில் எரிகையிலும் தீந்தமிழைத்
திடமாக வாழ்த்திட்ட மறவனவன்!
உயர்தனிச் செம்மொழியின் ஊற்றத்தை
உள்ளபடி எங்குக் கற்றான்?

நாடி நரம்புகளில், கொதிக்கின்ற
குருதியினில் தமிழுணர்வு பெற்றிடவே!
எதிர்கால மாணவர்கள் இவன்வரலாற்றை
இதயத்தில் எழுத வேண்டும்!
எண்ணரிய சரித்திரம் படைத்திட்ட
தமிழ்மறவர் வழித் தோன்றிக்
கண்ணனைய மொழிப்போரில் தன்னையே
தந்திட்ட தமிழ் மறவன்
ஆன்மா இங்குதான் உறங்குது
என மன்னன்பந்தலில் நிற்கும்
மாதமிழ்த் தூண் சொல்ல
வேண்டும்! தமிழ்மொழிக்குத் தீங்கென்றால்
மறத்தமிழன் சாரங்கபாணியாய் மண்ணில்
இன்னுயிர் தரவேண்டும் எந்நாளும்!
தமிழுக்குத் தரமான அரியாசனங்கள்
தரணியில் தரவேண்டும் ஒருகோடி!
என்மூச்சும் பேச்சும் முத்தமிழுக்கே
எனமுழங்க வேண்டும் விண்ணதிர!

11. கேட்டாலே சுடுகின்ற கேடு

தரங்கை. **பன்னீர்ச்செல்வன்**
எம்.ஏ.(த) எம்.ஏ.,(வ) எம்.எட்.,
விரிவுரையாளர்,
அருணாமழை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
மன்னார்குடி - 614 001.

அனைவருக்கும் கல்வி என்னும் அரிய குறிக்கோளை எய்திட நம் அரசு, தமிழகத்தின் எல்லாச் சிற்றூர்களிலும் வாய்ப்புக்கேற்பத் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்துகின்றது. தனியாரும் அரசுப் பொருளுதவியையும் நெறியுணர்த்தலையும் பெற்றும் பெறாமலும் ஆயிரக்கணக்கில் பள்ளிகளைத் தொடங்கி நடத்துகின்றனர். இதனால் ஏதேனும் ஒருவகைப் பள்ளி இல்லாத ஊரே இல்லை என்னும் நிகழ்நிலை (எதார்த்தம்) போற்றுதற்கு உரியது.

அப்பள்ளிகளில் இடையறாமல் பத்தாண்டுகள் பயின்று, பள்ளி இறுதிச் சான்றிதழ்த் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி) எழுதுவோர் ஏறத்தாழ ஏழு இலக்கமாகப் பெருகியுள்ளனர். அவர்களுள் தொண்ணூறு விழுக்காட்டினர் 25 வரிகள் அல்லது 15 முழுத் தொடரியங்கள் தம் பெற்றோரின் பெருமைமிக்க உரிமைப்பேறாகிய தமிழ் மொழியில் பிழையின்றி எழுதிட இயலாத வீறார்ந்த வெற்றியாளர்களாக விளங்குகின்றார்கள் என்பது மறுக்க இயலாத மாண்பு!

பள்ளிக்கல்விக்கு மேலும் ஈராண்டுகள் மேனிலைக் கல்வி பயின்றவர்களும் மேலும் பயின்று இளங்கலை, முதுகலைப் பட்டங்கள் பெற்றவர்களுள் பலரும் உயர்தனிச் செம்மொழியென மொழியிலார் உவந்து போற்றும் தம் தாய்மொழியாம் தமிழில் திருமண அழைப்பிதழ் ஒன்றைத் தவறின்றி எழுதிடும் திறன் பெற்றிடவில்லை அல்லது ஒரு துண்டறிக்கை, ஒரு சுவரொட்டி போன்றவற்றில் காணப்பெறுகின்ற பிழைகளை-இதனால் இதுபிழை எனச் சுட்டிக் காட்டும் திறன் பெற்றவராயில்லை என்பது கேட்டாலே சுடுகின்ற கேடு!

இதனினும் கொடுமை, தமிழியலில் மெய்ம்மநிறைஞர் (எம்.பில்.,) முனைவர் (பிஎச்.டி.,) பட்டங்களுக்கான ஆய்வேடுகளிலும் கூட எழுத்துப் பிழைகளும் தொடர்ப்பிழைகளும் ஒருமை - பன்மைப் பிழைகளும் நிறைந்துள்ளனவே எனக் கல்லூரித் தமிழியல் துறைத் தலைவர்களும் கலங்கி வெளிப்படுத்தும் கையறுநிலைக் கருத்துரைகள், தமிழ்க் கல்வியின் மேம்பாட்டைப் பறைசாற்றும் சான்றுகளாகும்.

பொது கற்றோரிடமும் கற்பிப்போரிடமும் விழுக்காட்டு வேறுபாடின்றி இக்குறைகள் உணராக் குறைபாடுகள் காணப்படுகின்றன. தமிழைத் தவிர வேறு எம்மொழியைக் கற்றாலும் எக்கல்வியைப் பெற்றாலும் பகைவரும் மெச்சிப் போற்றும் உச்சத்தை எட்டும் உரம்வாய்த்துள்ள தமிழர் தம் பெற்றோரின் பாசப் பரிமாற்றப் பெருஞ்சொத்தாகிய தமிழ் மொழியைத் தம் உறவுச் சுற்றத்தின் ஒப்பில்லா உரிமைகளை நிலைநாட்டும் உணர்ச்சிக் கருப்பொருளைக் கலை அறிவியல் கற்றுணர் ஊடகமாகிய காலவரம்பில்லாத் தொடர்நிலைப் பண்பாட்டு நாகரிகக் கருவூலத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஆய்ந்தறிந்த கல்வி அறிஞர்கள் திட்டமிட்டுக் கட்டகமாக்கிய பாடப்பொத்தகங்களை உன்னித்துப் பார்த்தால், பத்தாம் வகுப்பு முடியப் பயின்று தேர்ச்சி பெறுகின்றவர், சொற்கள், சொற்றொடர்கள், பொருள் தெளிவு போன்றவற்றின் ஒழுங்குகளையும் யாப்பிலக்கணப்படி வெண்பா இயற்றும் திறமையினையும் பெற்றிடல் கூடும் என்னும் போலித்தோற்றம் புலப்படுகின்றது.

நான்காம் வகுப்பு முடியச் சொல்வதெழுதும் பயிற்சி அளிக்கப்பெற்று எழுத்துப் பிழைகளின்றி எழுதிடப் பயிலும் மாணவன், ஐந்தாம் வகுப்புத் தொடங்கிக் கட்டுரைப் பயிற்சி அளிக்கப்பெறுகின்றான். ஆனால் அக்கட்டுரைகளை முறையாகத் திருத்தி ஒவ்வொருவரும் பிழையின்றி உரை நடையைக் கையாளும் திறம்பெறுதற்கு உரிய காலம் (பாடப்பிரிவேளைகள் - ப்ரீயட்ஸ்) ஒதுக்கிக் கொடுக்கப்பெறாமையால், ஆசிரியர்கள் கட்டுரைப் பயிற்சி ஏடுகளை ஆய்வாளர்களின் காட்சிக்கு அடுக்கி வைத்துக்

கண்காட்சி நடத்துகிறார்கள். பாடத்திட்டம் வகுத்துக் கொடுப்பதுடன் தம் பணி முடிந்துவிட்டதாய்க் கல்வியாளர்கள் கருதுகின்றார்கள். உண்மையில், தவற்றைத் திருத்திடத் தெரிந்தும் அக்கறையற்ற தமிழ்வழிப் பயிற்றுநர்களும் தெளிவும் ஆழமுமின்றித் தென்றல், கோனார் போன்ற வினா விடை நூல்களின் முகவராயுள்ள பெரும்பான்மைத் தமிழாசிரியன்மாரும் பொறுப்பை உணராமல் நழுவுதலும் தம் போலி ஆரவார அரைகுறை ஆங்கில அறிவை வெளிப்படுத்தி வழுவுதலும் தம்மொழியறியாச் செம்மொழிச் செல்வர்களை உருவாக்குகின்றன. இந்நிலைமைக்கு மாற்றென்ன எனச் சிந்திக்க வேண்டாமா?

மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, ஆசிரியர் பணியிடங்களை வழங்காமலும் நிரப்பப்பெறாமல் இருக்கின்ற வெறுமைப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பாமலும் கல்வித்தரம் குறைந்து விட்டதாகக் கூறுதல் பொறுப்புணர்ந்து உழைக்கின்ற போற்றுதலுக்குரிய ஆசிரியர்களைப் புண்படுத்துகின்ற புறங்கூறலாகாதா?

உலகின் முதல் தாய்மொழியென்றும் முதல் செம்மொழியென்றும் மொழியியல் முதுக்குறையாளர்களால் போற்றப்பெறும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் தாய்மொழிக் கற்றல், உள்ளீடற்ற தேங்காயின் அழகான உருக்காட்சி அல்லவா? இவ்விழிநிலையை மாற்றிட அரசும், இப்பழிநிலையைப் போக்கிட ஆசிரியர்களும் திட்டமிட்டு முனைந்தால் முடியாதா? முடியும், பின் குறிப்பவற்றை நடைமுறைப்படுத்தினால் முடியும், எவ்வாறு? பத்தாம் வகுப்பு முடியவுள்ள எல்லாப்பள்ளிகளிலும் இன்னும் நிரப்பப்பெறாமல் இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடல் வேண்டும். தமிழாசிரியர்கள் தமிழைப்பயிற்றுகின்ற ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் தக்கவர்களைக் கொண்டு தமிழில் பிழைகளை அறிந்து திருத்தும் பணியிடைப் பயிற்சிகள் வழங்கிடல் வேண்டும்.

ஆய்வு அலுவலர்கள் தமிழ்க்கல்வி செம்மையாக நிகழ்வுறுதலை மிகக் கவனமாக ஆய்வு செய்தல் வேண்டும். (முதலில் ஆய்வு அலுவலர்களுக்குத் தனிப்பயிற்சி அளித்தல்

வேண்டும்). பிழையற்ற எழுத்துப் பயிற்சிக்கு வாய்ப்புத் தரும் வகையில் மிகுதியான பாடவேளைகள் (ப்ரீயட்ஸ்) ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

8,9,10 வகுப்புகளுக்குள்ள தமிழிலக்கணப் பாடநூல் முறையாகக் கட்டாயம் பயிற்றுவிக்கப்பட்டும் பயிற்சி ஏடுகளில் பயிற்சிகள் செய்திடவும் இலக்கணத்தில் தனித் தேர்வுத்தாள் வைத்துத் தேர்ச்சி பெற்றிடவும் பாடத்திட்டத்தில் வழிமுறை வகுத்தல் வேண்டும். பத்தாம் வகுப்பு முடிக்கின்றவர் அழைப்பிதழ்கள், துண்டறிக்கைகள், பொது நல வேண்டுகை மடல்கள் (Public Interested Pettions) போன்றவற்றைப் பிழைகளின்றி எழுதிடற்கு நன்கு பயிற்சி பெற்றிட ஏற்றமுறையில் பாடப்பிரிவேளைகள் ஒதுக்கீடு செய்திடல் வேண்டும்.

பள்ளிகளில் பாதுகாப்புப் பேழைகளில் உறங்க வைக்கப்பட்டுள்ள நூல்களை அன்றாடம் ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திட நேரமும் வாய்ப்புகளும் உருவாக்கித் தருதல் வேண்டும். இப்பொழுது இடைநிலை, பட்ட நிலை ஆசிரியர் பயிற்சியிலுள்ள மாணவ ஆசிரியர்கள் அனைவரும் தமிழில் பிழையின்றி எழுதும் திறன்பெற்றவராக வெளிவர உடனடிப்பயிற்சி அளித்திடல் வேண்டும்.

இக்கட்டுரையின் நோக்கம் அரசையும் ஆசிரியர்களையும் குற்றம் சாற்றுவதோ, கல்விகற்ற தமிழர்கள் அனைவரையும் தமிழறிவும் தமிழ்ப் பற்றும் அற்றவர்கள் எனக் குறை கூறிக் கறைபடுத்துவதோ அன்று. ஈராயிரமாண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழ்வியல் நெறிகளையும் வகைப்படுத்திய உலகின் ஒரே இலக்கணமாகிய தொல்காப்பியத்தையும் குல, மதக் குழுமனப் பாங்குகளைக் கடந்த உலக மாந்தர்க்கான அறம் வகுத்த ஒப்பிலா பெரும்பனுவலான திருக்குறளையும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய ஈடில்லாப் பேரிலக்கியங்களையும் பெற்றுச் செவ்வியல் மொழியாகச் செழித்துயர்ந்த தமிழை அதன் உரிமைப் பிறங்கடையர் உணராமல் சிதைத்துச் சீரழிதலைத் தடுத்தலே நோக்கம்.

துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. (குறள் - 669)

சா.6

12. குடந்தைத் தமிழவேள் சாரங்கபாணியால் மலேசியா-சிங்கையில் தமிழ்வென்றது

மருதவாஞ்சேரி மாணவமணி சாரங்கபாணி ஈகமும் அதுபோல வெல்லும்

முனைவர். **அருகோ**

குடந்தைத் தமிழவேள் சாரங்கபாணி அவர்களின் போராட்டத்தின் மூலம் மலேசியாவில் இந்தியர்களின் சார்பில் அந்நாட்டின் தேசியமொழிகளில் ஒன்றாக இடம் பெற விருந்த இந்தியின் திணிப்பு முறியடிக்கப்பட்டு, தமிழ் இடத்தைப் பெற்றது. இன்று மலேசியாவில் மட்டுமின்றி, சிங்கப்பூரின் ஆட்சிமொழிகளில் ஒன்றாகவும் செந்தமிழ் கோலோச்சுகின்றது. அதுபோல மருதவாஞ்சேரியில் கல்யாணசுந்தரம் - கோமளவள்ளி இணையருக்கு 1.5.1945 இல் மகனாகப் பிறந்து, குடந்தையில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்து ஏ.வி.சி. கல்லூரியில் இளங்கலைப் பொருளாதாரம் பயின்று வருகையில், இரண்டாவது மொழிப்போரில் பங்குகொண்டு, இந்தி இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாவதை எதிர்த்து, 15.3.1965 அன்று இன்பத்தமிழ்காக்கத் தன் இன்னுயிரை ஈந்த மாணவமணி சாரங்கபாணியின் ஈகமும் வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், தமிழ் மூவேந்தர் காலத்திற்குப் பிறகு தமிழனுக்கு மொழி உணர்வும், இனவுணர்வும், முகிழ்த்தது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்ட காலத்திலாகும். அதனால் அந்த மொழிப்போரை, பிறமொழித் திணிப்பை எதிர்த்து ஏற்பட்ட எழுச்சி என்பதோடு கூடச் செந்தமிழர் போர்க்குணத்தில் மறுமலர்ச்சி என்றும் குறிப்பிடலாம். தமிழினத்தின் தாழ்வுகளுக்கெல்லாம் அடிப்படை தமிழனிடம் போர்க்குணமின்மைதான் என்று பொத்தாம் பொதுவாகக் குறிப்பிட்டுவிட்டு, இந்தியரில் ஏதாவது ஒன்றெனில் உடனே ஒன்றுகூடும்திறன் வங்காளியருக்கு உண்டு. எதையும் எதிர்த்து நிற்கும்திறன் மராட்டியருக்கு உண்டு. எடுத்துக்கொண்ட

காரியத்திற்காக உயிர்கொடுக்கும்திறன் பஞ்சாபியருக்கு உண்டு. நல்ல கூலிகளாக நடந்துகொள்ளும் குணமே தமிழருக்கு உண்டு என்று எவனோ ஒருவெள்ளைக்காரன் கூறியதாக விளம்புவதுண்டு.

ஆனால், ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்துவதற்காகப் புதுப்புது நாடுபிடிக்கும் செயலில் ஈடுபட்ட வெள்ளைக்காரர்களின் நாட்குறிப்புகளை எடுத்துப் பார்த்தால், அவர்களில் கணிசமானோர் தமிழனுடைய போர்க்குணத்தைப் பயன்படுத்தித்தான் ஆங்கிலப் பேரரசை ஆதவன் அத்தமிக்காத வல்லரசாக விரிவுபடுத்தியுள்ளனர் என்பதைக் காணலாம்.

ஆங்கிலேயர் மட்டும் என்றல்ல, புதிய காலனிகளைத் தேடிப் புறப்பட்ட ஐரோப்பியர்கள் அனைவருமே முதலில் தமிழ் நாட்டுக்கு வந்து, தமிழர்களைக் கூட்டிச் சென்று முன்னே விட்டுத்தான் தங்கள் சாம்பிராச்சியத்துக்குத் தடம் அமைத்துள்ளனர். காரணம், ஐரோப்பியருக்கு முன்பே கடல் கடந்து சென்று ஐந்து கண்டங்களிலும் கால்பதித்து நின்றவர்கள் தமிழர்கள் என்பதாலும், அத்தகைய தமிழர்கள் ஐரோப்பியர்கள் வரும்போது உள்நாட்டில் ஆட்சியுரிமை இழந்து, அந்த அவமானத்தினால் கண்காணா இடத்திற்குப் போய்விட அணியமாக இருந்தார்கள் என்பதாலும், அவர்களைத் தங்கள் நாடுபிடிக்கும் நப்பாசைக்குப் பயன்படுத்திக் கொள்வது ஐரோப்பியர்களுக்கு எளிதாய் இருந்தது.

தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகளிலிருந்து ஐரோப்பியரின் பின் அப்படி வெளியே சென்றவர்களைவிட, வளமான நஞ்சை கொழிக்கும் தஞ்சைத் தரணியிலிருந்து சென்றவர்களின் தொகை அதிகமிருப்பதே இதனை மெய்ப்பிக்கும். கூலிகள் என்று பின்னால் ஐரோப்பியர்கள் தமிழர்களைக் கொச்சைப்படுத்தினாலும், முதலில் கடந்த நாடுகளில் ஐரோப்பியருக்கு வேலைபோட்டுக் கொடுத்தவர்கள் தமிழர்கள். எடுத்துக்காட்டாக தளபதி ஆறுமுக படையாட்சி தலைமையிலிருந்து சென்னைப் படையணியே மொரிசியசை பிரஞ்சுக்காரர்களிடமிருந்து பிரிட்டீசாருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது.

எனவேதான் இந்திய விடுதலைப்போராட்டத்தில் முதன் முதலாகக் கரந்துறையும் அரசை விடுதலைக்கு முன்பே காபூலில் நிறுவிய சேரநாட்டுத் தமிழர் செண்பகராமன், முதல் உலகப்

போரின்போது அனைத்துப் போர்க்களங்களிலும் நேச நாடுகள் அச்சு நாடுகள் இருதரப்புப் படைகளிலும் இந்தியர்கள், குறிப்பாக, தமிழர்கள் கணிசமாக இருப்பதை நேரில்கண்டு, அவர்களை இந்திய விடுதலைப் போருக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன், இந்திய தேசியத் தொண்டர்படை என்ற அமைப்பை ஏற்படுத்தி ஜெய்ஹிந்த் என்ற முழக்கத்தையும் தோற்றுவித்தார். (இந்தியத்துணைக் கண்ட மக்கள் அனைவரையும் குறிப்பதாகவே ஹிந்த் என்ற அந்தச் சொல் அன்று வழங்கியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்).

அதையேதான் இந்திய தேசிய ராணுவமாக நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸ் பின்னர்க் கட்டியமைத்தார் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. அதிலும் தமிழர்களே கணிசமாக இருந்தனர் என்பதும், தமிழர்கள் அதிகம் வாழ்ந்த பர்மா, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில்தான் அது முழுவீச்சில் செயல்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இந்தியக் குணாம்சத்தையும் கடந்து தனித்தமிழ்த் தேசிய உணர்ச்சி தமிழனிடம் கால்கொள்ளக் காரணமாக இருந்தது இந்தியெதிர்ப்பு இயக்கம்தான் என்றால் அது மிகயையாகாது. ஆம், மௌரியர் காலத்து தெற்குநோக்கிய வடவர்படையெடுப்பை முறியடிக்க, அன்றைய தமிழ் மூவேந்தர்களும் ஒன்றுசேர்ந்து தமக்குள் ஓர் அரசியல் கூட்டிணைவை ஏற்படுத்திக்கொண்டதை சங்கப்புலவர் மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் (31) மூலம் அறிகிறோம்.

கண்ணுமிழ் கழுகின் கானம் நீந்திச்
சென்றார் என்பிலர்தோழி! வென்றியொடு
வில்லைத் துன்னும் வல்லான் வாழ்க்கை
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே

கி.மு. 185 அளவில் வாழ்ந்த கலிங்க மன்னன் காரவேலன், தன் அதிகும்பா கல்வெட்டில், தான் பட்டமேற்பதற்கு 113 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அத்தமிழ்வேந்தர் கூட்டிணைவைத் தான் உடைத்தெறிந்ததாகக் குறிப்பிட்டு, அதை உறுதிசெய்துள்ளான். வரலாற்றுச் சிறப்புவாய்ந்த அதுபோன்ற தமிழர் கூட்டிணைவு இந்தியெதிர்ப்புச் போராட்ட காலத்தில்தான் ஏற்பட்டதென்றால் அதுவும் மிகையாகாது. ஆம் அதிலும் 1965

ஆம் ஆண்டு கொழுந்துவிட்டெரிந்த இரண்டாவது இந்தியெதிர்ப்புப் போரில் சாதி, மதம், கட்சி, வட்டார உணர்ச்சி அனைத்தையும் கடந்து தமிழுணர்ச்சி பீறிட்டெழுந்தது. தமிழ் மாணவர் உலகமே அதில் ஒன்றுபட்டுப் போர்க்களத்தில் நின்றதால், அன்று நடுவணரசில் அமைச்சர்களாக இருந்த சி. சுப்பிரமணியம், ஒ.வி. அழகேசன் போன்றவர்களும் பதவி துறந்து தமிழின ஒற்றுமையுணர்ச்சிக்குக் கட்டியம் கூறினர்.

அப்பொழுது ஏ.வி.சி கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவனாக இருந்த நம் சாரங்கபாணி அப்போராட்டத்தில் குதித்துத், தனக்குத் தானே தீவைத்துக் கொண்டு இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!! என்று முழங்கியபடி தன் இன்னுயிரைத் தமிழுக்கு ஈந்துள்ளான். இன்னொரு மொழியின் ஆதிக்கத்தால் தன்னேரில்லாத் தமிழ் வீழ்ச்சியுற்றுவிடக் கூடாது என்று தமிழினத்திற்கு எழுச்சியூட்டியுள்ளான். உயிரை ஈவது தியாகம்தான் எனினும் எதிரியுடன் போரிட்டு அந்தப் போரிலே உயிர்த்தியாகம் செய்வதைவிட்டுத் தானே தன்னுயிரைப் போக்கிக் கொள்வது தற்கொலையன்றோ! அதுவோ தமிழ்வீரம்? என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆனால் அடிமையாக உள்ள ஓர் இனத்தில் தமக்கென்று ஒரு தனிப் படை இல்லாத தாழ்நிலையில் தன் மொழியை வாழ்விக்க உயிர்க்கொடை மூலம் உலகத்திற்கு உண்மையை அறிவிக்க அதைவிட்டால் வேறுவழி இல்லையே! அதே நேரம் அவன் எதிர்பார்த்தது நடந்ததா? இந்தித்திணிப்பு இல்லவே இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டதா? இன்பத்தமிழ் எல்லாத்துறையிலும் நின்று நிலவுகின்றதா? இல்லை. இல்லவே இல்லை. இந்தித் திணிப்புத் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றது. தமிழ் இருந்த இடத்தையெல்லாம் இன்னொரு புறம் ஆங்கிலம் எங்கும் புகுந்து கைப்பற்றிய படியே இருக்கிறது.

இந்தி வாளைத் தடுக்க ஆங்கிலக் கேடயம் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த வாள்வீச்சு ஓயவில்லை. கேடயமோ, வாளையும் முந்திக் கொண்டு தமிழின் வாழ்வைப் பறித்தபடி உள்ளது. இதில் கொடுமை என்னவென்றால், அந்த இந்தியெதிர்ப்பின் பயனாக அரியணை ஏறியவர்களே இன்று அதற்கு நடைபாவாடைவிரிக்கும் நிலைமை ஆகும்.

ஆம், மாணவதிலகம் சாரங்கபாணி போன்றோர் செய்த ஈகத்தின் பயனாக **1967** இல் தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியவர்கள், இனிமேல் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கைதான் என்று சட்டம் செய்தாலும், அந்த இரு மொழிகளில் ஒன்றான ஆங்கிலத்தைப் பெயர்குறிப்பிட்டு, கட்டாயம் என்று ஆக்கிவிட்டு, தமிழை அப்படிப் பெயர் குறிப்பிட்டுக் கட்டாயம் என ஆக்காததாலும், **தாய்மொழி அல்லது தமிழ்** என்று ஈரொட்டாகக் குறிப்பிட்டிருப்பதாலும் எங்குமில்லை தமிழ் எதிலுமில்லை தமிழ் என்று புறக்கணிக்கப்படும் பரிதாபமே உள்ளது.

அதேவேளை இந்தியாவில் நடுவணரசு என்பது மந்தியில் மட்டும்தான் என்றில்லாமல் மாநிலத்திலும் ஒருபோட்டி அரசுபோலவே செயல்பட்டுவருவதாலும், தொடர்வண்டி, பெருஞ்சாலைகள், வருமான வரித்துறை, அஞ்சல்துறை, வங்கித்துறை, உயிர்க்காப்பீட்டுத்துறை, துறைமுகம் என மாநிலத்திலிருக்கும் முக்கிய அரசுத்துறைகள் அதனிடமே இருப்பதாலும், மாநில அரசின் இருமொழிக் கொள்கையை அவர்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இந்தி, ஆங்கிலம் என்பதாக மட்டுமே கொண்டு நடைமுறைப்படுத்திவருவதால் தமிழுக்கு இடமே இல்லை என்றாகிவிட்டது.

இதே இரண்டாம் இந்தியெதிர்ப்புப் போராட்ட காலத்தில்தான் கொரியா நாட்டில் ஐரோப்பியர் ஆதிக்கத்தை எதிர்த்தும், கொரிய மொழியை ஒதுக்கி, ஆங்கிலத்தைத் திணிப்பதை எதிர்த்தும் அங்குள்ள புத்தபிக்குகளும், மாணவர்களும் தங்கள் தேக்கு32 மரத் தேகங்களுக்குத் தீவைத்துக் கொண்டு தியாகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அதன் பயனாக இன்று அங்கு அனைத்துத் துறையிலும் கொரிய மொழியே கொடிகட்டிப் பறக்கிறது. உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் கொரிய மொழியின் வீச்சுப் பரவியுள்ளது. நம்நாட்டிலேகூட கொரியர்கள் ஏற்படுத்தியுள்ள ஆலைகளில் உற்பத்தியாகும் வண்டிவாகனங்கள், மின்னணுச் சாதனங்கள் மூலம் ஹுண்டா, சாம்சுங் என்றெல்லாம் கொரியமொழிச் சொற்களை உலாவவிடுவதோடு, இங்குள்ள அவர்களுடைய நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் கொரிய மொழியைப் பயின்று கொண்டால் அவர்களுக்குப் பதவி உயர்வு,

சம்பள உயர்வு என்றெல்லாம் அறிவித்து அம்மொழிக்கு ஆக்கம் தேடிக் கொண்டிருக்கிறார்.

அதுபோன்ற ஆக்கம் தமிழுக்குக் கிட்டியுள்ளதா? தமிழர்களுக்குக் கிடைத்துள்ளதா? அதை நினைத்தால்தான் நெஞ்சம் குமுறுகிறது. என்றாலும் தியாகங்கள் வீணாவதில்லை. திசைதிருப்பப்பட்ட அதன் விளைவுகள் சரியான திசைக்கு வந்துதான் தீரும். எதற்காக அத்தியாகங்கள் செய்யப்பட்டனவோ அது வெற்றி பெற்றுத்தான் தீரும். அதுபோல மாணவதிலகம் சாரங்கபாணியின் ஈகமும் வெற்றி பெற்றே தீரும். அந்த வெற்றிநோக்கி வினையாற்றுவதே அவருக்கு நாம் செய்யும் உண்மையான நன்றிக் கடனாக இருக்கும். அவர் நினைவாக ஏவிசி கல்லூரி வாயிலில் எழுப்பப்படும் தூண் அதற்கான கலங்கரை விளக்கமாக அமையும் என்று நம்புகிறோம்.

ஓங்குக மாணவமணி சாரங்கபாணி நற்புகழ்!

✹ ஒரு மனிதன் இரண்டு மூக்காலும் மூச்சுவிடுவதில்லை. 5 நாழிகை (2 மணிக்கு) ஒரு முறை வலப்புற மூக்கு இடப்புற மூக்க என மாறி மாறி சுவாசிக்கிறான் என்பதை தமிழ்ச் சித்தர்கள் சரவியல் எனப் பெயரிட்டு எழுதி வைத்துள்ளனர்.

ஒவ்வொரு கிழமையும் கதிரவன் எழும் போது எந்த மூகககு வழியாக மூச்சு விடத் தொடங்குகிறான் என்பதைக் கீழ்க்கண்ட பாடல் விளக்கும்.

வெள்ளி வெண்திங்கள் விளங்கு புதன் **இடம்**
தெள்ளி ஞாயிறு செவ்வாய் சனி **வலம்**
வள்ளல் வியாழன் வளர்பிறைக் கோ**ரிடம்**
விள்ளு நற்றேய்பிறைக்கே **வல**மாகுமே
வளர் பிறை வியாழன் **இடம்**
தேய் பிறை வியாழன் **வலம்**

(18 சித்தர் நாடிநூல்)

இது இன்றைய அறிவியலாளர்களுக்குத் தெரியுமா? நமக்குத் தெரியவில்லை.

13. மொழி என் விழி

க. மானவிழி
இளம் அறிவியல்
இயல்பியல்
அ.வ.அ. கல்லூரி, மன்னன்பந்தல்.

கல்லூரி எனக்குப் பிடிக்கவே இல்லை
ஏன்?
அங்கே உன்னைக் காணவே முடியவில்லை

கோயிலுக்கு நான் செல்வதேயில்லை
ஏன்?
அங்கு நீ அர்ச்சனைகளில் மறுக்கப்படுகிறாய்

விண்ணப்பங்களை நான் பூர்த்தி செய்வதேயில்லை
ஏன்?
அதில் உன்னைக் காணமுடியவே இல்லை

ஆனால்
என்னிடத்தை விட்டு
வெளியில் வந்தால்
உலகமெல்லாம் நீ!
ஆம்!
நயாகரா நீர்வீழ்ச்சியில் நல்வரவு
கலிபோர்னியாவில் உலகத் தமிழ்ச் சங்கம்
இலங்கையில் ஆட்சிமொழி
உலகத்தில் செம்மொழி
என உலகின் 116 நாடுகளிலும்
உணரப்படுகிறாய் நீ.

மொழியை இழந்தவன்
மூடன்;
விழியை இழந்தவன்
குருடன்;
அது சரி...
எப்போது
தமிழன் தன் கண்ணாடியைக்
கழற்றுவான்?
எப்போது
தன் கண்களால்
பார்ப்பான்?
(கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது)

மலர் சிறக்க வாழ்த்துக்கள்

தமிழ்ச் சித்தர் மருத்துவமனை

அறை எண். 4, ஹமா சென்டர்
நகராட்சி மேனிலைப் பள்ளி எதிரில்
பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை.

தீராத தலைவலி, கண்புரை, ஆரம்ப புற்றுநோய், கல்லடைப்பு சதையடைப்பு, நீரடைப்பு, சர்க்கரைநோய், இரத்த சோகை, மஞ்சக்காமாலை, மாலைக் கண்நோய், சிறுநீரகக் கல் அடைப்பு நீக்குதல், மூட்டுவலி, மூலம், பவுத்திரம், குழந்தையின்மை, தேய்வு நோய் (எய்ட்ஸ்) இரத்த புற்று நோய், இரத்த அழுத்த நோய், பால்வினை நோய்கள் மற்றும் நீண்ட கால நோய்களுக்கும் பாரம்பரிய சித்த மருத்துவ முறையில் மருத்துவம் பார்க்கப்படும். குறைந்த செலவில் பக்க விளைவுகள் இல்லாமல் குறைந்த நாட்களில் குணமாகும்படி மருத்துவம் பார்க்கப்படும்.

ஆரம்ப கால புற்றுநோய், தேய்வு நோய் முழுவதும் குணமாக்கப்படும்.

மரு. ச. சுப்பையன்
தலைவர், அனுபவ சித்த மருத்துவர்கள் சங்கம்,
செயலாளர் பதினெண் சித்தர் வாழ்வியல் வழிப்பாட்டு மன்றம்
மயிலாடுதுறை.

அலைபேசி : 9443489316

14. இந்தி எதிர்ப்பு : பரிமாணத் தேய்மானம்

முனைவர் **த. செயராமன்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழக வரலாற்றில் இந்தி எதிர்ப்பு என்பது ஒரு வரலாற்றுத் தொடர் நிகழ்வு. 1930-களிலிருந்து அந்த நூற்றாண்டின் இறுதிவரை இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டிருகின்றன. இந்தித் திணிப்பின் வெப்பம் (1938) தமிழ்த் தேசிய இனத்திற்கு அரசியல் விழிப்பைத் தந்தது. இந்தி எதிர்ப்பின் வேகத்தைக் கண்டு இந்திய விடுதலைக்கு முன்பு, கட்டாய இந்தித் திருப்பப் பெறப்பட்டது (1940). ஆனால், பார்ப்பனிய இந்துத்துவத்தை உள்ளீடாகக் கொண்ட டில்லி அரசு இந்திய விடுதலைக்குப் பிறகு சமஸ்கிருதத்தை எதிர்காலத்தில் ஆட்சிமொழியாக்கிக் கொள்ளும் நோக்குடன், அதன் வாழும் கலவை வடிவமான இந்தியை ஆட்சி மொழியாக்கிக் கொண்டது. ஆளுக்கொரு வாக்கு என்ற மக்களாட்சி முறைமையின்படி தேர்ந்தெடுக்கப்படாத, பார்ப்பனர்களும், இந்திக்காரர்களும் ஆதிக்கம் செலுத்திய அரசியலமைப்பு அவையின் மூலம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் விதி செய்து (விதி 343) இதைச் சாதித்துக் கொண்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுக் காலம் இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிய ஆரிய பார்ப்பன - வர்ணாசிரம - இந்து மதவாத - நுட்பமான ஒடுக்கு முறையும், மேலாண்மையும் இதன்மூலம் நிரந்தரமாக உறுதி செய்யப்பட்டது.

காலாகாலமாக வடமொழி ஆரிய எதிர்ப்பைக் காட்டி வந்த தமிழினம் 1938 இல் இராசகோபாலாச்சாரியாரின் கட்டாய இந்தித் திணிப்பைப் போர்க்குணத்தோடு எதிர்த்தது. இந்த எதிர்ப்புணர்வு **தமிழ் நாடு தமிழருக்கே** என்று விடுதலை கோரும் முழக்கமாகத் தந்தை பெரியாரிடம் அரசியல் வடிவம் பெற்றது. இதே உணர்வு 1965 -இல் பெரும்போராக வெடித்தது. நாடு திகைத்து நிற்கும் அளவிற்குத் தமிழக மாணவர்களும் இளைஞர்களும் இந்திய இராணுவத்துடன் காவல்படைப் பிரிவுகளுடன் மோதி வரலாறு படைத்தனர். தமிழ்த் தேசிய உணர்வின் உயர்மட்டக் குறியீடு அது. ஆனால் இந்தி ஆதரவு காங்கிரஸ் கட்சி 1967 -இல் மக்களால் தோற்கடிக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேற்ற பிறகு ஒரு பெருத்த மாற்றம் ஏற்பட்டது. தி.மு.க. மற்றும் அதிலிருந்து பிரிந்த

அ.தி.மு.க. இவ்விரு கட்சிகளும் மாறிமாறி அதிகாரத்திற்கு வந்த பிறகு **1967** முதல் **1990** வரையிலும் ஒரு சமரசப் போக்கும், **1990** க்குப்பிறகு இந்தி எதிர்ப்பு நிலையில் குறிப்பிடத்தக்க சரிவும் காணப்படுகின்றன. இந்தித் திணிப்பின் நோக்கமும், அதை எதிர் கொண்டமைக்கான காரணங்களும் மீண்டும் நினைவு கொள்ளத்தக்கவை. மேலும், இந்தி எதிர்ப்பு என்பது எவ்விதம் வாயளவு முழக்கமாகி அதுவும் முடங்கிப் போனது என்பது ஆய்வு செய்யத் தக்கது.

இந்தித் திணிப்பின் நோக்கம்

நீண்டகாலமாக இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் மேலாண்மை செய்துவந்த பார்ப்பனியம் ஆங்கிலேய ஆட்சி புகுத்திய சட்டங்களால் சற்றே தளர்வடைந்தது. ஆனாலும், மாறிவரும் ஆங்கில ஆட்சிச் சூழலுக்கும் எதிர்கால அரசியல் தேவைக்கும் ஏற்றவாறு தன்னை மீள்கட்டமைப்புச் செய்யத் தொடங்கியது. அந்நிலையில்தான் அதன் இந்துமதவாத அரசியலும், அதன் அரசியல் முகமாக இந்திய தேசியமும் உருக்கொள்ளத் தொடங்கின. பார்ப்பனிய மேலாண்மை நிலைநிறுத்தத்திற்கான இந்து மத மொழியாக, இந்தியாவின் பொது மொழியாக சமஸ்கிருதத்தை உருவாக்க விரும்பி பார்ப்பனியம், செத்துப்போன சமஸ்கிருதம் உயிர்ப்பிக்கப்படும் வரை, அதன் வாழும் வடிவமான இந்தி இந்தியா முழுமைக்குமான பொதுமொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று விரும்பியது. அதன்படி **1872** -இல் இந்தியை மதவாதப் பிரச்சாரத்திற்குக் கருவியாக்குவது என முடிவெடுத்தது. இந்தப் புதிய இந்திக்கு, 'ஆரிய பாஷா' என்று பெயரிட்டது. அதுவரை வடபகுதியில் பேசப்பட்டு வந்த கலவை மொழியிலிருந்து அரபு, பாரசீகச் சொற்கள் நீக்கப்பட்டு, சமஸ்கிருதச் சொற்கள் மட்டுமே மேலும் புகுத்தப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. தேவநாகரி எழுத்துமுறை இதற்கு ஏற்கப்பட்டது. பார்பனிய மேலாண்மையை எப்படியும் நிலைநிறுத்திவிட வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்ட ஆரிய சமாஜம் தனது அதிகாரபூர்வ 'அமைப்பு மொழி' யாக இதை அறிவித்தது. தனது கல்வி நிறுவனங்களில் பாட நூல்களைப் புதிய இந்தியில் புகுத்தியது. இதுவே பின்னர் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தியா முழுமைக்குமான ஆட்சிமொழியாக ஏற்கப்பட்டது.

இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி வேண்டும் என்று பார்ப்பனர்கள் **1906** -இல் குரல் எழுப்பினார்கள். அந்த மொழி

சமஸ்கிருதமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். சமஸ்கிருதம் 'நமது மதத்தின் மொழி' என்றும் அதை நமது பண்பாட்டிலிருந்து பிரித்துவிட முடியாது என்றும் கட்டுரைகள் எழுதினார்கள். கருத்துப் பரவல் செய்தார்கள் (மெட்ராஸ் மெயில், 30 ஜுலை 1908) இந்திய தேசியக் காங்கிரசின் கருத்தும், இதுவாகவே இருந்தது, இந்திய தேசியக்காங்கிரஸ் என்ற அமைப்பு உள்ளீட்டில் இந்து மதவாத அமைப்பாகவும், பார்ப்பன மேலாண்மை அமைப்பாகவும் இருந்தமையால் அது இக்கருத்தைச் செயல்படுத்த முனைந்தது. காந்தி அடிப்படையில் ஒரு மதவாதியாகவும், வருணாசிரம ஆதரவாளராகவும், பார்ப்பன மேலாண்மை என்பதையே தர்மமாகக் கருதியவராகவும் இருந்தமையால், இக்கருத்தை ஏற்றுச் செயல்படுத்தினார். முதலில், இந்தி அல்லது இந்துஸ்தானி இந்தியா முழுமைக்கும் பொதுமொழியாக இருக்க வேண்டும் என்று காந்தி கூறினார். இந்தியாவுக்கு ஒரு தேசியமொழி வேண்டும், அது இந்தியே என்று கூறினார். வட நாட்டவர் திராவிட மொழிகளைக் கற்றுக் கொள்வதைவிட, தென்னாட்டவர் வட இந்தியாவின் பொது மொழியைக் கற்றுக் கொள்ளுமாறு தேசத்தின் பொருளியல் நலன் கோருவதாகக் காந்தி குறிப்பிட்டார். தென்னிந்திய மொழிகளும் கூட தேவநாகரி எழுத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். தமிழ் எழுத்து முறை கைவிடப்பட்டு தேவநாகரி ஏற்கப்பட்டால் தமிழ் உள்ளிட்ட மொழிகளைக் கபளீகரம் செய்வதில் இந்திக்கு எவ்வித கடினமும் இருக்காது என்று காந்தி கருதியிருக்கக் கூடும். அவ்வாறு எந்தத் தென்னிந்திய மொழியினமும் ஏற்கவில்லை. வட இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் இந்தி ஏற்கப்பட்டமையால் இன்று மகதி, மைதிலி, கடிபோலி போன்ற பொழிகள் அழிந்து போய் விட்டன. தென்னகத்தை இந்தியை ஏற்குமாறு செய்வதே இந்தியதேசிய இந்துத்துவர்களின் முன் இருந்த பெரும் பணியாக இருந்தது.

சென்னை மாகாணத்தில் இந்தித் திணிப்பு

இந்திய அரசுச் சட்டம் 1935 இன்படி தேர்தல் 1937 இல் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற காங்கிரஸ் சென்னை மாகாணத்தில் ஆட்சி அமைத்தது. சென்னை மாகாண பிரதமராக 1937 ஜுலை 5 ஆம் நாள் பதவியேற்ற இராசகோபாலாச்சாரியார் 11.8.1937 அன்று இந்தி கட்டாயமாகப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் என்று அறிவித்து, 21.4.1988 இல் அரசாணையும் வெளியிட்டார். இராஜாஜி தனது நோக்கத்தை வெளிப்படையாக,

'இந்தியா முழுமையும் சமஸ்கிருதம் கற்க வேண்டும்
அதற்கு எளிய வழியாக முதலில் இந்தி
கற்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

காங்கிரசுத் தலைவரும், இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான சத்தியமூர்த்தி ஐயர், வருணாசிரமத்தைப் பாதுகாக்கவும், இராமராஜ்யத்தை ஏற்படுத்தவும் சமஸ்கிருதம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று கூறினார். இவர்களுடைய தீய நோக்கத்தை நன்குணர்ந்திருந்த சென்னை சட்டமன்ற உறுப்பினர் பி. கலிபுல்லா சாகிப் *1937* இல் இவ்வாறு கூறினார்.

'இந்தித் திணிப்பு என்பது ஒரு பிராமண சதி; இந்தியாவை இந்து இந்தியாவாக உருவாக்குவது; இந்தியைப் புகுத்தி அதை சமஸ்கிருதமயமாக்கிவிடுவது' (மெட்ராஸ் மெயில், *3* ஜுன் *1937*). அவரைப் போலவே, இந்தித் திணிப்பின் நோக்கத்தைப் பெரியார் சரியாகக் கணித்திருந்தார். *1924* முதலே இந்தியைப் பெரியார் எதிர்த்து வந்தார். இந்தியைப் பரப்ப அவர் அதற்குமுன் உதவியும் செய்துவந்தவர். *1938* -இல் பெரியார் இவ்வாறு குறிப்பிட்டார்.

'பார்ப்பனியம் இன்று இந்தியைத் தமிழ் மக்களுக்குக் கட்டாயமாகப் புகுத்த வேண்டும் என்கின்ற மூர்க்கப்பிடி வாதத்தைக் கொண்டிருப்பதன் உண்மைக் கருத்து என்னவென்றால், அரசியலுக்கு அல்ல; பொருளியலுக்காக அல்ல; அல்லது பார்ப்பனர்களுக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக அல்ல. உண்மையான காரணம் என்னவென்றால், இன்று தமிழ் மக்கள் பெரும்பாலோருக்குள் ஏற்பட்ட சுயமரியாதை உணர்வால் ஆட்டம் கொடுத்திருக்கும் பார்ப்பனிய மத உணர்ச்சியைத் தமிழ் மக்களுக்குள் மறுபடியும் சரியானபடி புகுத்தி - அதைக் கெட்டிப்படுத்திப் பார்ப்பனியத்துக்குத் தமிழ் மக்களை புராண காலம் போல நிரந்தரமாய் அடிமையாக்குவதற்காகவே யாகும்.' (குடி அரசு தலையங்கம், *15.5.1938*)

இந்திக்குப் பின்னால் வருணாசிரமம் ஒளிந்து கொண்டிருக்கிறது என்று பெரியார் தெளிவாகக் கூறினார்.

இரண்டு பெரும் எழுச்சிகள்

1938 -ஆம் ஆண்டின் எழுந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரின் கோரிக்கை தமிழ்நாட்டின் விடுதலையாக இருந்தது. இந்தி எதிர்ப்புப் போரில் முதல் களப்பலியாக நடராசன் (*15* சனவரி, *1939*) தாளமுத்து (*12* மார்ச் *1939*) ஆகிய போராட்ட

வீரர்கள் உடல் நலிவினால் சிறையிலேயே இறந்தனர். 1940 பிப்ரவரி 21 இல் சென்னை அரசு கட்டாய இந்தியை நீக்கியது.

இந்திய விடுதலைக்குப்பின், இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாக இந்தி - இந்து வெறியர்களால் எளிதில் கொண்டுவர முடிந்தது. இந்திய அரசியல் சட்டப் பிரிவு 343, இந்தியாவின் ஒரே ஆட்சிமொழி இந்தி என்று அறிவித்தது. பதினைந்து ஆண்டு கழித்து 1965 இல் இது செயல்பாட்டுக்கு வரும் நிலையில் இந்தி எதிர்ப்புப் போர் பெருநெருப்பாக எழுந்தது. கீழப்பழுவூர் சின்னச்சாமி (25.1.1964), கோடம்பாக்கம் சிவலிங்கம் (26.1.1965) விருகம்பாக்கம் அரங்கநாதன் (27.1.1965), கீரனூர் முத்து (11.2.1965), பீளமேடு தண்டபாணி (2.3.1965) ஆகியோர் தீயிட்டுக்கொண்டும், நஞ்சுண்டும் உயிரை ஈகம் செய்தனர். 1965 ஜனவரி 25 முதல் மார்ச் 15 முடிய 50 நாட்கள் போராட்டம் தொடர்ந்து முடிந்தது. ஐந்நூறு தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தார்கள். ஐயாயிரம் இளைஞர்களும் மாணவர்களும் கைதாயினார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொய்வடைந்து விடாமல் தடுக்க மார்ச் 17 அன்று தீக்குளித்தார். மயிலாடுதுறை சாரங்கபாணி. 1965 ஆம் ஆண்டின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது கிளர்ந்தெழுந்த தமிழகம் காங்கிரஸ்கட்சியை 1967 இல் பதவியிலிருந்து அகற்றியது.

ஆட்சிமொழிச் சட்டத் திருத்தமும் (1968) மாணவர்களின் தனி நாடு கோரிக்கையும்

தமிழகம் உள்ளிட்ட எட்டு மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி தூக்கியெறியப்பட்டதால், ஆட்சி மொழிச் சட்டத்திருத்தம் 1968 இல் கொண்டு வரப்பட்டது. அதன்படி அரசு நிர்வாகத்திலும், நாடாளுமன்ற நடவடிக்கையிலும் இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து பயன்படுத்தப்படும். இத்திருத்தம் வடநாட்டில் கடுமையாக எதிர்க்கப்பட்டுத் தீவைப்புகள் நிகழ்த்தப்பட்டன. இதனால் திருத்தச் சட்டவரைவு மாற்றியமைக்கப்பட்டது. இந்தி அறிவு தேவைப்படும் மைய அரசுப்பணிகளுக்கு நபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கட்டாயமாக இந்தி அறிவு பெற்றிருக்கத் தேவையில்லை என்றிருந்த திருத்தம், இந்தி வெறியர்களைத் திருப்திபடுத்த, இந்தி மட்டுமே அல்லது அத்துடன் ஆங்கில அறிவு தேவைப்படும் மைய அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யும்போது கட்டாயமாக இந்தி அல்லது ஆங்கில அறிவு பெற்றிருக்க வேண்டும் என்று திருத்தத் தீர்மானத்துடன் திருத்தமசோதா நிறை வேற்றப்பட்டது.

இதைத்தொடர்ந்து 1967 டிசம்பர் 20 அன்று சென்னையில் மாணவர் போராட்டம் தொடங்கியது. டிசம்பர் 22 ஆம் நாள் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் 1000 மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைச் சந்தித்து, இந்நிலையை எதிர்க்கத் தமிழக அரசே நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் அவசியமானால் பதவி துறந்து தாங்களே மாணவர்களை வழி நடத்துவதாகவும் உறுதிகூறி மாணவர்களைக் கலைந்து போகச் செய்தார். போராட்டம் தொடர்ந்தது. சட்ட அமைச்சர் மாதவன் வீட்டில் 120 மாணவர்களை முதலமைச்சர் அறிஞர் அண்ணா சந்தித்து இரவு 10.30 முதல் விடியற்காலை 3 மணி வரை சமரசமாகப் பேசினார். பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தலைவர் மா. செல்வராசன், தமிழ்நாடு தனிநாடாவதற்கான போராட்டத்தைத் தொடங்குமாறு வற்புறுத்தினார். ஆனால் மூன்று முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றி, அவற்றை ஓராண்டுக்குள் நடைமுறைப்படுத்துவதாக அறிஞர் அண்ணா வாக்களித்தார்.

அத்தீர்மானங்களின் சாரம்

1. ஆட்சிமொழிச் சட்டத்திருத்தம் பற்றி அண்டைமாநிலங்களுடன் தொடர்பு கொண்டு, ஒத்தக்கருத்துள்ள கட்சிகளுடன் பேசிச் சட்டப்படி முயற்சி மேற்கொள்ளல்.

2. கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழி ஆக்க நடவடிக்கை.

3. சனவரி - 25 ஐ மொழிப் போர்த் தியாகிகள் தினம் என அறிவித்து அன்று கல்வி நிலையங்களுக்கு விடுமுறை தீர்மானங்களை நிறைவேற்ற நடவடிக்கை ஓர் ஆண்டுக் காலத்துக்குள் எடுப்பதாக அண்ணா உறுதிகூறினார். அக்காலக் கட்டத்திற்குள் தமிழையும் மைய அரசின் ஆட்சிமொழியாக்கத் தக்கவகையில் அம்முயற்சியில் மொழிச்சிக்கலுக்கு முயற்சிகாண முயற்சிப்பதாகவும், தோற்றுவிட்டால், 1969 சனவரி 26 ஆம் நாளைத் துக்க நாளாக அறிவித்துத் திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் போராட்டம் தொடங்கும் என்று அண்ணா உறுதிகூறினார். இதை ஏற்று மாணவர்கள் போராட்டத்தை நிறுத்தினர். இந்த உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மைய அரசின் ஆட்சிமொழி ஆகவும் இல்லை, 1969 சனவரி 26 மட்டுமல்ல, எந்த சனவரி 26உம் துக்க நாளாக அறிவிக்கப்படவும் இல்லை.

அண்ணாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடாத கோவை, சேலம், தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரியைச் சேர்ந்த 40 மாணவத் தலைவர்கள், சனவரி 10 (1968) அன்று கோவையில் வேளாண்மைக் கல்லூரி மாணவர் தலைவர் இராமசாமி தலைமையில் கூடி ஐந்து முக்கிய அம்சங்களை வலியுறுத்தித் தீர்மானங்கள் இயற்றினர்.

1. தமிழ் மொழியை மைய ஆட்சி மொழியாக்குதல்

2. ஆட்சி மொழிச் சட்டத்திருத்த வரைவில் செய்யப்பட்ட மாற்றங்கள் திரும்பப் பெற வேண்டும்.

3. மும்மொழித் திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும்.

4. இந்திப் பிரச்சாரச் சபைகள் உடனடியாக மூடப்பட வேண்டும்.

5. தமிழ் நாட்டுத் திரையரங்குகளில் இந்தித் திரைப்படங்கள் திரையிடக் கூடாத் தி.மு.க. மாணவர் அமைப்புப் போராட்டத்தை நிறுத்த முடிவு செய்தாலும், பிற மாணவர் தலைவர்கள் போராட்டத்தைத் தொடர விரும்பினர்.

முதல்வர் அண்ணா மும்மொழித்திட்டத்தை நிராகரித்தார். இருமொழிக் கொள்கையை ஏற்றார். இந்தி மொழியில்தான் கட்டளைச் சொற்கள் இருக்குமென்றால், என்.சி.சி. தமிழகத்தில் இருக்கத்தேவையில்லை என்று சட்டமன்றத் தீர்மானம் நிறைவேற்றினார்.

இவற்றில் நிறைவடையாத கோவை மாணவர்கள் 1968 சனவரி 25 ஆம் நாள் கோவை சிதம்பரம் பூங்காவில், ஆர். இராமசாமி தலைமையில், தனித் தமிழ்நாடு கொடி ஏற்றினர். இராமசாமி மீது தமிழக அரசால் துரோக வழக்குப் பதியப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் நோக்கமும் இயங்கு சக்திகளும்

1938 -ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முழக்கம் தமிழ்நாட்டுப் பிரிவினையாகும். (ஆங்கிலேய ஆளுகைக்குக் கீழ்) அப்போது தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தவர்களும், தமிழ் அறிஞர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர். ஆனால் போராடிச் சிறை சென்றவர்கள் சுயமரியாதை இயக்கத்தவர்கள்தாம். 1965 இல் தன்னெழுச்சியாக மாணவர் போராட்டம் வெடித்து மக்கள் போராட்டமாக மாறியது. தொடக்கத்தில் இப்போராட்டத்திற்கு உணர்வூட்டியதில் தி.மு.க.

முக்கிய பங்கு வகித்தது. 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கையில் முடிந்தது; தனித் தமிழ்நாட்டுக் கொடி ஏற்றப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போர் தமிழ்த் தேச விடுதலைப் போராக 1968 வரை இருந்தது. ஆனால் அதன்பிறகு தமிழினத் தமிழ் மொழி உரிமை பேசிய தலைவர்கள் இந்திய தேசியத்துடன் சமரசம் செய்து கொண்டார்கள். இந்திய தேசிய வாதிகளாக மாறினார்கள். 1968 வரைத் தமிழக அளவில் இருந்து வலுவான மாணவர் வலை அமைப்புச் சிதைந்து போனது. மாணவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் ஆனார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஓரங்கட்டப்பட்டது. 1968 க்குப் பிறகு 1990 வரை இந்தி எதிர்ப்பு சம்பிரதாயமானதாக இருந்து வந்தது.

தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போரின் தளர்ச்சியும் இந்தி மொழியின் வளர்ச்சியும்

இந்தி மொழி எதிர்ப்பில் ஒரு தொய்வும், ஒரு சமரசத் தன்மையும் 1990 க்குப் பிறகு நிலவுகிறது. மைய அரசில் திராவிடக் கட்சிகள் 1989 இலிருந்து நேரடியாகப் பங்கு பெறுகின்றன. இதன் பிறகு இந்தி மொழி எதிர்ப்பு அடியோடு கைவிடப்பட்டிருக்கிறது. மேலும், ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தால் இந்தி எதிர்ப்பில் பின் வாங்குவதும், ஆட்சியை இழந்திருக்கும் காலக்கட்டத்தில் இந்தி எதிர்ப்பை முழங்குவதுமாகத் திராவிடத் தேர்தல் கட்சிகள் இருக்கின்றன.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் டில்லி அரசு இந்தி வாரம் கொண்டாடியது. மைய அரசு அலுவலகங்களில் இந்தியை அதிகம் பயன்படுத்தக் கூறித் தமிழகத்துக்குச் சுற்றறிக்கை அனுப்பியது. இக்காலக் கட்டத்தில் தன் எதிர்ப்பைக் காட்ட தி.மு.க. இந்தியை இந்தியாவின் ஒற்றை அலுவல் மொழியாக அறிவிக்கும் இந்தி அரசியல் சட்டம் பகுதி 17 இல் விதி 343 ஐ எரிக்கும் போராட்டத்தை நடத்தியது. இதில் பங்கேற்ற தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் 12 பேரை அன்றைய முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் சட்டப்பேரவைத் தலைவர் மூலம் பதவி நீக்கம் செய்தார். 1991 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக இருக்கையில் தி.மு.க. ஓர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியது. டில்லி அரசின் சென்னை தொலைக்காட்சியில் இந்திக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டதைக் கண்டித்தும், தமிழில் செய்தி நேரத்தை மாற்றியமைத்ததைக் கண்டித்தும் போராட்டம் அறிவிக்கப்பட்டது. கலைஞர்

கருணாநிதி எங்கு இந்தி எழுதப்பட்டிருந்தாலும் அதை அழிக்குமாறு கூறினார். 'எதாவது ஒரு தெருவில் அல்லது ஊரில் இந்தி எழுதப்பட்டிருந்தால் அங்கு மானமுள்ள தமிழர் வாழவில்லை என்று பொருள்' என்று கூறினார். கோவை நகரில், 1993 மார்ச் மாதம் 26, 27 மற்றும் 28 தேதிகளில், தி.மு.க. ஓர் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்தியது. 1993 இல் திமுக தொண்டர்கள் இரயில் நிலையங்களில் இருந்த இந்தி எழுத்துக்கள் மீது தார் பூசி அழித்தார்கள். இக்காலக் கட்டத்தில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இல்லை என்பது நினைவு கொள்ளத் தக்கது.

1999 அளவில் தி.மு.க.வின் போக்கில் பெருத்த மாற்றம் நிகழ்ந்தது. 1999 முதலே பா.ஜ.கவுடன் நெருக்கமான தி.மு.க. தனது இந்தி எதிர்ப்பைப் பெரிதும் கைவிட்டது. 2003 இல் பா.ஜ.க. கூட்டணியில் தி.மு.க. பங்கேற்று மைய்ய அரசில் அங்கம் வகித்தது. தமிழ் நாட்டில் டில்லி அரசு துணிவாக மைல் கற்களில் ஊர்ப் பெயர்களை இந்தியில் எழுதியது. கோவை, பொள்ளாச்சி பகுதிகளில் பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்கள் கோவை கு. இராமகிருஷ்ணன் தலைமையில் அந்த மைல் கற்களைச் சாய்த்து எறிந்தார்கள். டில்லி மக்களவையிலும், மைல் கற்களில் இந்தித் திணிப்புக் குறித்துத் தமிழக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ம.தி.மு.க. உறுப்பினர் மருத்துவர் கிருஷ்ணன் தமது எதிர்ப்பை முதலில் தெரிவித்ததும், அ.தி.மு.க. உறுப்பினர்கள் பி.ஹச். பாண்டியன், செல்வகணபதி மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் எஸ்.எஸ். பழனி மாணிக்கம், கிருஷ்ணசாமி ஆகியோர் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். ஆனால், இந்தி எழுத்து அழிப்பு என்பது கைவிடப்பட்டது.

இதன் பின்னர்த் தேர்தல் கட்சிகள் முழுவதுமே இந்தி எதிர்ப்புச் செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டன. ஆனால் மைய அரசு அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் இந்தித் திணிப்பு என்பது முன்பு போலவே தொடர்ந்தது. தந்தை பெரியார் திராவிடர் கழகம் போன்றே தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய முன்னணி இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தில் களமிறங்கி, திண்டிவனத்திலிருந்தும், சோத்துப்பாக்கத்திலிருந்தும், செங்கல்பட்டிலிருந்தும், பெங்களூர் சாலையிலுமாகப் புறப்பட்டு இந்தி எழுத்துக்களை அழித்தது. 2005 இல் தமிழகத்தில் இந்தியைத் திணிக்கும் பொறுப்பு தி.மு.க.வின் மைய அமைச்சர் டி.ஆர். பாலுவிடமே விடப்பட்டிருந்தது. தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தியில் பெயர்ப்பலகைகள் எழுதப்பட்டன. சென்னை -

திண்டிவனம் சாலையிலும், சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையிலும் இந்தி எழுத்துக்கள் தமிழின உணர்வாளர்களால் அழிக்கப்பட்டன.

2005 இல் தமிழகத்தின் நெடுஞ்சாலைகளில் இந்தியில் பலகைகள் எழுதப்பட்டமை விமர்சனத்துக்கு உள்ளானது. ஆனால், தி.மு.க.வின் இந்த இந்தியின் பாலான சமரசப் போக்கை ஏனைய திராவிடத் தேர்தல் கட்சிகள் கண்டிக்கவோ எதிர்த்துப் போராடவோ இல்லை. ம.தி.மு.க. தனது பொதுக்குழுவில் பெயர்ப்பலகைகளில் தமிழும் இடம் பெற வேண்டும் என்று தீர்மானம் போட்டது. அ.தி.மு.க. தலைவியான ஜெயலலிதா பிரமருக்குக் கடிதம் எழுதினார். போராட்டம் ஏதும் அறிவிக்கவில்லை. பெரியாரிய தமிழ்த்தேசிய இக்கங்கள் மட்டுமே குரல் கொடுத்தன. கடந்த காலத்தில் இந்தி எதிர்ப்பைக் காட்டி வந்த கலைஞர் வியப்பளிக்கும் பதிலை அளித்தார். அ.தி.மு.க. வினர் மத்திய அமைச்சர்களாக இருந்தபோது இன்னும் அதிகமான இடங்களில் எழுதத் திட்டமிட்டிருந்தனர் என்றும் இப்போது அதைவிடக் குறைவாகத்தான் இந்தியில் எழுதப்பட்டுள்ளன என்றும் இன்னும் தமிழில் எழுத வேண்டிய இடங்கள் உள்ளன, அவற்றில் தமிழில் எழுதப்படும் என்றும் பதில் கூறினார்.

திராவிட இயக்கம் முகிழ்த்த போது, இந்தி எதிர்ப்புப் போரில் தலைமையேற்று, தனி நாடு கோரிக்கையை எழுப்பியது திராவிட இயக்கத்தின் வலிமையான ஒரு பகுதி தேர்தல் கட்சியாக உருமாறி தனி நாடு கோரிக்கையைக் கைவிட்டாலும், இந்தி எதிர்ப்பில் தொடர்ந்து போர்க்குணம் காட்டி நின்றது. மாநில அளவில் ஆட்சிக் கட்டிலில் இருக்கம்போது இந்தி எதிர்ப்பை நிறுத்திக் கொள்ளுவதும், ஆட்சிக் கட்டிலிலிருந்து கீழிறக்கப்பட்டால் இந்தி எதிர்ப்பு முழக்கத்தை முன்னெடுப்பது என்ற நிலைப்பாட்டையும் திராவிடத் தேர்தல் கட்சிகள் கொண்டிருந்தன. பின்னர் மைய அரசில் பங்கேற்றுத் தாங்கள் வசிக்கும் துறைகளிலேயே இந்தி புகுத்தப்படும் போது அதையும் செயல்படுத்தித் தரும் நிலைப்பாட்டையும் இவை மேற்கொண்டன. இந்தி பற்றிய திராவிடக் கட்சிகளின் நிலைப்பாட்டை ஆய்வு செய்தால் ஒரு பரிமாணத் தேய்மானத்தைக் காணலாம். திராவிடக் கட்சிகளின் கடந்தகால ஏற்றத்தையும் நிகழ்கால நிலையையும் மனத்தில் கொண்டு வரலாற்று வெளிச்சத்தில் பகுத்துப் பார்த்தால், ஓர் உண்மை புலப்படும்.

திராவிட இயக்கம் ஒரு தேவை கருதி எழுந்தது. அதன் கோரிக்கைகளையும், உத்திகளையும் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளே நிர்ணயித்தன. தமிழ்ச் சமூகத்தின் விடுதலையையும், மொழி - இன - அரசியல் உரிமைகளையும் பேசிய திராவிட இயக்கத்தின் செயல்தனமும் வீச்சும் குறைந்து போயின. அதே நேரம், திராவிடத் தேர்தல் கட்சிகள் இளைஞர்களை ஈர்த்துப் பெரிய நிறுவனங்களாக மாறி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் பதவி அரசியல் காரணமாக சமரசங்களுக்கு மேல் சமரசங்கள் எனச் சாரத்தை இழந்து நிற்கின்றன. குறைந்தபட்ச குறிக்கோள்களையும் அடிப்படை நோக்கங்களையும் கூட உதறிவிட்ட திராவிடக்கட்சிகள் தேர்தல்களில் வெற்றி பெறுகின்றன, ஆட்சி அமைக்கின்றன. ஆனால் அவற்றின் வேர்கள் இற்று வருகின்றன. தங்களின் தோற்றத்திற்கான நோக்கத்தையும், தங்கள் இருப்பிற்கான நியாயத்தையும் இழந்துவிட்டன. விரிந்து பரந்து நிற்கும் ஆலமரமும் வேர்கள் இற்றுப் போனால் வீழ்ந்துபடும்; விறகாகும். இது வரலாறு.

✹ வடலூர் வள்ளலாரின் பேருபதேசத்தில் இருந்து

1. உடலை எக்காரணத்தைக் கொண்டும் வருத்திக் கொள்ளக்கூடாது.

2. சிறுநீர் கழிக்கும் முன் / கழிக்கும் போது இடது கையால் வலது அடிவயிற்றை அழுத்திவிட வேண்டும் அதுபோல மலர் கழிக்கம்முன் / கழிக்கும் போது வலது கையால் இடது அடிவயிற்றை அழுத்திவிட வேண்டும். அப்படிச் செய்தால் கழிவுகள் முழுவதும் எளிதாக வெளியேறும்.

3. படுக்கும் பொழுதும், படுத்து எழும்போதும் இடக்கையை ஊன்றி, இடப்பக்கமாக படுக்க வேண்டும் எழுந்திருக்க வேண்டும். நோயின்றி வாழ வழி ஏற்படும்.

இந்தியா முழுவதும் குறிப்பாக கேரளா, மகாராஷ்டிராவில் நூற்றுக்கணக்கில் ஆயுர்வேத கல்லூரிகள் உள்ளன. தமிழ் நாட்டில் தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்திற்கு அரசின் சார்பில் இரண்டும் தனியார் சார்பில் இரண்டும் உள்ளன. தமிழ் மருத்துவம் வளர்வது எப்போது?

நல்வாழ்த்துக்களுடன்

பரணி ஆப்செட் பிரிண்டர்ஸ்

26, நாராயணப்பிள்ளைத் தெரு,
மயிலாடுதுறை - 609 001.
☎ : 227328

- திருமண அழைப்பிதழ்கள்
- லெட்டர் பேடு
- விசிட்டிங் கார்டு
- புராஜெக்ட்
- புத்தகப் பணிகள்

சி.டி -இல் இருந்து பிரிண்ட் எடுத்துத்தரப்படும்.

ரூ. 1

தமிழின உணர்வுடன்...

பெரி. இராசேந்திரன்

கற்பகம் செட்டிநாடு உணவகம்

60-61, மகாதானத் தெரு,
மயிலாடுதுறை.
தொலைபேசி : 224654

15. தமிழ்நாட்டில் தமிழ் இல்லையா?

பேரா. **ச. கிருட்டினசாமி**
வழக்குரைஞர்
சென்னை.

தாய்மொழி இல்லா மொழி அந்நிய மொழி!

ஒரு மொழி பேசுபவனுக்கு அவன் புரிந்து கொள்ள இயலாத எந்த மொழியும் அந்நிய மொழிதான்! அவன் நாட்டில் பேசப்படும் மொழி என்பதால் அது அவனுடைய மொழியாகிவிடாது. தமிழனுக்கு இந்தியும் அந்நிய மொழி தான், ஆங்கிலமும் அந்நிய மொழிதான்!

ஓர் அந்நிய மொழி வேற்று மொழி பேசுபவர்களிடமும் வெளி உலகத்துடனும் தொடர்பு கொள்ளத் தேவைப்படுகிறது. அந்த தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் வந்து சேர்ந்த மொழி தான் ஆங்கிலம். அந்த மொழியிலேயே இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள பல நாட்டினரிடமும் தொடர்பு கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. அது இந்தியாவின் பிற மொழிகள் போல் இந்த நாட்டிலேயே தங்கியும் விட்டது. தாய் வழி அறிந்த மொழி தமிழும், ஆசிரியர் வழி கற்ற மொழி ஆங்கிலமும் போதும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே மூன்றாவது மொழிக்கு அவசியம் அற்றுப் போய்விட்டது. அப்படியிருக்க மனித அறிவின் ஆற்றலை தேவையற்ற ஒரு மொழியைக் கற்பதில் ஏன் அதிகமாகச் செலவிட வேண்டும்? அதைவிட உயர்கல்வியில் நேரத்தைச் செலவிடலாமே!

இந்தி அந்நிய மொழி!

இன்னும் சில ஆண்டுகளில் கணினி அறிவு வளர்ச்சி வேகத்தில் எந்த மொழியையும் காதில் பொருத்திக் கொள்ளப்படும் கருவி மூலம் உடனுக்குடன் அவரவர் மொழியில் அறியும், பெறும், நிலை ஏற்படப் போகிறது. அப்படியிருக்க ஏன் இந்தி? இந்த இந்திதானே இந்திய ஒற்றுமைக்கு அன்று முதல் இன்று வரை, ஊறு விளைவித்து வருகிறது. இந்தி இந்தியாவின் ஒரே மொழி அன்று! சிறந்த மொழியும் அன்று!

மொழிப் போராட்டம்!

அரசமைப்புச் சட்ட உறுப்பு *343* (Article 343) படி இந்தி தேவநாகரி எழுத்து வடிவத்தில் இந்தியாவின் ஆட்சி மொழி என்று ஜனவரி *26,1950* அன்று பறைசாற்றியது. ஆனால் *15* ஆண்டுகளுக்கு ஆங்கிலம் இந்தியுடன் நீடிக்கும் என்றும் கூறியது. அதை எதிர்த்தார்கள், அண்ணாவும், பெரியாரும்! மொழிப் போராட்டம் வெடித்தது. பலர் தங்கள் இன்னுயிரை தமிழுக்கு ஈந்தனர். அப்பொழுது பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு, இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் இந்தியுடன் இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று உறுதி அளித்தார். பின்னர் மத்திய ஆட்சி மொழிச் சட்டம், *1963* (The Official Language Act, 1963) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் ஆங்கிலம் இந்தியுடன் தொடர்பு மொழியாக இருக்கும் என்றது.

அரசமைப்புச் சட்டம்தான் அடிப்படைச் சட்டம். அதில் ஒன்றிருக்க நாடாளுமன்றம் செய்த ஆட்சிமொழிச் சட்டத்தில் வேறொன்று இருக்க முடியாது. இருந்தால் செல்லாது! அரசமைப்புச் சட்டத்தில் உறுப்பு *343*-ஐ திருத்தியிருக்க வேண்டும். இந்தி வெறியர்கள் செய்யவில்லை. அதனால்தான் இந்தி மறைமுகமாகத் தமிழ்நாட்டில் திணிக்கப்படும் போது எல்லாம், இந்தியை எதிர்க்க வேண்டிய நிலைக்குத் திராவிட கட்சிகள் தள்ளப்பட்டன. இந்தியா ஒரு நாடன்று. பல தேசிய இனங்களைக் கொண்ட கூட்டமைப்பு. ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஒரு மொழி உண்டு. தொன்மையான மொழிகள் உண்டு. செம்மொழி உண்டு! தமிழ் உண்டு!

இந்தியாவை இந்தி பேசுபவர்களின் ஆதிக்கத்திற்குக் கொண்டு வரும் முயற்சி வெற்றி பெற்றிருந்தால் இந்தியா என்றொரு நாடு இன்று இருக்காது. பல மாநிலங்கள் பிரிந்து இருக்கும். ஆங்கிலம் என்ற ஒரு தொடர்பு மொழி போதும். அதைச் செம்மையாகக் கற்றால் போதும். இன்றியமையாத கணினி மொழியாகவும் அது இன்று மாறிவிட்டது. உலக மக்கள் அனைவரும் படிக்கிறார்கள். இந்தியாவிலும் மற்றும் உலக அளவிலும் தொடர்பு கொள்ள அது போதும். இன்னொரு தொடர்பு மொழி தேவையில்லை. இந்தியைக் கட்டாயப் பாடமாக படிக்கவேண்டிய அவசியம் இல்லை! வேண்டுவதில்லை. விரும்பினோர் படிக்கட்டும்!

தமிழ் ஆட்சி மொழி!

அரசமைப்புச் சட்ட உறுப்பு 345 படி அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வரலாம். தமிழ்நாட்டில் தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டம், 1956 படி தமிழ் ஆட்சி மொழியாயிற்று. இந்தச் சட்டம் காமராஜர் முதலமைச்சராக இருக்கும் பொழுது கொண்டு வரப்பட்ட சட்டம். அதனால் தான் இந்தியை எதிர்க்காத காமராஜரை கூட, இந்தியை ஏற்றுக் கொண்ட காமராஜரைக்கூட, பச்சைத் தமிழன் என்றார் பெரியார்.

ஆங்கிலமும் தொடர்ந்து தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக இருந்து வந்தது. அதை மேலும் உறுதிபடுத்த, ஆங்கிலம் தொடர்ந்து சட்டப் பேரவையில் பயன்படுத்தப்படும் என்று தமிழ் நாடு சட்டப்பேரவை (ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்துதல்) சட்டம், 1964 மூலம் அறிவித்தது. இன்று தமிழ்நாட்டின் ஆட்சி மொழி தமிழ்! ஆங்கிலம் தமிழ்நாட்டின் தொடர்பு மொழி!

நீதிமன்ற மொழி!

உயர் நீதிமன்றத்திற்குக் கீழ் உள்ள நீதிமன்றங்களில் குறிப்பாகக் குற்றவியல் நீதிமன்றங்களில், தமிழ் நீதிமன்ற மொழியாகக் கையாளப்பட வேண்டும், சான்றுகள் தமிழில் எடுக்கப்பட வேண்டும் என்று ஓர் அரசாணையை, எண் 191, சட்டம், நவம்பர் 13, 1976இல் (G.O. Ms.No.191 Law, 133-11-1976) தமிழ்நாடு அரசு வெளியிட்டது. பின்னர் ஜனவரி 18,1982 இல் அரசாணை எண் 9 வழி (G.O. Ms. No. 9, Law Dated 18-1-1982) எல்லாக் கீழமை நீதிமன்றங்களிலும் அதாவது சென்னை உயர்நீதிமன்றத்திற்குக் கீழ் இயங்கும் எல்லா நீதிமன்றங்களிலும் தமிழில்தான் தீர்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. ஒரு சில தமிழ் நாட்டு எல்லையோர நீதிமன்றங்களின் ஆளுகைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ் அல்லாத மொழிபேசும் மக்கள் அதிகம் இருப்பின் தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் தீர்ப்பளிக்கலாம் என்று விதி விலக்குக் கூறப்பட்டது.

இருப்பினும் நீதிமன்ற மொழியாகவும் தமிழுடன் ஆங்கிலமும் தொடர்ந்தது. ஆனால் தீர்ப்புகள் நீதிமன்ற முடிவுகள் தமிழில் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இன்றைக்கு எத்தனை நீதிமன்றங்களில் தமிழில், முடிவுகள், தீர்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. அரைகுறை ஆங்கில அறிவுள்ள நீதிபதிகள்கூட, தப்பும் தவறுமாக, ஆங்கிலத்தில் அல்லவா தீர்ப்புக் கூறுகிறார்கள்!

மொழி பெயர்ப்பு மான்யம்!

மத்திய சட்டங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் உள்ளன. ஏறத்தாழ இன்றைய எண்ணிக்கைப்படி 5000 மத்திய சட்டங்கள் இந்தியாவில் உள்ளன. மாநிலச் சட்டங்கள் வேறு ஆயிரக்கணக்கில்! என்ன என்ன, சட்டங்கள் இருக்கின்றன என்று ஒரு வழக்கறிஞரை கேட்டால் அவரால் சொல்ல முடியாது. சட்டம்படிக்கும் மாணவர் இவ்வளவு சட்டங்கள் இருக்கின்றன என்று தெரிந்தாலே வேறு படிப்பிற்கு ஓடிவிடுவார். சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பில் 30 சட்டங்களுக்கு மேல் போதிக்கப்படுவதில்லை.

ஆனால் சட்டம் கூறுகிறது. சட்டம் தெரியாது என்று சாக்குக் கூறி எவரும் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்று! அப்படியென்றால், பாமர மக்கள் புரிந்து கொள்ளும் முறையில், எளிமையாக மாநில மொழிகளில் சட்டங்கள் கிடைக்க வழி செய்வது அரசின் கடமை அல்லவா? இந்தக் கடமையை நிறைவேற்றத்தான் மத்திய சட்டங்களை எளிமையாக மாநில மொழிகளில் மாற்றிக் கொள்ள, மாநில அரசுகளுக்கு மத்திய அரசின் அனுமதி பெற்றுக் குடியரசுத் தலைவரின் கையொப்பம் பெற்று வெளியிடுவதற்கு, ஒரு பக்கத்திற்கு ரூ. 161 மான்யமாக மத்திய அரசு வழங்குகிறது. வெளியிடும் பொழுது மக்களுக்குச் சட்டம் மாநில மொழியில் கிடைக்கும் என்ற அறிவிக்கும் முறியில் வெளியீட்டு விழா நடத்தப்பட்டால், அந்தச் செலவையும் மத்திய அரசு ஏற்கிறது!

இந்தியாவிலேயே மத்திய சட்டங்கள் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்ய அக்கறை காட்டாத மாநிலம் தமிழ்நாடுதான். மிகவும் குறைந்த மான்யம் பெறும் மாநிலமும் தமிழ்நாடுதான்!

மூன்று முறை முதலமைச்சரான கருணாநிதி சாதித்தது இதுதானா? என்று கேட்டால் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்ன செய்தார்கள் என்பார் அவர்! கேள்விக்கு கேள்வியே பதிலாக வரும்! மத்திய அரசு மான்யம் பெற்று வெளியிடக் கூடிய மத்திய சட்டங்களே தமிழில் வெளிவர வில்லை என்றால் நேற்றைய தமிழ்நாட்டுச் சட்டங்கள் என்று தமிழில் வெளிவரும்.

அக்கறை இல்லை!

இந்த ஆண்டு பிப்ரவரி வரை 107 மத்திய சட்டங்களும் 51 தமிழ்நாட்டுச் சட்டங்களும், தமிழில் மொழி பெயக்கப்பட்டுவிட்டன என்று கூறுகிறார்கள். ஆனால் வெளியிடவில்லை! வெளிவரவில்லை! ஏன்? அரசுக்கு அக்கறை இல்லை.

இந்திய அரசமைப்புச் சட்டம் தமிழில் வெளியிடப்பட்டதா?

இந்திய அரசமைப்புச் சட்டம், வெளிவந்து 31 ஆண்டுகள் கழித்து 1981ல் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த மகராசன், ஆட்சி மொழி ஆணையத்தின் தலைவராக இருக்கும்பொழுது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த மொழி பெயர்ப்பில் பல தவறுகள் இருப்பதாக அப்படியே கைவிடப்பட்டது. பின்னர் 1988 இல் ஆளுநர் அலெக்சாண்டர் ஆட்சியில் சில திருத்தங்களுடன் அறிவிப்பின்றி வெளியிடப்பட்டு விற்கப்பட்டது. திரும்பவும் தி.மு.க. ஆட்சியில் சில திருத்தங்கள் மொழி பெயர்ப்பில் செய்யப்பட்டது. அதற்குள் தி.மு.க. ஆட்சி முடிந்து விட்டது. ஜெயலலிதா ஆட்சியில் அது வெளியிடப்பட்டது. விழா இல்லை. அத்தோடு கதை முடிந்து விட்டது.

மற்ற மாநிலங்கள் அவைகளுடைய மாநில மொழிகளில் முறையே அரசமைப்புச் சட்டத்தை மொழி பெயர்த்து விழா எடுத்து வெளியிட்டன. பல பதிப்புகள் வந்து விட்டன. மிகவும் குறைந்த பதிப்புகள் வெளியிட்ட மாநிலம் ஒரிசா, அங்குக் கூட மூன்று பதிப்புகள் வெளி வந்துவிட்டன.

சாதனையா?

ஏன் தமிழ்நாட்டில் அரசமைப்புச் சட்டம் கூட குறையின்றி, முறையாக, முழுமையாக வெளிவரவில்லை. மூன்று முறை முதல்வராக இருந்து கருணாநிதி தமிழுக்கு ஆற்றிய தொண்டு இதுதானா? ஜெயலலிதாவின் 10 ஆண்டுகள் சாதனை இதுதானா? கேட்பதில் தவறில்லை!

அரசாணைகள் ஆங்கிலத்தில்தான்!

தமிழ்நாடு அரசிடம் இருந்து வரும் ஆணைகள் பல ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. காரணம் என்ன தெரியுமா? கருணாநிதி முதலமைச்சராக இருக்கையில் தமிழில் எல்லா அரசாணைகளையும் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தால். ஆனால் முரசொலி மாறன் அதற்குத் தடையாக நின்றார். தமிழில் அரசாணைகள் வந்தால் மற்ற மாநிலத்தவர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்றார். வெளி நாட்டினர் வருத்தப்படுவார்கள் என்றார். வெளி நாட்டு மூலதனம் கிடைக்காமல் போகும் என்றார். ஆங்கிலத்தில் மட்டும் ஆணைகளை அரசு வெளியிட வேண்டும் என்று கருணாநிதிக்கு அறிவுறுத்தினார். அதை மாறனின் திருமறையாக ஏற்று, அரசாணைகளை ஆங்கிலத்தில் அரசு வெளியிடலாம், தமிழிலும் வெளியிடலாம் என்றார் கருணாநிதி!

நீங்கள் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் பார்த்திருப்பீர்கள். தமிழிலும் அர்ச்சனை செய்யலாம் என்று எழுதி இருக்கும். அரசாணைகள் வெளியிடுவதில் தமிழிலும் வெளியிடலாம் என்று கூறியவர், செய்தவர் கருணாநிதி! ஜெயலலிதா பற்றி சொல்லவே வேண்டுவதில்லை! அவருக்கு ஆங்கிலம் தான் பிடிக்கும்! தமிழைப் பற்றி அவருக்குக் கவலை இல்லை!

அரைகுறை!

மற்றவர்களைப் பற்றிப் பேசுவானேன்? எப்பொழுதும், அரைகுறையாக ஆங்கிலம் படித்தவர்கள், இந்தி படித்தவர்கள், ஆங்கிலம் பேசுவதை இந்தி பேசுவதைப் பெருமையாகக் கருதுவார்கள்.

செம்மொழி!

கருணாநிதி தமிழ் மொழி செம்மொழி தகுதி பெற்று விட்டது என்று கூறுகிறார். இந்திய அரசு செப்டம்பர் 2004 இல் அறிவிப்புச் செய்ததால் தமிழ் செம்மொழியாகி விட வில்லை. அது விளம்புகை தான்! தமிழ் செம்மொழியாக என்றோ வளர்ந்து விட்ட மொழி! பிப்ரவரி 5,2006 அன்று நெய்வேலி வந்து பிரதமர் மன்மோகன்சிங் தமிழைச் செம்மொழியாக்கி விட்மோம் என்று கூறகிறார். இவர் என்ன தமிழில் இலக்கியம் படைத்தாரா? இலக்கணம் வகுத்தாரா? அதைக் கேட்டு புளகாங்கிதம் அடைகிறது ஒரு கூட்டம்! போகட்டும்!

உயர்நீதிமன்ற மொழி!

உயர்நீதிமன்ற மொழி, உச்ச நீதிமன்ற மொழி, ஆங்கிலம் என்று அரசமைப்புச் சட்ட உறுப்பு 348 கூறுகிறது. ஆனால் அந்த உறுப்பின் இரண்டாவது பிரிவு, அதாவது உறுப்பு 348(2) ஒரு மாநில ஆளுநர், குடியரசு தலைவரின் ஒப்புதல் பெற்று அந்த மாநிலத்தில் உள்ள ஆட்சி மொழியை, அந்த மாநிலத்தில் உள்ள நீதிமன்றம், அதன் செயல் முறைகளில் நடைமுறைகளில் விசாரணைகளில், உயர் நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்த வேண்டும். பின்பற்றப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கலாம் என்று கூறுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள உயர் நீதிமன்றத்தில் அரசு நினைத்தால் தமிழையும், நீதிமன்ற மொழியாக்கலாம்! இதற்குச் சட்டம் கூடத் தேவையில்லை. அரசமைப்புச் சட்ட உறுப்பு 348(2) படி மாநில ஆளுநர், குடியரசுத் தலைவர் சம்மதத்துடன் ஆணை வெளியிட்டால் போதும்! அப்படியொரு ஆணை வெளியிட தமிழ்நாடு அரசு முயற்சி செய்தால் அதற்கு சம்மதம் கொடுக்கக் குடியரசுத் தலைவரான தமிழர் அப்துல்கலாம் மறுத்தா விடுவார்? தமிழ்நாடு அரசு நீதிமன்ற மொழியைப் பற்றி கவலைப்படுவதில்லை! ஏன் நீதிமன்றத்தின் பெயரைப் பற்றிக்கூடக் கவலைப்படுவதில்லை.

பெயர்பற்றிக் கூடக் கவலைப்படுவதில்லை!

தமிழ்நாட்டில் உள்ள உயர் நீதிமன்றத்தின் பெயர் மெட்ராஸ் உயர் நீதிமன்றம் தான். சென்னையின் பெயர் மெட்ராஸ் தான், உயர் நீதிமன்றத்தைப் பொறுத்த வரை இன்றும்!

தமிழின் நிலை!

தமிழில் உயர் நீதிமன்றத்துக்குப் பெயர் மாற்றம் கூட முயற்சி செய்யாதவர்கள், தமிழை நான் தான் செம்மொழியாக்கினேன் என்று பேசுகிறார்கள். அவர்களைப் பாராட்ட ஒரு கூட்டம்! இதுதான் தமிழ்நாட்டில் தமிழின் நிலை!

தமிழை முதலில் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்

தமிழ்நாட்டில் தமிழ் மொழியை கட்டாயப்பாடமாக்கலாம். அரசு கொள்கை அடிப்படையில் தமிழ் மொழியை எல்லாப் பள்ளிகளிலும், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளிலும் கூடக் கட்டாயப் பாடமாக்கலாம். அதில் தவறில்லை. உச்ச நீதிமன்றம் கூடத் தமிழ் மொழியைத் தமிழ் நாட்டில் ஆரம்பம் மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கும் ஆணையை ஏற்றுக் கொள்ளும்.

உதாரணமாகக் கூறின், கருநாடக மாநிலம், கன்னடத்தைச் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக்கியது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஒரு மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குவது சிறுபான்மையினர் மீது மாநில அரசு திணிக்கும் தேவையற்ற சுமை என்று கூறப்பட்டது. உச்ச நீதிமன்றம் அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அந்த மாநிலங்களில் அந்த அந்த மாநில மொழியைச் சிறுபான்மையினர் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக்கலாம் என்று தீர்ப்புக் கூறியது! தமிழ்நாட்டில் வாழ விரும்புபவர்கள் அனைவரும் தமிழைக் கட்டாயமாகப் படிக்கத்தான் வேண்டும்!

மகாராஷ்டிரா மாநிலத்தில், மராத்திய மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கியது மகாராஷ்டிர அரசு. சிறுபான்மையினர் நடத்தும் பள்கிள் அதை எதிர்த்தன வழக்குத் தொடர்ந்தன. வழக்கு உச்ச நீதிமன்றம் சென்றது! உச்ச நீதிமன்றம் உஷா மேத்தா எதிர் மகாராஷ்ட்டிரா மாநில அரச (USHA MEHTA AND OTHERS Vs. STATE OF MAHARASHTRA - 2004(5) SUPREME 102) என்ற வழக்கில், மராத்தி மொழியை மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் சிறுபான்மையினர்ப் பள்ளிகள் உள்பட எல்லாப் பள்ளிகளிலும், கட்டாயப் பாடமாகப் புகட்ட வேண்டும் என்று

கட்டளையிடும் மகாராஷ்ட்டிரா அரச ஆணை செல்லும் என்றது; ஏற்புடையது என்றது.

மொழியின் வளர்ச்சி மக்களின் வளர்ச்சி!

ஒரு மொழியின் வளர்ச்சி, அந்த மொழியைப் பேசுபவர்களின் வாழ்வோடு பிணைந்து இணைந்து இரண்டறக் கலந்து இருக்கும். தமிழ் வளர வேண்டும் என்றால், தமிழ் மக்கள் வளர வேண்டும். நேற்றைய செம்மொழிகள் பல இன்று காணாமல் போய்விட்டன, பேசுபவர்கள் இல்லாத காரணத்தால்! தமிழ் ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டும். நீதிமன்ற மொழியாகவும் இருக்க வேண்டும். எங்கும் எதிலும் இருக்க வேண்டும், வளர வேண்டும்!

தமிழர்களின் தெறிப்பளவு

2	கண்ணிமை	-	1 நொடி
2	கைநொடி	-	1 மாத்திரை
2	மாத்திரை	-	1 குரு
2	குரு	-	1 உயிர்
2	உயிர்	-	1 சணிகம்
12	சணிகம்	-	1 விநாடி
60	விநாடி	-	1 விநாடி - நாழிகை
2½	நாழிகை	-	1 ஒரை (1 மணி நேரம்)
3¾	நாழிகை	-	1 முகூர்த்தம்
2	முகூர்த்தம்	-	1 சாமம்
4	சாமம்	-	1 பொழுது
2	பொழுது (பகல் + இரவு)	-	1 நாள்
15	நாள்	-	1 பக்கம்
2	பக்கம் / 30 நாள்	-	1 மாதம்
6	மாதம்	-	1 அயனம்
2	அயனம்	-	1 ஆண்டு
60	ஆண்டு	-	1 வட்டம்

பக்கம் = வளர்பிறை (அ) தேய்பிறை
திங்கள் = வளர்பிறை + தேய்பிறை; நிலவு பூமியை ஒரு சுற்று வருவதற்கு எடுத்துக் கொள்ளும் நாள்கள்
அயனம்= கதிரவனின் வட, தென் திசைப் பயணக் காலம்
ஆண்டு = இரண்டு அயனங்கள் (வட + தென்)

16. தமிழ் மொழியாம்....

(வானரங்கள் கனிகொடுத்து மெட்டு)

முனைவர் **இரா. கலைவாணி**
கோயமுத்தூர்.

வானுயர வளமை பெற்று வாழ்ந்த தமிழ் மொழியாம்
வள்ளலென வள்ளுவத்தைத் தந்த தமிழ் மொழியாம்
கோனுயர கோடி கவி உதிர்த்த தமிழ் மொழியாம்
கோபுரமாய்த் தலை நிமிர்ந்து நின்ற தமிழ் மொழியாம்

சங்கம் வைத்து வளர்த்து வந்த தங்கத் தமிழ் மொழியாம்
பொங்கும் இன்பம் எங்கும் தங்கும் எங்கள் தமிழ்மொழியாம்
திங்கள் ஒளி போல் திகழும் திலகத் தமிழ் மொழியாம்
மங்கல மலர் போல மணம் வீசும் தமிழ் மொழியாம்

புலவர் பலர் போற்றிவந்த பொற்சுடர் தமிழ் மொழியாம்
புதுமை என்னும் பெயரில் இன்று பிறழ்ந்திடும் தமிழ் மொழியாம்
வளரும் சிறு பிஞ்சுகள் நா மறந்த தமிழ் மொழியாம்
வேற்றவர்கள் சூழ்ச்சியினால் வீழ்ந்த தமிழ் மொழியாம்

தமிழர் மொழி தமிழ் என்னும் உணர்வைப் பெற வேண்டும்
தம்பெயரைத் தலை எழுத்தைத் தமிழில் இடவேண்டும்
தமிழ் மொழியில் கல்விப்பயிர் வளர்த்திடவும் வேண்டும்
தமிழ் நாட்டின் ஆட்சி மொழி தமிழே என வேண்டும்

தமிழினம் என்ற மொழியினம் என்னும் தனி உயர்ப் பற்று வேண்டும்
தரணியெங்கும் தமிழர் உயர்ந்த செய்தியும் என்றும் வேண்டும்
தருமம் காக்கும் நீதி மன்றம் தமிழில் (பேச) வழங்க வேண்டும்
தன்னிகரில் லாததமிழ்க் கொடி தழைத்திட வேண்டும்.

17. தமிழுக்குத் தன்னைக் கொடுத்தோன் சாவதில்லை

லயன். இரா. வேள்பாரி
பொருளாளர், மாயூரம் லயன்ஸ் கிளப்.

தேமதுரத் தமிழோசை இன்று உலகெலாம் பரவி நின்று, சிறந்து வருகிற தென்றல் அதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அறிஞர்கள், புலவர்கள், தியாகிகள்தாம் நம் கண்முன்னே வருகிறார்கள்.

சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப்பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே

என்ற பாவேந்தரின் வரிகள் இங்கே பொருந்திநிற்கின்றன. மொழியின் வளர்ச்சி என்பது ஒரு சமூகத்தின் கலாச்சாரப் பண்பாட்டு அடித்தளத்தோடு தொடர்புடையது. மொழி சீர்குலைந்தால் அதன் விளைவுகள் சமுதாயத்தையே முடக்கிவிடும். ஈராயிரம் ஆண்டுகள் பழமையுடைய நம் தாய் மொழியாம் தமிழுக்காக, தன்னுயிர் (உடல், பொருள், ஆவி) கொடுத்துத் தமிழைத் தழைக்கச் செய்தவர்கள் என்று நம் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

சாகும் வரை தமிழ்படித்துச் சாக வேண்டும் - நம்
சாம்பலிலும் தமிழ்மணமே வீசவேண்டும்

என்ற சிந்தனைவரிகள் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவர் இரத்தத்திலும் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும்.

வானளந்த தனைத்தும்
தானளந்த தமிழ் - வையத்தின்

மூத்த மொழி என்று அறிஞர்களால் போற்றப்படுகிறது.

தன்மானம் நிறைந்த ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மண்ணையும் தாய்மொழியையும் எக்காரணத்திற்கும்

விட்டுக்கொடுத்து வாழமாட்டான். நாடும் மொழியும் நமதிருகண்கள் - அந்தக் கண்களைப் பழுதாக்க முடியுமா? பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன, அவ்வாறே தாய்மொழியும் - நம் உயிரோடு கலந்த ஒன்றன்றோ!

சாத்திரங்கள் சூத்திரங்கள் சொன்ன தமிழ்
சரித்திரங்கள் பலகண்ட வெற்றித்தமிழ் - வேற்றுமொழி
வேரறுக்க வந்த தமிழ் - வெற்றிக்கொடி நாட்டுகின்ற
வீரத்தமிழ்
திருவள்ளுவரின் முப்பால் குடித்துக்
கம்பரின் காவிய வெளிச்சத்தில்
இளங்கோவன், முத்தமிழைச் சுவைத்து

ஆழ்வார்கள், நாயன்மார்களின் பாசுரங்களில், பிரபந்தங்களில் இறைவனோடு உறவா பாரதி, பாரதிதாசனின் சமூகவியலோடு கைகோத்து காலத்தை வென்று நிற்கின்றது. தமிழ், அதன் வேருக்குத் தண்ணீராக தியாகிகள் தங்கள் இரத்தத்தைச் சிந்தியதும் தமிழ்க்கொடிபடர சூரிய ஒளியாக, தியாகி சாரங்கபாணி போன்றவர்கள் தங்கள் பொன்னுடலையே மெழுகுவர்த்தியாக ஏற்றிவைத்தார்கள் என்பதையும் எண்ணிப் பார்ப்பதே எதிர்காலத்திலும் தமிழ் ஏறு நடைபோட ஏற்றவழியாகும். தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லைத் தமிழ்ப்பற்றாளன் சாரங்கபாணி சாகவில்லை

தமிழ் உள்ளவரை வாழ்வார்... வாழ்கிறார்...

திராவிட மொழிகளுள் தமிழ்மொழியே மிகத் தொன்மை வாய்ததும் சொல்வளம் பொருந்தியதுமாகும்; மிகவும் சீர்திருந்திய உயர்தனிச் செம்மொழியும் ஆகும்.

- கிரையர்சன்

சமற்கிருதத்திற்கு முந்தியது பிராகிருதம். பிராகிருதத்திற்கு முந்தியது திராவிடம். திராவிடத்திற்கு முந்தியது பழந்தமிழ்.

- தேவநேயப் பாவாணர்

சா. 8

18. தமிழர் வளர வழிகள் ஒரு முன்னோட்டம்

க.ப. அறவாணன்

தமிழர் வரலாறு நெடுகிலும் நம் முன்னோரும், நாமும் பெற்றிருந்த குறைகளைச் சலித்து எடுத்துப் பார்த்து அவற்றை இனியாவது வாராது தடுக்க முயன்றால்தான் தமிழர்க்கு வருங்கால உலக மண்ணில் கையளவாவது சொந்த இடம் வாய்க்கும், இன்றேல் இல்லை, இல்லவே இல்லை.

நாம் ஒட்ட ஒழிக்க வேண்டிய நம் குறைகள் எவை?

தனி மனித அளவில், 1. தாழ்வு மனப்பான்மை, 2. போர்க்குணம் இன்மை, 3. தொலைநோக்கு இன்மை. சமூக இயல் அடிப்படையில், 1. கூட்டுணர்வு இன்மை, 2. ஒற்றுமை இன்மை, 3. சாதிப் பகைமை

அரசியல் அடிப்படையில்

மொழிவழித் தேசியம் ஏற்கப்படும் அரசியல் சாசனத்தைச் சுவீஸ் மாதிரியில் அமைக்காமை.

பொருளியல் அடிப்படையில்

தமிழர்கள் பொதுவாகக் கூலிகளாகப் பணிந்து ஊழியம் செய்பவர்களாக இருந்தமை. தொழில் முனைவோர்களாக இல்லாது இருக்கின்றமை.

இவற்றிலிருந்து விடுபட்டுத் தமிழர் ஏனைய தொல் இனங்களுக்கு நிகராக வர முடியும். வர வழிகளாவன:

பொருளியலில் புதுமை ஆற்றல்

1. பொருளாதார, சமூக, அரசியல் என அடிப்படை அலகுகள் மூன்றிலும் 50 ஆண்டுகள் ஆகியும், குறிப்பிடத்தக்க எதனையும் இதுவரை சாதிக்காத இந்திய அரசியல் சாசனத்தைக்

கால வளர்ச்சிக்கேற்ப மாற்றிப் புதிய அரசியல் சாசனம் ஒன்றை உடனடியாக உருவாக்க வழி செய்தல்.

2. அவ்வாறு உருவாக்கும்போது, ஏழ்மையில் இருந்து கடந்த இருப்பத்தைந்து ஆண்டுகளில் வளர்ந்து மகத்தான சாதனை புரிந்துவரும், சப்பான், சிங்கப்பூர், சீனா, தென்கொரியா ஆகிய நாடுகளின் அரசியல் சாசனத்தைத் துணையாகக் கொண்டு, இந்தியத் தன்மை இழைந்த ஓர் அரசியல் சாசனத்தை வரைதல்.

3. இந்தியன் ஒவ்வொருவனுக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக உண்ணப் போதிய உணவு, உடுக்க உடை, இருக்க இடம், பணி செய்ய ஒரு வேலை ஆகிய நான்கும் கிடைத்தே தீர வேண்டும் என்ற நோக்கில், குறுவட்டத் தொழிற்பேட்டைகளை வட்டந்தோறும் தொடங்குதல்.

4. இந்திய இராணுவம் முழுவதையும் அப்படியே ஈடுபடுத்தி, 10 ஆண்டுகளுக்குள், பணி முடித்தே தீரும் வண்ணம் கங்கை-காவிரி இணைப்பை அமைத்தே தீருதல்.

5. சாதி, மத, மொழி, இனத்தின் பெயரால் சங்கமோ, கூட்டமோ, ஊர்வலமோ, மாநாடோ நடத்துவதை முற்றுமாகத் தடை செய்தல்.

6. ஒதுக்கீடு, சிறுபான்மை உரிமை அனைத்தையும் இரத்து செய்தல்.

7. மாநிலங்களுக்கிடையே ஆங்கில மொழி ஒன்றே சிங்கப்பூர் போன்று இணைப்பு மொழியாக அறிவிக்கப்படல். பள்ளி கல்லூரிகளில் ஆங்கிலம் கட்டாயம் இரண்டாவது மொழியாக்கப்படல்.

8. ஏனைய மொழிகள் அனைத்தும் சம உரிமை பெற்ற தேசிய மொழிகளாக ஒப்புக் கொள்ளப்படுதல். எல்லாத் தேசிய மொழிகளும், இனங்களும் ஒரவஞ்சனையின்றி வளர்க்கப்படுதல்.

9. தம்பதியினருக்கு இனி ஒரே குழந்தை. இரண்டாவது குழந்தை எனில், குடும்பத்திற்கும், குழந்தைக்கும் அரசு தரும் அனைத்துச் சலுகைகளையும் இரத்து செய்துவிடுதல்.

10. எஸ்.எஸ்.எல்.சி. வரை எல்லாருக்கும் கட்டாய இலவசக் கல்வி. அதற்கு மேல் பல்வேறு தொழிற்கல்வி,

மருத்துவக் கல்வி மட்டுமே. பிளஸ் 1, பிளஸ் 2, நாடெங்கும் உள்ள பொது, அறிவியல், கலைக் கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் மூடிவிடுதல்.

11. மாணவர் பயிற்சிக்கென வயல், தோட்டம், பல்தொழிற் கூடம் இல்லாத பள்ளியோ, கல்லூரியோ, பல்கலைக்கழகமோ இருத்தல் கூடாது. இருந்தால் மூடிவிடுதல்.

12. அரசும், தனியாரும் நடத்தும் அனைத்து அலுவலகம், தொழிலகம், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் முதலானவற்றில் பணியாற்றுவோர்க்கு விடுப்பு, விடுமுறை நாட்களுக்கு ஊதியம் தருதலை உடனே நிறுத்துதல், நிறுத்துதல் மூலம் கிடைக்கும் கோடிக்கணக்கான முதலீட்டைக் கொண்டு உற்பத்தியுடன் நேர்த்தொடர்புடைய புதுத் தொழிற்சாலை/ஆய்வுச்சாலைகளை அமைத்து, வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை கொடுத்தல்.

13. கூட்டுக் குடும்ப முறை உடைபட வேண்டும். வயதான பிறகும் சார்புணர்ச்சி உடையவராக இளைஞர்கள் இருப்பதற்கு இது ஒரு தலைமையான காரணம். பெண் தந்தையைச் சார்ந்தும், பின்னர்க் கணவனைச் சார்ந்தும், பின்னர் மகனைச் சார்ந்தும் வாழ வேண்டிய இக்கட்டிற்கு இதுதான் காரணம்.

14. எவன் இறந்தாலும், கைலாசத்தில் இருக்கிற சிவனே இறந்தாலும் விடுமுறை விடுவது, விழாக் கொண்டாடுவது, தொடர் இரங்கல் கூட்டங்கள் நிகழ்த்துவது, பொய்ப் புகழ்ச்சி புகல்வது ஆகியன முற்றுமாகத் தடை செய்யப்பெற வேண்டும்.

15. அலுவலகங்கள், அரசாங்க ஆட்சித் துறைகள், இன்ன பிற அனைத்திலும் இருக்கும் படி நிலைகள், அட்டெண்டர், பியூன், தட்டச்சாளர், எழுத்தர், மேலாளர், தலைமை மேலாளர் என்பன போன்ற படிநிலைகள் முற்றுமாக ஒழிக்கப் பெறுதல் வேண்டும். இந்த அமைப்புகள் நிலை பெறுவதன் மூலம் தனக்கு மேலே உள்ள அதிகாரிக்கு அஞ்ச வேண்டும். வணங்க வேண்டும், வழிபட வேண்டும் என்ற தலைமை வழிபாட்டு உணர்ச்சி வளர்க்க பெறுகிறது. அவன் கடமையை வணங்க வேண்டுமே தவிர, மனிதனை வணங்க வேண்டுதல் தேவையில்லை என்ற நிலை உருவாக்கப் பெறுதல் வேண்டும்.

16. ஊராட்சி, நகராட்சி, வட்ட, மாவட்ட, மாநில, மைய அரசு அலுவலகங்கள் அனைத்திலும் மையத்தை நோக்கிக் குவிக்கப் பெற்றிருக்கும் அதிகாரங்கள் பங்கீடு செய்யப் பெற்று அங்கங்கே பகிர்ந்தளிக்கப்பெற வேண்டும்.

17. பள்ளிக்கூடம் தொடங்கி, கல்வி நிறுவனம் ஒவ்வொன்றிலும் படிக்காத பாமர மக்களிடத்திலும், ஆங்காங்கே தலைமைப் பயிற்சி (தேர்தல் பயிற்சி இல்லை) தொடர்ந்து வழங்கப் பெறுதல் வேண்டும்.

*18. 17*முதல் *20* வயதில் இலுக்கும் இளைஞர்களின் சுறுசுறுப்பான மனித ஆற்றலை மிக அருமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குச் சில வழிமுறைகள்.

கங்கை-காவிரி இணைப்பில் ஈடுபடுத்திக் கொள்ளுதல்.

40 விழுக்காடாக இருக்கும் கல்லாமையை அகற்ற அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்துதல்.

சிறுசிறு சாலைகளை அமைக்கப் பயன்படுத்துதல்.

பசுமை அழிந்து, பாலைவனக் காடாக இருக்கும் நம் நாட்டின் பகுதிகளில் ஆங்காங்கே சிறு மரக்கன்றுகளை இலட்சக்கணக்கில் நடுவதில் ஈடுபடுத்துதல்.

ஊர், நகரங்களைத் தூய்மைப்படுத்துதல், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல், மருத்துவமனையில் தொண்டு செய்தல்.

19. இந்தியாவைப் பெரிய ஐந்து வட்டாரமாகப் பிரித்து, தலைமை அமைச்சர் பொறுப்பு, ஆண்டு ஒன்றிற்கு ஒவ்வொரு வட்டாரத்தினரிடமும் சுவிட்சர்லாந்து போல சுழற்சி முறைப்படி வந்தமையவும், நான்கு துணைத் தலைமை அமைச்சர் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டு தலைமை அமைச்சர் பொறுப்பை அடையாத ஏனைய நான்கு வட்டாரத்திற்கும் மொழிவாரியாக வரும்படி சுழற்சி முறை பின்பற்றப்படுதல்.

தேர்தல் மாற்றங்கள்

20. அடுத்த தேர்தலில் இருந்தாவது, மாநிலங்களில் மக்கள் தொகைக்கு ஏற்ப எம்.பி., எண்ணிக்கையை வழங்காமல், மாநிலம் ஒவ்வொன்றிற்கும் ஒரே எண்ணிக்கை எம்.பி. என்றமைப்பது,

..ம.பி. வேட்பாளரின் தகுதி-முதுநிலை, எம்.எல்.ஏ.வின் தகுதி-பட்ட நிலை, ஓட்டர்களின் தகுதி - எஸ்.எஸ்.எல்.சி., சாதி வழி ஒதுக்கீட்டு அமைப்பு ரத்து, ஊழல் செய்வோரைத் திரும்பப் பெற வாக்காளர்க்கு உரிமை வழங்கப்படல், சுவிட்சர்லாந்தைப்போல.

21. தேர்தலில், தத்துவத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் கட்சிகளுக்கு இடம் வழங்கப்படுதல்.

22. ஊராட்சி, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் எந்த ஆண்டில், மாதத்தில், நாளில் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை எந்தத் தனி மனிதர் கையிலும் கொடுக்கப்படக் கூடாது. காலண்டர்தான் தீர்மானிக்கும். தீர்மானிக்க வேண்டும்.

23. ஊராட்சி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள், அமைச்சர் என எவருக்கும், பொதுமக்கள் செலவில் வீடு, கார், வசதி, பாதுகாப்பு முதலான அனைத்தும் ஸ்வீடனைப் போல இல்லாதிருத்தல் வேண்டும். ஒரு கம்பெனி எக்ஸிகியூட்டிவ் போல அவரும் ஊதியத்திற்கு வேலை செய்தல் வேண்டும் அவ்வளவுதான்.

24. கட்சி வழித் தேர்தல் என்பது இந்தியச் சூழலுக்கு ஏற்பு இல்லாதது. போதிய முதிர்ச்சி பெறாத இந்திய வாக்காளர்க்குப் பொருத்தம் இல்லாதது. எனவே, கட்சிவழித் தேர்தல் முறையை முற்றுமாக ஒழிக்க வேண்டும். கட்சிகளற்ற பொதுத் தேர்தல் முறை ஆதி கிரேக்கத்திலும், ஆதி தமிழ் நாட்டிலும், இடைக்காலச் சோழர்கால உத்திரமேரூர் போன்ற இடங்களிலும் நடைமுறையில் முழு வெற்றியுடன் நடந்தது. கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் கட்சிவழித் தேர்தல் முறை உள்ளாட்சியில் கடைப்பிடிக்கப்படவில்லை. அது தேவையாகவும் இருக்கவில்லை. கட்சி அடிப்படையற்ற தேர்தல் முறையைச் சட்டப் பேரவைத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் நாம் விரிவுபடுத்தி இருக்க வேண்டும். எதிரிடையாக அனைத்தையும் அரசியல் மயப்படுத்துவது எனும் கொச்சைக் கொள்கையால் கட்சி வழிப்படுத்தியது தவறே. கட்சி அடிப்படை இன்றியே நல்லோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையை உள்ளாட்சி, சட்டமன்ற, நாடாளுமன்றக் களங்களிலும் நாம் திட்டமிட்டுக் கொண்டுவர முடியும். இது அண்மையில் செழிக்கப்

படர்ந்துள்ள சாதி, மத, வட்டார முள்செடிகளைப் பூண்டிலேயே கிள்ளி எறிந்து விடும்.

25. மேயர், நகராட்சித் தலைவர், ஒன்றியத் தலைவர், பேரூராட்சித் தலைவர் ஆகியோரை மக்கள் நேர்முகமாக வாக்கு அளித்துத் தெரிவு செய்தலைப் போல நாட்டின் முதலமைச்சரையும் நாட்டின் பிரதமரையும் மக்களே நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை வருதல் நல்லது. இம்முறையால் பல்வேறு நன்மைகள் கிடைக்கும்.

அடிக்கடித் தேர்தல் நடப்பது தவிர்க்கப்படும். கவுன்சிலர், எம்.எல்.ஏ., எம்.எல்.ஏக்களை இரகசியமாகப் பணம் கொடுத்து வாங்கும் மறைவு முறை விடை பெற்று விடும்.

26. வாக்குமுறை பெற்றோர் ஒவ்வொருவரும் வாக்களிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். இதற்கேற்ப ஒவ்வோரிடத்திலும் வாக்குச்சாவடியை அமைப்பதற்குப் பதிலாக வாக்குகளைச் சேகரிக்கும் பேருந்து வாக்குசாவடிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வாக்குப் பேருந்துகள் போதிய பாதுகாப்புடன், எல்லாத் தெருக்களுக்கும் அனுப்பப்பெற்று, தெருமுனைதோறும் நிறுத்தப்பெற்று வாக்கைச் சேகரிக்கும் முறை கொண்டு வரப்பெறுதல் வேண்டும். மலைப்பகுதிகளில் இதனை நடைமுறைப்படுத்துவதில் இடையூறு இருப்பினும் அதற்கும் வழிமுறைகளை நாம் கண்டறிந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

27. வாய்ப்பு இருக்கும் இடங்களிலெல்லாம் உத்திரமேரூர் சதுர்வேதிமங்கலத்தில் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டளவில் தொடர்ந்து நடந்து வந்த குடவோலை முறையைப் பயன்படுத்துவது பற்றி நாம் சிந்தித்தல் வேண்டும். தற்போது உள்ளாட்சித் துணைத் தலைவர் தேர்தல்களில் மறைமுக வாக்களிப்பு முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் அனைத்து வகையான இலஞ்ச முறைகள் கையாளப்பெற்றன. உறுப்பினர்கள் கடத்தப்பட்டனர். மறைத்துக் காக்கப் பெற்றனர். வேட்பாளர் தகுதிகளாக நாம் வரையறுத்து இருப்பவை போதுமானவை அல்ல. ஈராண்டுக்கு மேல் தண்டனை பெற்றவர் மட்டும்தான் தேர்தலில் நிற்பதற்கான தகுதியை இழப்பர் என்பது சிரிப்புக்குரியது. ஓராண்டு, ஆறுமாதத் தண்டனை பெற்றவர் நல்லவரா? வயிறு குலுங்கக் குலுங்க நகைக்க இடம் தரும் வரைமுறை இது.

இவற்றைத் தவிர்க்க ஒரே வழி குடவோலை முறைதான். அல்லது தலைவரைத் தேர்ந்தெடுக்க அறிமுகப்படுத்தப் பெற்ற நேர்முக வாக்கு அளிப்பு முறையைத் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கவும் நாம் அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

தமிழ் வழி நிலைபெறல்

28. தாய்மொழியை அனைத்துக் கட்டத்திலும் பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் வழிபாட்டு மொழியாகவும், அனைத்துக் கட்ட மொழியாகவும் ஆக்குதல் வேண்டும். மொழி இங்கே ஒரு கருவியாக மட்டும் செயல்படவில்லை. முடியாது என்ற முடக்கு வாதத்தின் ஊனத்தை ஒடித்து நம்பிக்கை கொள்பவர்களாக ஆக்க மொழி ஒன்றால்தான் முடியும். கல்லாதவர் கற்றவரிடையே தனக்கு அனைத்தும் தெரியவில்லையே என்றும், போதிய ஆங்கிலம் தெரியவில்லையே என்றும், ஆங்கிலத்தில் பேசத் தெரியவில்லையே என்றும், எழுதத் தெரியவில்லையே என்றும், மனத்தால் நினைந்து முடங்கிக் கிடக்கின்ற ஆற்றல் உடையவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். இவர்களை விடுவிக்க ஒரே வழி, அவர்கள் மொழியாலும் அனைத்தும் முடியும் என்ற செயல்படுத்துவதன் மூலம் நம்பிக்கை ஊட்டுவதே.

29. தமிழில் அறிவியல் நூல்கள் பெருக தனிக்குழு அமைத்து நூல்களை வெளியீடு செய்ய வேண்டும்.

பரிசுத் திட்டங்களை வைத்து வெளியிட ஊக்குவிக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களே தகுதி வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு அறிவியல் நூல்களை வெளியிட வேண்டும்.

அறிவியல், கலைஇயல் பட்டப்படிப்பு அத்துணையும் தமிழ் மயமாக்காவிட்டால், பல பாடப் பிரிவுகளுள் ஒரு பிரிவைத் தமிழில் எழுதச் செய்ய வேண்டும்.

அறிவியல், கலை இயல் ஆராய்ச்சிப் பட்டம் பெறுவோர் தம் ஆய்வுக் கட்டுரையைத் தமிழிலும் எழுதச் செய்தல் வேண்டும். அவை உடனுக்குடன் வெளியிடப் பெறல் வேண்டும். இதனால் தமிழில் அறிவியல் புது ஆய்வுகள் பெருக இடம் ஏற்படும்.

வெளிநாட்டினின்று புதிதாக வந்திறங்கும் பொருள்களுக்குத் துறைமுகத்திலேயே தமிழ்ப் பெயரைச் சூட்டி வெளியனுப்ப ஒரு குழுவை அங்கே நிரந்தரமாக அமைக்க வேண்டும். இதனால் இனி வரும் புதுக் கண்டுபிடிப்புகள் எளிதில் தமிழ் உருவம் பெறும்.

தமிழ்நாட்டில் வெளியாகும் நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்களிதழ்கள் (தமிழில் வெளிவருவன மட்டும்) அந்தக் குழு சூட்டிய தமிழ்ச் சொல்லையே அப்பொருளுக்குச் சூட்டித் தம் இதழ்களில் பயன்படுத்த வேண்டும்.

மக்களை விளங்க வைக்கிறோம் என்றெண்ணிக் கொண்டு மக்களை மயங்க வைக்காமல், மக்களை அறிவுத்துறைக்கு அழைத்துச் செல்லும் முழுப் பொறுப்பு இதழாசிரியர்களையே சார்ந்துள்ளது. அவர்கள், தம் ஏடுகள் தமிழ் மொழியில் வெளியாகின்றன என்பதை மறந்துவிடாமல் செயல்பட வேண்டும்.

வாசிக்க வைத்தல்

30. நூலகத்திற்கு நூல்கள் வாங்கும் செலவைவிட நூலகத்தை நிர்வகிக்க அரசு மிகுதியாகச் செலவழிக்கின்றது. இந்நிலையை மாற்ற ஊரில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் ஊர் பொது நூலகத்தைக் கொண்டு செல்லுதல் மூலம் நூலகத்திற்கு எனத் தனிக் கட்டடம் அமைத்தலைத் தவிர்க்கலாம். பள்ளியில் பணியாற்றும் ஆசிரியரிடம் நூலகப் பொறுப்பை அளிப்பதன் மூலம் தனி நூலகர் அமர்த்தத்தைத் தவிர்க்கலாம். பள்ளிக்கு உள்ளே நூலகத்தைக் கொண்டு செல்லுதல் போலவே ஒவ்வொரு கோயிலின் உள்ளேயும் நூலகத்தை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பெறுதல் வேண்டும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்ற பழமொழியைப் போல் நூலகம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற புதுப்பழமொழி வழக்குப் பெறுதல் வேண்டும். நெடுந்தூரப் பகல் இரயில்களில் சான்றாகச் சென்னை, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பதி முதலான இரயில்களில் சிற்றுண்டிச் சாலை நடத்தப் பெறுகின்றது. அதுபோலப் புத்தகங்கள், இதழ்கள் வழங்கும், கடனாக வழங்கும் நூலகம் நம்மால் நடத்த முடியும். மூன்று நட்சத்திரத் தங்கும் விடுதிகள், தமிழக அரசின் தங்கும் விடுதிகள் என அனைத்திலும் கட்டாயம் ஓர் அறையை நூலகமாக

வைத்திருத்தல் வேண்டும். இதழ்களையும் புத்தகங்களையும் அவை கொண்டு இருத்தல் வேண்டும் என்பதையும், ஒவ்வோர் அறை தோறும் திருப்பிச் செலுத்துவது போன்ற புத்தகத்தை வைத்திருத்தல் வேண்டும் என்பதையும் ஒட்டல் நடத்தும் உரிமத்தை வழங்கும்போதே நிபந்தனையாக அமைத்தல் வேண்டும். இந்தச் சிறுசிறு முயற்சிகளை மேற்கொள்ளுதல் மூலம் நம்மிடம் வாசிப்பை வலிமைப்படுத்த முடியும். கல்வி எல்லையைப் பெரிதாக்க முடியும்.

நடமாடும் நூலக முயற்சிகள் நல்ல முறைகள். இவை நகரங்களில் மட்டும் ஓரளவு நடந்து வருகின்றன. இதில் ஒவ்வொரு சிற்றூரும் இணையும் அளவிற்கு விரிவுபடுத்த வேண்டும். அதுபோல நூல்களை விற்பனை செய்யும் இயங்கும் ஊர்திகளும் விரிவுபடுத்தப் பெறுதல் வேண்டும். தற்போது என்.சி.பி.எச். திராவிடக் கழகம் இதனைச் செய்து வருகின்றன. வேறு நிறுவனங்களும் இதுபோன்ற முயற்சிகளை மேற்கொள்ள அரசும், அரசு நிறுவனங்களும், வங்கிகளும் உதவுதல் வேண்டும். புத்தகத்தை நோக்கிப் படிப்போரை ஈர்த்தல் ஒரு பக்கம். படிப்போர் இருக்கும் இடத்தை நோக்கிப் புத்தகத்தைக் கொண்டு செல்லுதல் என்பதையும் மறுபக்கச் செயலாக நாம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பொது வாகனம் மட்டும்

31. பொது மருத்துவமனைகள் அரசினால் அமைக்கப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு மிக உதவியாக இருத்தலைப் போல மக்களின் புலப்பெயர்ச்சி பெருகிவிட்ட இந்நாளில் தனியார் வாகனப் பயணத்தைவிடப் பொது வாகனங்களுக்கு மிகுந்த வசதி செய்து தரப்பட வேண்டும். தனியார் வாகனங்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டால்கூடத் தாழ்வில்லை. சாலையில் பொது வாகனங்கள் மட்டுமே ஓடும் நிலை ஏற்பட்டால் சாலையில் இன்று உள்ள நெருக்கடிகள், விபத்துகள், மோதல்கள் பெரிய அளவு குறைந்து விடும். பொதுமக்கள் தம் வசதிக்கு ஏற்ப மிதிவண்டி, ஸ்கூட்டர், பைக், கார் என வேறு வாகனங்களை எடுத்துச் செல்வதும் தவிர்க்கப்பெற்று, அனைவரும் பொது வாகனங்களில் பயணிக்கும் வழக்கம் வர வேண்டும். இன்று ஐரோப்பிய, அமெர்க்க நாடுகளைப் பார்த்துக் காப்பி அடித்து அகலப்படுத்தாத

சாலைகளில் எல்லா வகை வாகனங்களையும் அனுமதித்து ஓடச் செய்கின்றோம். மாட்டு வண்டி முதல் மெர்சிடிஸ் பென்ஸ் வரை ஒரே சாலையில் ஓடுகின்றன. மாட்டு வண்டி மெர்சிடிஸாக மாறுவதற்குப் பதிலாக, முன்னே மெதுவாகச் செல்லும் மாட்டு வண்டியின் பின்னால் மெர்சிடர்ஸ் நகர வேண்டிய நிலைமை வந்துவிட்டது. சில நகரங்களைச் சோதனைக்கா எடுத்துக் கொண்டு தனியார் வாகனங்கள் அனைத்திற்கும் தடைவிதித்துப் பொது வாகனங்களை அனுமதிக்கும் முயற்சியை நாம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

வழிபாட்டில்

32. மதச் சார்பு இன்றித் தமிழர் வரலாறு நெடுக இருந்ததற்கான தடயமே இல்லை. இதுவே அவர்தம் வீழ்ச்சிக்கு ஒரு பெரிய காரணமாக இருந்திருக்கலாம். தமிழரை மிகமிக எளிதாக, நேராக,வேகமாகப் பாதிப்பன சமயங்களும், சமயச் சடங்குகளுமே. சபரிமலை ஐயப்ப வழிபாடு, ஆந்திர வெங்கடாசலபதி வழிபாடு, கர்நாடக முகாம்பிகை வழிபாடு முதலாயினவற்றுக்கு அன்னோர் எளிதாக ஆட்பட்டுவிட்டனர். என்வே, கடந்த காலத் தமிழர் வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று தமிழரிடமிருந்து அத்துணை எளிதாகச் சமய ஒட்டுதலை வெட்டிவிட முடியாது.

ஆளும் அரசுகளும், சுற்றி வாழும் சமுதாயங்களும், இல்லாமை, இயலாமை வாட்டங்களும் எதிர்பாராது தனக்கும் தன் குடும்பத்திற்கும் தரும் துயரங்களையும், உளவியல் ரீதியான ஏமாற்றங்களையும், துரோகங்களையும் இறக்கி வைக்க்ப் பாமரத் தமிழனுக்கு ஒரு வடிகால் தேவைப்படுகிறது. கோயில்களும், பிற வழிபாடுகளும், புனிதப் பயணங்களும் இன்று பாமரத் தமிழர்க்கு வடிகால்களாக இருந்து ஆறுதல் தந்து கொண்டு இருக்கின்றன. அறிவு அடிப்படை, அறிவியல் அடிப்படை எனும் ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர்க்குரிய அளவுகோல்களைப் பாமரத் தமிழர்கள் மேல் திணித்தால் நம் முயற்சி வெற்றி பெறாது.

பகுத்தறிவு இயக்கங்களாக விளங்கிய சமணம், பௌத்தம், பெரியாரியம், பொதுவுடைமை இயக்கம் ஆகியன பாமரத் தமிழர்கள் கொண்டாடும் இயக்கங்களாக நெடுங்காலம் நீடிக்காமல் போனமைக்குத் தமிழர்தம் உணர்ச்சிப் பூர்வமான மதப்பிணைப்பே பெரும் காரணமாகும்.

எனவே, தமிழர்க்கு எப்போதும் யாரையேனும் வழிபட வேண்டியிருக்கிறது. அதற்கென ஒரு மதம் தேவைப்படுகிறது. அது கடவுளை மறுக்கும் மதமாக இருத்தல் கூடாது. இதனை நாம் கருத்தில் கொண்டு தமிழரிடையே ஒரு மாற்று மதத்தை - வழிபாட்டை வளர்த்து எடுத்தல் வேண்டும். அதன் ஊடாகத்தான் தமிழ்மொழி, தமிழர்நேயம், தமிழ்த்தேசிய உணர்வு ஆகியவற்றை விதைத்தல் வேண்டும். விளைத்தல் வேண்டும். தற்போதைய மூட நம்பிக்கைச் சமயங்களுக்கு மாற்றுச் சமயமாக வள்ளுவரையும், வள்ளலாரையும், கண்ணகியையும் முதன்மைப்படுத்தலாம். அனைத்து மதம் சார்ந்த தமிழர்களின் பொதுமை வழிபாடாக இவற்றை வளர்த்தெடுக்கலாம்.

தமிழர் விளையாட்டுப் போட்டிகள்

33. உலகம் முழுவதும் வாழும் தமிழ் இளைஞர்கள் பங்கேற்கும் வண்ணம் பெரும்பெரும் விளையாட்டுப் போட்டிகளை அவ்வப்போது நடத்துவது. கிரேக்கத்தில் ஒலிம்பிக் விளையாட்டு, ஒலிம்பியா என்னும் மலையடிவாரத்தில் இப்படித்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. கிரேக்கர்கள் மட்டுமே பங்கெடுக்க முடியும் என்று வரையறை செய்ததால் 32 நகர நாடுகளில் பிரிந்து கிடந்து கிரேக்க மக்களைக் கிரேக்கர் என ஒரே குடியின் கீழ்க் கொண்டு வர முடிந்தது. இவ்வடிப்படையில் தமிழர்தம் மரபு வழி விளையாட்டுகளை நவீனப்படுத்தியும், விரிவுப்படுத்தியும் நடத்துதல் வேண்டும்.

34. ஐரோப்பிய நாடுகளிலும், சிங்கப்பூர், ஜப்பான் முதலான நாடுகளிலும் இருப்பது போல +2 முடித்த இளைஞர்களையும், அந்த வயது உள்ள பிற இளைஞர்களையும், கட்டாய இராணுவப் பயிற்சிக்கும், ஊர்ப்பொதுச் சேவைக்கும் இரண்டு ஆண்டுகள் உட்படுத்துதல் வேண்டும்.

தமிழர் மகமை முறை

35. சில சமுதாயங்களில் மகமை முறை அமைத்து, அதன்வழிப் பொருளாதார உதவி, உரிய சமுதாயத்தினர் அனைவருக்கும் நல்கிப் பெறுகிறது. அதுபோலவே தமிழர் மகமை முறைகள் எனும்பொது முதலீடு வைப்பாக்கப்பட்டு அதன் வழித் தமிழிளைஞர்க்கும், தொழில் முனைவோர்க்கும் ஊக்கம் அளிக்கப் பெறுதல் வேண்டும்.

ஒதுக்கீடுகளை ஒதுக்கல்

36. மெய்யாகவே தமிழர்கள் சாதியற்ற சமுதாயத்தைக் கட்டவும், கூட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு ஆகியவற்றை வளர்க்கவும் விரும்பினால் தமிழ், தமிழினம் என்பனவற்றை மட்டுமே முன்னிறுத்த வேண்டும். மற்றவற்றை விட்டுவிட அவர்களே முன்வருதல் வேண்டும். சாதிப் பிறப்படிப்படைச் சலுகை முறைகள் மாற்றப்பட்டு, பொருளியல், சமூகவியல், கல்வியியல், வேலை ஆகியன அடிப்படயாகக் கொள்ளும் முறை வந்தாக வேண்டும்.

கல்வியுலகில், தலைகீழ் மாறுதல்

37. உழவர்களின் நாடு, மிகுதியாகக் கிராமங்களை உடையது. வேளாண்மையே பெரும்பான்மைத் தொழிலாகும் என்ற அடிப்படைகளை உள்வாங்கி அவற்றுக்கு ஏற்றவாறு நம் பொருளாதாரத் திட்டங்களை அமைத்தல் வேண்டும். நமக்கு முன்மாதிரியாக ஐரோப்பாவையோ, அமெரிக்காவையோ கொள்ள வேண்டுவது இல்லை. நமக்கு நாமேதான் முன்மாதிரி. இதனை அண்ணல் காந்தி நன்கு உணர்ந்து இருந்தார். அவர்தம் கிராம நலம் தழுவிய பொருளாதார-கல்வித் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்தல் தகும்.

38. கல்லூரிகளில் மாணவர் உறவுத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். மாணவர் தொகைகளைக் குறைத்துப் பகுத்துத் தனித்தனி அறிவுரையாளர்களை நியமனம் செய்தல் வேண்டும். அவ் அறிவுரையாளர்கள் மாணவர்களுடன் நெருங்கிய உறவு கொண்டு குறை வழி தவிர்த்து நிறைநெறி காட்ட வேண்டும்.

39. மாணவர்களின் கலைத் திறமைகளை வளர்ப்பதற்கேற்பப் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பொழுதுபோக்குக் கழகங்கள், பயனுள்ள சிறு தொழிற் பயிற்சிகள், நல்வாய்ப்புகள் இவற்றை மிகுதிப்படுத்த வேண்டும்.

40. கல்லூரிகளின் பல்வேறு சங்கங்கள் சுறுசுறுப்பாக மிகுதியான மாணவர் பங்குபெறும் அளவில் செயல்பட வேண்டும்.

41. சிற்றுண்டிச் சாலை, அஞ்சலகம், உணவு அறை வசதிகள், வெளி மாணவர்கள் தங்கும் வசதிகள் முதலியன செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

42. மாணவருக்கும் நிருவாகத்திற்கும் இடையில் நிருவாகச் சிக்கல்கள், போட்டிகள் உருவாவதை முழுமையாகத் தடுத்துவிட வேண்டும். ஆனால், ஒவ்வொரு கல்லூரி நிருவாகமும் தம் கல்லூரி மாணவர்களுக்கு உண்டாகும் குறைகளைக் கேட்டறிந்து நிறைவு செய்வதற்காக அற மன்றங்களை வைத்திருக்க வேண்டும்.

43. இருபத்து நான்கு மணிநேரமும் கல்விக்காகச் செயல்படுமளவில் மாணவர் வாழ்வு முறை அமைக்கப்பெற வேண்டும்.

44. தேர்வு முறைகள் மாணவர்களுக்குப் பயம் காட்டும் பூச்சாண்டிகளாக அமைவதைத் தடுக்க வேண்டும்.

45. படிப்பதற்கான பாடத்திட்டம் வாழ்வோடு தொடர்புடையதாகவும், விரிவானதாகவும், சுவையானதாகவும், பயனுள்ளதாகவும் அமைக்கப்பட வேண்டும்.

46. மாணவர் நலனைப் பேண ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு தனியமைப்பு வேண்டும்.

47. மாணவர்கள் தலைமை ஏற்று ஆக்கச் செயல்கள் புரியப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

48. மாணவர் சிக்கல்கள் பற்றி வெளிப்படையாகக் கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

49. வகுப்பறைச் செயல்கள் சுவையாக நன்றாகத் திட்டமிட்டு நடத்தப்பட வேண்டும். ஒலி ஒளிக் கல்வி முறைகள் போதிய புதிய அறிவியல் படைப்புகளை இதற்காகப் பயன்படுத்தலாம்.

50. அறிவார்வமும், உழைப்பார்வமும் உள்ள ஆசிரியர்களே நியமனம் பெற்றாக வேண்டும். ஊருக்கு உரைத்து, பானையில் துள்ளிவிழும் பல்லியாக ஆசிரியர்கள் வாழாமல் அவர்களே மாணவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டிகளாக விளங்குதல் வேண்டும்.

51. கல்வி, வேலைவாய்ப்புடன் தொடர்புடையதாக மாற்றப்பட வேண்டும். வேலைவாய்ப்புப் பற்றிய செய்திகள், படிக்கும் பருவத்திலேயே எல்லா மாணவர்களுக்கும் கிடைக்க வழி செய்யப்பட்டாக வேண்டும்.

52. மாணவர்களே முன்னின்று நடத்தும் வகையில் பல மன்றங்கள், இதழ்கள் வேண்டும்.

53. விடுமுறை நாட்களில், வார இறுதிச் சுற்றுலாக்கள் அடிக்கடி ஏற்படுத்தப்பட வேண்டும்.

54. விளையாட்டுத் திடலைச் சுறுசுறுப்படையச் செயலாம்.

55. பயிலும் போதே வேலை செய்து பணம் சேர்க்கும் (Earning while learning) திட்டத்தின் வாய்ப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

56. ஒவ்வொரு கல்வி நிறுவனமும் அதன் பெற்றோர் சங்கத்துடன் ஒன்றுபட்டு, ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

57. மாணவர்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் தொடர்பாக அவர்களுடன் கலந்து பேசித் தீர்வு கூறும். ஆலோசனை மன்றங்கள் (Counselling Centre) உளவியல் அறிஞர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

58. மாநில அரசு பல்கலைக் கழகத்தின் சுதந்தரத்தில் தலையிடாமல் இருக்க வேண்டும். பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், முழு அளவில் அறிவு அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அரசியல் பின்புலம் அடிப்படையாக இருத்தல் கூடாது.

59. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் தனது நிருவாகத்தில் பயிலத் தகுதியுள்ள மாணவர்களைத் தேர்வு செய்யும் உரிமை வேண்டும்.

60. பல்கலைக்கழக நிருவாகத்திற்கான, ஆசிரியர்கள், நிருவாகக் குழு உறுப்பினர்கள், துணை வேந்தர் ஆகியோரை, அந்தந்தப் பல்கலைக்கழகங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு வேண்டும்.

61. கல்வி நிறுவனங்களில் பணிபுரியச் சேர்க்கப்படும் ஆசிரியர்கள் யாரும், நிரந்தர அடிப்படையில் அமர்த்தப்படாமை. ஒப்பந்த அடிப்படை மட்டுமே. மற்றபடி கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மதம் சாரா மிஷனரி போன்ற பொது அமைப்பிடம் விடப்பட வேண்டும். பல்வேறு துறைகளில் பணியாற்றும் வல்லுநர்களை அவ்வப்போது கல்வி நிறுவனங்கள் ஒப்பந்த

அடிப்படையில் அழைத்துப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்ற திட்டம், குறிப்பாகக் கல்லூரி, பல்கலைக்கழக அளவில் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுதல்.

நீதித்துறையில் அதிரடி மாற்றங்கள்

62. கீழ்மட்டத்தில் இருந்து உச்சநீதிமன்றம் வரை போதிய நீதிபதிகளை மைய அரசு அமர்த்துவது இல்லை. எனவே நீதிபதிகளின் எண்ணிக்கை கணிசமாக உடனே கூட்டப்பெற வேண்டும்.

நீதிமன்ற வாதம், நீதிபதியின் உரையாடல், தீர்ப்பு ஆகியன வாதிக்கும் பிரதிவாதிக்கும் தெரியாத மொழியில் நிகழ்த்தப்படுவது உடனே நிறுத்தப்பட வேண்டும்.

இந்திய நீதித் துறை அமைப்பில் நிர்வாகக் கோபுரம் மாநில உயர்நீதி மன்றத்திலும் தில்லி உச்சநீதி மன்றத்திலும் குவிக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகின்றது. இக்குவிப்புப் பரவலாக்கப்பட வேண்டும். அந்தந்த வட்டாரத்திலேயே உரிய தீர்ப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட வேண்டும். கீழ் நீதி மன்றத் தீர்ப்பு, உயர்நீதி மன்றம் உச்சநீதி மன்றம் என மேலே எடுத்துச் செல்லத் தற்போதைய அமைப்பு எளிதாக இடம் தருகின்றது. சில நாடுகளில் கீழ் நீதிமன்றத் தீர்ப்பு மேல்முறையீட்டுக்குச் செல்ல முடியாது. அன்றியும் மேல் முறையீட்டுக்குச் செல்லுமானால் கீழ் நீதிமன்றம் அளித்த தண்டனையைவிட மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகின்றது. நம் நாட்டிலோ கீழ்நீதி மன்றம் வழங்கிய மரண தண்டனை மேல்நீதி மன்றங்களில் பெரும்பாலும் ஆயுள் தண்டனையாகவும் சில சமயங்களில் விடுதலையே அளித்துவிடுவதாகவும் அமைந்துவிடுகின்றது. இதனால் அப்பீலுக்குச் சென்றால் தப்பித்து விடலாம் என்ற நம்பிக்கை குற்றவாளிக்கும் அக்குற்றத்தைப் பின் இருந்து செய்யத் தூண்டுவோருக்கும் தெளிவாக இருக்கின்றது.

அப்பாவி யாருக்கும் தண்டனை வழங்கப்பட்டுவிடக் கூடாது என்பது நம் நீதித் துறையின் அடிக்கருத்தாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதனைப் பயன்படுத்திக் குற்றவாளிகள் அப்பாவிகள் ஆக்கப்பட்டு எளிதாக விடுதலை செய்யப்பட்டு விடுகின்றனர். வெளியே வந்தவர் பழையபடி முன்பை விடத் தீவிரமான குற்றங்களைச் செய்வதில் ஈடுபடுகின்றார்.

அப்பாவி ஒரு சிலர் தண்டிக்கப்பட்டாலும் பரவாயில்லை. குற்றவாளி எவரும் தப்பிக்க விட்டுவிடக் கூடாது என்பது இந்தியச் சூழலில் அடிக்கருத்தாகக் கொள்ளப் பெற்றால் குற்றவாளிகள் வெளியே உலா வருவது முற்றுமாகத் தவிர்க்கப்பட்டு விடும்.

பொதுச் சமையல் கூடம்

63. நினைக்கவே முடியாத கற்பனையாக இருந்தாலும் மக்கள் இதை நோக்கி நகருதல் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் தனித்தனியாகச் சமைத்தல், அதற்கான உழைப்பு, முயற்சி, காலம், எரிபொருள் செலவு, ஆளாளுக்கு வேறு வேறு உணவு, வீண் அடிக்கும் உணவு, பலருக்கு உணவே இல்லாத நிலை, நிலருக்கு மிதமிஞ்சிய உணவிருக்கும் நிலை முதலான சமம் இன்மையைச் சரிப்படுத்த வேண்டும் என்றால் திருமண நாளில் ஊரார் அனைவர்க்கும் திருமண வீட்டார் அழைத்து அன்பாக உணவு வழங்குதல் போல ஒரு நிலையான அமைப்பைத் தெருவுக்கு ஒன்றாகவோ ஊருக்கு ஒன்றாகவோ கொண்டு வரலாம். தெருவில் உள்ள அனைவருக்கம் மிகப்பெரிய பொதுச்சமையல் அறை இருக்கும். சம சத்துதுடைய உணவு தெரு மக்கள் அனைவருக்குமாகச் சமைக்கப்படும். உணவு நேரத்தில் தெருவார் அத்தனை பேரும் திருமண மண்டபத்திற்குச் சென்று உண்டு வருவது போலப் பொதுச்சமையல் அறைக்குச் சென்று உண்டு வருதல் வேண்டும். இதனால் பல நன்மைகள் உண்டாகும். திருவள்ளுவர் சொன்ன பொது ஊருணி, நடுஊர் பழுத்த பழமரம், செறித்த மருந்து மரம் ஆகியன போலப் பொதுச் சமையல் அரங்கு துலங்கும். நன்மைகளாவன:

- தனித்தனியாக ஒவ்வொருவரும் சமைப்பதால் ஆகும் காசு, காலச் செலவு மிச்சமாகும்.
- எல்லார்க்கும் சரிவிகித சம உணவு கிடைக்கும்.
- ஊரார் அனைவரும் உண்ணும் இடத்தில் ஒருங்கு கூடி உரையாட வாய்ப்பு ஏற்படும்.
- ஊரே ஒரு குடும்பம் ஆகிவிடும்.
- ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் அடுப்பங்கரை விடைபெறும். அந்த இடம் வேறு வகையில் பயன்படும்.

❀ சேமிப்புக் கூடும்

❀ பெண்ணுக்கு விடுதலை கிடைக்கும்.

திரைப்படக் கொட்டம் அடக்கப்படல்

64. கதாநாயகனும், வில்லனும் சண்டை போடும்போது, காதலி உட்பட, நண்பர்கள், தெருவில் உள்ளோர், கடைத் தெருவில் உள்ளோர் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பது போன்று படக் காட்சிகளை அமைப்பது, பார்க்கும் மக்களை நல்வழிப்படுத்தாது. தம் வாழ்க்கையில், மெய்யாகவே கண் முன் இருவரிடையே சண்டை நடந்தால் குறுக்கிட்டுத் தடுக்கும் மனநிலையைத் தராது. வேடிக்கை பார்க்கும் போக்கையே வளர்க்கும். படம் பார்க்கும் சின்னக் குழந்தைகளின் உள்ளத்திலும் இத்தகு மன நிலையையே படியவைக்கும். எனவே சண்டைக் காட்சிகளில், மற்றவர் தலையிடுவதைக் காட்டுதல் வேண்டும்.

கல்லூரிக் காட்சிகளைப் படம் எடுப்பதாக நினைத்துக் கொண்டு மாணவிகளையும் மற்றவர்களையும் கேலி செய்வதில் நடைமுறையில் இல்லாத புதிய புதிய வழிமுறைகளையும் புதிய புதிய வழிவகைகளையும் திரைப்படக் கதாசிரியர் தம் கற்பனைச் சிறகுக்கு ஏற்பப் புதிது புதிதாகப் படைத்து உலா வரச் செய்கின்றனர். இவற்றுள் எதார்த்தம் என்பன ஒரு சிலவே. பெரும்பாலானவை இயக்குநர், கதாசிரியர் தம் கற்பனைப் புனைவுகளே. திரைப்படங்கள் வழி அறிமுகப்படுத்திய பலவே ஊர்களுக்கு நச்சுக் காட்சியையே உருவாக்கி விடுகின்றன. இளைஞர் தம் மீது நச்சுக் காற்றை உலாவ விடுகின்றன. இத்தகு காட்சிகளை எதார்த்தம் என்ற பெயராலோ புதுமை என்ற பெயராலோ காட்டுவதை முற்றுமாக நிறுத்த வேண்டும்.

சமுதாயத்திற்கும் உடல் நலத்துக்கும் முழுக் கேடு பயப்பவை என்று முழுமையாக அறியப் பெற்று ஒப்புக்கொள்ளப் பெற்ற காட்சிகளான மது அருந்துதல், புகை பிடித்தல் முதலானவற்றையும் காட்சிப்படுத்துவதை முற்றுமாகத் தவிர்க்க வேண்டும்.

முன்னைய படத்தில் காட்டப்படுவதைப் போலத் தாமும் காட்டிவிடக் கூடாது எனும் அக்கறையில் புதிய புதிய காதல்

அரும்பும் முறைகள், வளரும் இடங்கள், சண்டை போடும் இடங்கள், முறைகள், திருடும் இடங்கள், முறைகள் முதலாயின திரைப்படக்கதை ஆசிரியராலும் இயக்குநராலும் படத்துக்குப் படம் புதுவனவாக அறிமுகப்படுத்தப் படுகின்றன. இவை பார்க்கும் ரசிகர்கள் மனத்தில் எப்படியெப்படியெல்லாம் காதலைத் தொடங்குவது, சண்டை போடுவது, திருடுவது என்ற பாடம் படிப்பிக்கின்றன. சமுதாயத்திற்கு இது பெருந்தீங்காகும். இத்தகு கற்பனைப் பொய்க் காட்சிகளை முழுமையாகத் தவிர்த்தல் வேண்டும்.

இவற்றை எல்லாம் நம்மால் நடத்த முடியுமா என்ற தயக்கத்திற்கு இடமே இல்லை. **1847** இல் நாம் **1947** இல் விடுதலை பெறுவோம் என்று நம்பினோமா? நடக்கும் என்றால் நடக்கும். அது நடத்துவோரின் கையில் உள்ளது.

தமிழர்கள் வேற்றுமொழிச் சொல்லைப் பயன்படுத்தும் போது, அதற்கான தமிழ்ச் சொல்லின் வழக்கை அழிக்கின்றார்கள் என்று பொருள்; இவ்வண்ணம் வேற்றுமொழிச் சொல்லைப் பயன்படுத்துவது சொல்வளம் இல்லாத மொழிகளுக்குத் தேவைப்படலாம்; சொல்வளம் மிகுந்த தமிழ்மொழிக்கு இப்பழக்கம் தீங்காகவே முடியும். அண்ணன், தம்பி என்று இரு சொற்கள் இருக்கும்போது **பிரதர்** எதற்கு? அதன் பின்னர் **எல்டர், எங்கர்** எதற்கு? இதைப்போலவே சித்தப்பா, பெரியப்பா, மாமா, மாமி, அத்தை, மச்சான்.... சொற்களுக்கு ஆங்கிலத்தில் உள்ள பொது சொல்லைப் பயன்படுத்தித் தமிழ்ச் சொல்லின் செழுமையை மறக்கடிக்காதீர்கள்.

19. விடலாமா?

கவிஞர். கோ. கலைவேந்தன்

நம்மண்ணைப் பறித்து, நமை
நாடோடி ஆக்குவோரை
நாம் ஆள விடலாமா?
நம் பொருளைப் பறித்து, நம்மைக்
கையேந்தச் செய்பவரை
நாம் வாழ விடலாமா?

நம்முயிரைப் பறித்து, நமை
நடைவழியில் விரிப்பவரை
நாம் நடக்க விடலாமா?
நம் குடலை உருவி, நமை
நாட்டினுக்கே சூட்டுவோரை
நாம் தொடுக்க விடலாமோ?

நம்கண்ணைப் பறித்துப் பிறர்
முகம்காண விடுபவரை
நாம் காண விடலாமா?
நம்மொழியைப் பறித்துப், பிறர்
மொழிவளர உழைப்பவரை
நாம் பிழைக்க விடலாமா?

நாமெங்கே உழைத்தாலும்,
நாமெங்கே தழைத்தாலும்
நம்முரிமை விடலாமா?
நாமெங்கே படுத்தாலும்
நாமெதனால் துடித்தாலும்
நம் பெருமை விடலாமா?

வழிநமக்குத் தமிழாகும்,
விழிநமக்கே இனமாகும்
வாழ்வுரிமை விடலாமோ?
உயிர் நமக்கு மண்ணாகும்,
உடல் நமக்கே பொன்னாகும்
ஒழுகுநெறி விடலாமா?

20. நினைவில் நிறுத்துவோம்

கோ. இராமலிங்கம்
தமிழாசிரியர்,
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

என்னருந் தமிழர் ஏற்றிப் போற்றிடும்
அன்னைத் தமிழ்இன்று செம்மொழி ஆனது.
செம்மொழி என்பது சும்மா வந்ததா?

அரசர், புலவர், ஆடுநர், பாடுநர்,
அடியவர், பக்தர், சித்தர், முக்தர்கள்,
காலத்தை வெல்லும் கவிஞர் பெருமக்கள்
உடலால் உழைத்தும, உணர்வால் செழித்தும
அருந்தமிழ் வளர்த்தனர் ஆன்றோர் பலரும்.

உயிரைக் கொடுத்து மாண்டவர் சிலரில்
தமிழர் விழிகளைச் சற்றே திறந்த
இந்தி எதிர்ப்பில் வாழ்க எம்மொழிஎன,
வெந்து மடிந்த தியாகத் தீஞ்சுடர்!

அன்னைத் தமிழின் மணிமுடி பதிந்த
இரத்தினக் குவியலில் விலைமிகு முத்து!
கல்யாணம் தம்பதி பெற்றதீப் பிழம்பு!
மருதவாஞ் சேரியில் தோன்றிய சுடரொளி!
சாரங்க பாணியை நெஞ்சில் நிறுத்துவோம்!

மொழியே தமிழரின் மூச்சு! பேச்சு!
மொழிக்கொரு கேடெனின் அனைத்தும் போச்சு!
இளையர் நெஞ்சில் இதனை விதைக்க,
எரிதழல் மூடி உருகிய வேங்கை!
சாரங்க பாணியை நினைவில் நிறுத்துவோம்!

ஆக்கமிலா வழிகளில் உயிரைப் போக்கும்
நோக்கம் குன்றிய தமிழருக் கெல்லாம்
வாழ்வின் இலக்கையும் பிறப்பின் பயனையும்
ஆழ்மனப் பரப்பில் அழுந்தப் பதித்தவன்!
மண்ணின் மைந்தன்! தமிழ்வயல் செழிக்கும்
இயற்கை உரம் அவன்! எழுச்சிக் கதிர் அவன்!

ஊரிங்கே கூடி உயரத்திப் பேசும்
சாரங்க பாணிக்கு வீர வணக்கங்கள்
ஆயிரம் கூறி வாழ்த்திப் பாடுவோம்!
தமிழ்மொழி வளர்ப்பில் நமது பங்கினை
அவனது தியகம் வீண் போகாமல்
கடமையாய்க் கொள்வோம்! கருத்துப் பேதம்
பலவாய் இருப்பினும் கட்சிப் பேதம்
சிலவாய் இருப்பினும், சிந்தனை ஒன்றாய்
உலகப் பந்தில் உன்னத நிலைபெற,
நினைவைப் போற்றுவோம்! நெஞ்சில் நிறுத்தியே!

தமிழ் மொழி இனம் நாடு வெல்க



கி. இரவிச்சந்திரன்
9442251415

வேனில் டிஜிட்டல் போட்டோஸ்

143/3, முதன்மைச் சாலை,
செம்பனார்கோவில்.

21. தமிழ்ப் பேரறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

மு. சிவக்குமார்
சித்தர்காடு

வீரமா முனிவர்

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் 1680 ஆம் ஆண்டு பிறந்தார். இயற்பெயர் கான்ஸ்டான்டியூஸ் ஜோசப் பெஸ்கி. தந்தை பெயர் கொண்டர்போபெஸ்கி, தாயார் பெயர் எலிஸபெத். வீரமாமுனிவர் கிறிஸ்த்துவ சமயப் பணி செய்யத் தமிழ்நாட்டுக்கு வந்தார்.

இங்குத் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சிப் பெற்று, மதுரையில் சுப்ரதீபக் கவிராயரிடம் முறையாகத் தமிழ் பயின்று புலமை பெற்றார். இவர் எழுதிய நூல்கள் ஞானஉபதேசப் பர்வதகாண்டம், ஆத்தும நிர்ணயம், வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதக மறுத்தல், லுத்தேரினத்தார் இயல்பு, ஞானம் உணர்த்துதல், திருச்சபைக்கணிதம், வாமன்கதை ஆகிய உரைநடை நூல்களும், தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, கலிவெண்பா, அன்னை வழங்கல் அந்தாதி, கருணாபேரப் பதிகம் முதலிய செய்யுள் நூல்களாகும். முதன் முதலில் தமிழ்மொழியில் அகராதியும் எழுதிவெளியிட்டார். இவர் தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைக்கப்பட்டார். திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், இரண்டையும், இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். இறுதி மூச்சு உள்ளவரை தமிழுக்காகவே வாழ்ந்து 1747 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவரின் கல்லறை திருமானூர் அருகில் உள்ள ஏலாகுறிச்சியில் உள்ளது. தமிழ்மருத்துவமாகிய சித்த மருத்துவத்தை இங்கு உள்ள சித்த மருத்துவர்களிடம் கற்றுத் தேர்ந்தார். சித்த மருத்துவ நூல்களையும் எழுதிஉள்ளார். தஞ்சாவூர் பூண்டியிலும், ஏலாக்குறிச்சியிலும் வீரமாமுனிவரால் பக்கப்பிளவை, நோய் தீர்க்கப்பட்ட ஜமீன்தாரர்கள் நிலம் கொடுத்து மாதா கோயில்களையும் கட்டிக் கொடுத்தனர்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை

1826 -ஆம் ஆண்டு ஆரோக்கியமேரி, சவுரிமுத்துப்பிள்ளை தம்பதியினருக்குக் குளத்தூர் எனும் சிற்றூரில் மகனாய்ப் பிறந்தார், வேதநாயகம்பிள்ளை இளமையில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் இலக்கண இலக்கியத்தைக் கற்றுணர்ந்தார். பிரதாபமுதலியார் சரித்திரம் எனும் நாவலை *1876* - ஆம் ஆண்டு எழுதித் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தார். *1887* -ஆம் ஆண்டு சுகுண சுந்தரி என்ற இரண்டாவது நாவலையும் சித்தாந்த சங்கிரகம் எனும் மொழி பெயர்ப்பு நூலையும் எழுதி வெளியிட்டதோடு, நீதி நூல் பெண்மதிமாலை, சொபனப் பாடல்கள், தனிப்பாடல்கள் ஆகிய செய்யுள் இலக்கியங்களையும் திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, பெரியநாயகி அம்மை பதிகம், தேவமாதா அந்தாதி முதலிய சமய நூல்களையும் பெண் மானம், பெண் கல்வி போன்ற உரைநடைகளையும் எழுதித் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளை தமது *62*-வது வயதில் *1880*-இல் மங்காப்புகழுடன் இயற்கை எய்தினார்.

பரிதிமாற்கலைஞர்

1870 -ஆம் ஆண்டு மதுரைக்கு அருகே உள்ள வீராச்சேரி எனும் சிற்றூரில் கோவிந்த சாஸ்திரியின் புதல்வராகச் சூரிய நாராயணசாஸ்திரி பிறந்தார். தமிழ்மீது உள்ள பற்றின் காரணமாகத் தனது பெயரை பரிதிமால் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார். நாடகக்கலை மீது தீராக் காதல் கொண்டு, ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் ஆகிய நாடக நூல்களை எழுதியதோடு நாடகவியல் எனும் இலக்கண நூலையும் எழுதி வெளியிட்டார். *1888*-இல் மதுரையில் எஃ.ஏ., வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போது மாலாபஞ்சகம் எனும் நூலை இயற்றினார். அதன் பின்பு பி.ஏ., தேர்வில் தமிழ்மொழியிலும், தத்துவக்கலையிலும், மாநிலத்தின் முதல் மாணவராகத் திகழ்ந்தார். மதுரை தமிழ்ச்சங்கத்தின் சார்பாகச் செந்தமிழ் எனும் மாத இதழில் ஆய்வுக்கட்டுரை எழுதிப் புகழ்பெற்றார். எந்த மொழியின் துணையுமின்றித் தமிழ்மொழியால் தனித்தியங்க முடியும் என்று

எண்ணி வடமொழிக் கலப்பற்ற தனித்தமிழ் இயக்கம் ஏற்படுத்தினார். அவரது படைப்புகள் தனிப்பாசுரத்தொகை, பாவலர் விருந்து, மதிவாணன் ஆகிய நூல்கள் அவரது புகழுக்குச் சான்றுகளாகும்.

இவ்வுலகில் *33* ஆண்டுகளே வாழ்ந்து தமிழின் பெருமையை உலகறியச் செய்தற்குரிய நாராயண சாஸ்திரியார் *1903* -ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை

நீராரும் கடலுடுத்த நிலமடந்தை, எனத்தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தை இயற்றிய மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை **1855** - ஆம் ஆண்டு ஆலப்புழை என்னும் ஊரில் பெருமாள்பிள்ளைக்கும், மாடத்திக்கும் புதல்வராய்ப் பிறந்தார்.

சுந்தரம்பிள்ளை திருவனந்தபுரம் கல்லூரியில் படிக்கும்போது மாநிலத்திலேயே முதல் மாணவராய்த் திகழ்ந்தார். அதன் பயனாக அரசாங்கம் மான்யம் அளித்து உதவி செய்தது. பி.ஏ., தேர்வில் முதல் வகுப்புப் பட்டம் பெற்றார். சுந்தரத்தின் அறிக்கூர்மையைக் கண்ட கல்லூரி முதல்வர் அந்தக் கல்லூரியிலேயே பணியாற்ற வேண்டினார். திருவிதாங்கூர் மன்னர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் தமிழ்ப் புலமை கண்டு அவரை அரண்மனையில் ஒரு அதிகாரியாக நியமித்தார். தமிழ்த்துறைக்கும் வரலாற்றுத்துறைக்கும் பேராசிரியர் ஆற்றிய தொண்டு தலையாயது. நாடக இலக்கியத்தேவையை நிறைவேற்றுமுகமாக அவர் படைத்த மனோன்மணியம் இன்று வரைத் தமிழன்னைக்கு ஆதாரமாக விளங்குகிறது. பன்மொழிப்புலமையும், பல்கலையறிவும் கொண்ட பேராசிரியர் மனேன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் **1897** ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

டாக்டர் ஜி.யூ. போப்

1820 -ஆம் ஆண்டு கோவாங்கோ ஷிமயோவில் உள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில் ஜான் போப் என்பவருக்கும் கேதரின்யுக்ளோ என்பருக்கும் மைந்தனாய்ப் பிறந்தார். இளமையிலேயே இறைமை நாட்டம் ஏற்பட்டு, தென்னிந்தியா சென்று இறைப்பணி செய்ய எண்ணங்கொண்டு தென்னிந்தியா வந்து இலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்தார்.

ஐரோப்பியரும் திருக்குறளைப் படித்துப் பயன்பெற வேண்டுமென்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். கேளிக்கையான முறையில் கற்பதற்காகத் தொல்காப்பியம் நன்னூல் போன்ற இலக்கண நூல்களின் கடினத்தன்மையை எளிதாக அமைத்தார். திருக்குறள், நாலடியார், திருவாசகம், மணிமேகலை, புறநானூறு, புறப்பொருள், வெண்பாமாலை, திருவருட்பயன் போன்ற நுல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பதிப்பித்தார். ஏறத்தாழ 42 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்து தமிழ்த்தொண்டாற்றிய டாக்டர் ஜி.யூ. போப் அவர்கள் 1888 -ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

தேவநேயப் பாவாணர்

நெல்லை மாவட்டத்திலுள்ள பெரும்புதூர் எனும் சிற்றூரில் வாழ்ந்த ஞானமுத்து என்பவருக்கும் பரிபூரணம்மாள் என்பவருக்கும் புதல்வராகப் பிறந்தார் தேவநேயப்பாவாணர்.

தமிழ் மொழிமீது தணியாத தாகம் கொண்ட பாவாணர் பள்ளியில் ஆசிரியராக இருந்துகொண்டே தமிழ் இலக்கண, இலக்கியத்தைக் கற்றுக் தேர்ந்து பண்டிதர் தேர்வு எழுதித் தேர்ச்சி அடைந்தார். கவிஞர் மாசிலாமணி என்பவர் தனக்கு அளித்த கவிவாணர் என்கிற சான்றிதழ்க் குறிப்பை பாவாணர் என்று தனித்தமிழ்படுத்தித் தேவநேயப்பாவாணார் ஆனார். மடைதிறந்த வெள்ளம்போல் பேச்சாற்றல் உடைய பாவாணர் ஏறத்தாழ 37 நூல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றியுள்ள ஒப்பியல் மொழி நூல் திராவிடத்தாய், தமிழாக்க விளக்கம், இயற்றமிழ், இலக்கணம், தமிழே திராவிட மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி வடமொழிக்கு மூலமும் தமிழ் மொழியே என்று ஆராய்ந்து முடிவெடுத்துள்ளார். இவ்வாறு தமிழ் மொழிக்காகவே வாழ்ந்த தேவநேயப்பாவாணர் 1981 ஆம் ஆண்டு தமிழன்னையின் திருவடியில் கலந்தார்.

22. தமிழ் மறவன்

கி. திருமாறன்
பதிப்பாசிரியர் (தமிழ்)
பேன்பேக் நிறுவனம், சிங்கப்பூர்.

நிலையில்லா உயிரை நிலைக்கச் செய்து
நீள்புகழ் பெற்றார் நிலவுலகில் சிலரே
மலைக்க வைக்கும் அருஞ்செயல்கள் பலசெய்து
மாளாத உயர்புகழைத் தமதாய்க் கொண்டார்
கலைநாடு இனம்மொழி மானம் ஞானம்
நாகரிகம் பண்பாடு சால்பு காக்க
விலையேதும் இல்லாத விழுமிய உயிர்தன்னை
விலையாகத் தந்தார்கள் விண்ணவராய் உயர்ந்தார்கள்

பெரிதான சுற்றத்தின் பசிநீக்கப் பாவலர்க்குத்
தலையீந்து தமிழ்காத்தான் தரணியிலே குமணமன்னன்
அரிதான நெல்லியை ஔவைக் கீந்து
அவணியில் தமிழ்காத்தான் அதிய மன்னன்
சிறிதான புறவின் அல்லல் நீங்கச்
சீரமிகு தன்தசை அரிந்தான் சிபியரசன்
நெறியான நீதியை நிலைநிறுத்தப் புவியில்
நீத்தான் தன்னுயிரைச் செழிய மன்னன்

கன்னன் நற்றமிழ் காக்கத் துடித்தெழுந்தான்
கலியாண சுந்தரந்தான் பெற்றெடுத்த காளை
மன்னும் மருதவாஞ்சேரி வந்துதித்த மாணிக்கம்
சாகாப் புகழ்பெற்ற சாரங்க பாணி
தன்னுயிர் கொடுத்துத் தமிழைப் போற்றியதால்
அண்ணலவன் வாழ்வே அழியாச் சரித்திரம்
விண்ணும் மண்ணும் விளங்குநாள் வரையும்
வீயாது அவன்புகழே! விழாது தண்தமிழே!

விழுப்புகழ் எய்தி வீரத் தமிழனுக்கு
வெகுமதி செய்ய விரும்பிய அரசு
பழுதிலாப் பாலம் பாங்குற அமைத்துப்
பாரெலாம் விளங்க இட்டது அவன்பெயர்
வாழும் தமிழை வளமூட்ட மடிந்த
சாரங்க பாணிக்கு நற்றூண் எடுப்போம்!
விழுதென விளங்கி வேரென நின்று
நற்றமிழ் காப்போம்! நாளும் போற்றுவோம்!

23. கோவில்களும் தமிழும்

கு. தமிழ்நம்பி

தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் எனத் தொடங்கித் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலை வந்துள்ளது. இது விரும்பிக் கேட்பவர்களுக்கு மட்டும் சமஸ்கிருதத்தில் செய்யப்படும் என மாற வேண்டும்.

திருமுழுக்கு (அபிசேகம்) செய்கிற மாதிரியான இறை படிமங்கள் உள்ள கோயில்கள் தமிழ் நாட்டிற்கு வெளியே அரிது. ஆகமக் கோவில்கள் தமிழ் நாட்டிற்கு வெளியே இல்லை என்றே சொல்லலாம். கிருட்டினர் பிறந்ததாகச் சொல்லப்படுகின்ற மதுராவில் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் பிர்லாவால் கட்டப்பட்ட கிருட்டினர் கோவில் உள்ள கிருட்டினரும் பாமா ருக்மணியும் சுண்ணாம்புச் சுதை வேலைப்பாடுகளாலேயே செய்யப்பட்டவை தாம். எனவே, ஆகமக்கோயில்கள் தமிழ் நாட்டுக்கு உரியவை.

இறை படிமங்கள் கீழ் வைக்கப்பட்டிருக்கின்ற. சக்கரத்தகடுகளில் தமிழ் மந்திரங்களே எழுதப்பட்டுள்ளன. அவை திருமூலரின் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சக்க்ரங்களே. திருமந்திரத்தில் 32 பெரிய சக்கரங்களும் 107 சின்ன சக்கரங்களும் சொல்லப்பட்டுள்ளன. சக்கரங்களில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் தமிழ் தான். அதாவது மூலமந்திரங்கள் தமிழேயாகும். இவை போன்று தமிழ்நாட்டிற்கு வெளியே கிடையாது. அகத்தியர், போகர், புலிப்பாணி போன்ற சித்தர்களும் சக்கரங்களை உருவாக்குவது பற்றிப் பல பாடல்கள் பாடி உள்ளனர். அண்மையில் செல்வாக்குப் பெற்ற குடந்தை அருகில் உள்ள அய்யாவாடி கோவிலில் உள்ள தற்போது 'பிரத்தியங்கராதேவி' என அழைக்கப்படும் பெண் தெய்வத்தின் சக்கரத்தை வடிவமைத்து உருவாக்கியவர் சித்தர் போகர். சக்கரத்தை உருவாக்கிய சித்தர்களும், தேவாரம், திருவாசகம் பாடிய நால்வருக்கம் இன்று கோவில்களில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பவர்கள் பணவேட்டைக்காகப் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் தந்திரங்களுக்கும், சடங்குகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்களுக்கு உடன்பாடானதும் அல்ல. அவர்கள் வழிபாடு நேரடி வழிபாடுதானே தவிர தரகர்கள் / முகவர்கள் வழி வழிபாடன்று.

தமிழ் நாட்டுக் கோவில்களில் உள்ள இறைவன், இறைவி பெயர்கள் தூய தமிழிலேயே இருந்து இருக்கின்றன. அவை தமிழுக்கு அன்னிய ஆதிக்க சக்திகளால் (பிராமணர்கள், தெலுங்கர்கள், மராட்டியர்கள்...) வடமொழியாக மாற்றப்பட்டன. சில ஊர்களில் மிகத் தவறாகவும் மொழி மாற்றம் செய்யப்பட்டன. சில எடுத்துக்காட்டுகள்:

தமிழ்		வடமொழி
1. பெருவுடையார்	-	பிரகதீஸ்வரர்
2. பழமலையான்	-	விருத்தகிரி
3. பாகம்பிரியான்	-	அர்த்தநாரீஸ்வரர்
4. தேன்மொழி	-	மதுர பாஷினி
5. விழி எழிலி	-	விசாலாட்சி
6. அங்கையற் கண்ணி	-	மீனாட்சி
7. அழகம்மை	-	சௌந்தரநாயகி
8. மயிலாடுதுறையான்	-	மயூரநாதன்
9. அமுதசொல்நாயகி	-	அபயாம்பாள்

எனவே தமிழர்களில் தமிழ்ச் சிற்பக்கலைஞர்களை கொண்டு தமிழ் மந்திரங்கள் எழுதிய அட்சரத்தகடுகளை வைத்துத் தமிழ்ப் பெயருடன் ஏற்படுத்தப்பட்ட தமிழ் சாமிகளுக்கு வடமொழி வழிபாடு இடைக்காலத்தில் திணிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட இந்த வடமொழி வழி வழிபாட்டை மாற்றித் தமிழ் மானம் காக்கத் தமிழ் இறையன்பர்கள் முன்வரவேண்டும்.

அரசு செய்ய வேண்டியவை

1. தமிழ் வழிபாட்டுப் பயிற்சிப் பள்ளிகளைப் பெருமளவில் தொடங்கி அதில் அனைத்துச் சாதியை சேர்ந்தவர்களையும் சேர்த்துப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

2. இந்தப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களை வைத்தே காலியாகிற சிவாச்சாரியார்கள் / பட்டாச்சாரியார்களை நியமிக்க வேண்டும். பரம்பரை முறையில் நியமிக்கப்படுதல் ஒழிக்கப்பட வேண்டும்.

3. இந்து அறநிலையத்துறையின் சம்பளம் பெறும் சிவாச்சாரியார் பட்டாச்சாரியார்களுக்குத் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி கொடுத்துத் தமிழிலேயே வழிபாடு நடத்த ஆணையிட வேண்டும்.

4. அர்ச்சனை எனக் கேட்பவர்களுக்குத் தமிழிலேயே அர்ச்சனை செய்ய வேண்டும் எனவும், விரும்பிக் கேட்பவர்களுக்கு மட்டுமே வடமொழி அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்க வேண்டும்.

1967 முதல் 40 ஆண்டுக் காலத் திராவிட இயக்க ஆட்சியில் இந்து அறநிலையத்துறை சார்பான கீழ்உள்ள கோவில்களில் சமஸ்கிருத ஆதிக்கமும், பிராமணர்களின் ஆதிக்கமும் ஒழிக்கப்படாததற்கு எது காரணம்?

1. தமிழ்களிடையே விழிப்புணர்வு இல்லாமையா?

2. திராவிட இயக்கங்களுக்குள்ளே தங்கள் குடும்ப உறவுகளால் பிராணமர்கள் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்கள் என்பதா?

3. தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளுக்குள்ளும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தாய்மொழியாகக் கொண்டவர்கள் செல்வாக்குடன் இருப்பது காரணமா?

தமிழ் இறையன்பர்களுக்கு

வீட்டிலும், கோவிலிலும் தமிழிலேயே வழிபாடு, வாழ்வியல் சடங்குகள் நடத்த உறுதி ஏற்க வேண்டும். தமிழில் குடமுழுக்கு இல்லை என்றால் நன்கொடை தருவதில்லை என முடிவு எடுக்க வேண்டும். சடங்குகளில் தமிழர்களை வைத்துத் தமிழிலேயே நடத்த உறுதி ஏற்க வேண்டும். இதெல்லாம் சரிதான் தமிழக **ஆதீனங்கள்** என்ன செய்கின்றன? அவர்கள் கட்டுப்பாட்டில் பல கோவில்கள் உள்ளனவே? தமிழ் நாட்டில் ஆதீனங்கள் குறிப்பாக மயிலாடுதுறையைச் சுற்றிலும் பல ஆதீனங்கள் இருக்கின்றன. தமிழ் வழிபாட்டுப் பயிற்சி மையத்தைத் தொடங்கினால் என்ன? தங்கள் கட்டுப்பாட்டுக்குள் உள்ள கோயில்களில் தமிழ் வழிபாட்டைச் செயல்படுத்த அவர்களைத் தடுப்பது எது. பெண் தொடர்பா? தனி நபர் பலவீனங்கள் இல்லாத ஆதீனங்களாவது இதைச் செய்யக்கூடாதா? மடத்தைத் தமிழையும், சிவனியத்தையும் வளர்க்கத்தானே ஏற்படுத்தினார்கள்? தயக்கம் ஏன்? தொடங்குங்கள் உங்களுக்கு எந்த ஆதிக்க சக்திகளாலாவது பிரச்சனை வருமானால் கடவுள் மறுப்பாளர்கள் கூட உங்களைப் பாதுகாக்க வருவார்கள். கோயில்களில் தமிழ் மீட்பை விரைவில் எதிர்ப்பார்ப்போம் அதற்கு ஆவன செய்வோம்.

24. காற்றினூடே...

சாரங்கபாணி செத்து விட்டான் என்றா நினைத்தீர்கள்?
எனக்கேது சாவு?
குறள் தந்த வள்ளுவனுக்குச் சாவுண்டோ?
சிலம்பு தந்த இளங்கோவும் வாழ்கின்றாரே!
அறம் தந்த வள்ளலாருக்குச் சாவுண்டோ?
புரட்சிக் கவிகள் தந்த பாவேந்தர் வாழ்கின்றார்!
தமிழ் வளர்த்தவர்கள் இவர்கள், தமிழ் காந்தவன் நான்!
தமிழ் காத்தவன் தானே நானும்...
எனக்கேது சாவு?

1965 ஆம் ஆண்டு தமிழகத்தில் இந்தித் திணிப்பு
எதிர்த்து கிளர்ந்தது மாணவர் கூட்டம்!
செய்வதறியாது திகைத்தேன்... சிலிர்த்தது என் உடல்!
தீ யை முத்தமிட்டேன்!
தீ செத்து விட்டது
நான் வாழ்கின்றேன் வரலாறாய்!
எனக்கேது சாவு?

மன்னன் பந்தல் பழகிய மக்கள்... கல்லூரி...
மாணவர்கள்... பேராசிரியர்கள்...
ஆன்றோர்கள் சான்றோர்கள் மத்தியில்
எனை நிறுத்தியுள்ளனர் நினைவுத்தூணாக
எனக்கேது சாவு?

நம் தமிழ் செம்மொழி ஆனநிலையில்
நம் தமிழ் நீதிமன்ற மொழியாகும் நிலையில்
நம் தமிழ் கோவில் மொழியாகும் நிலையில்
நம் தமிழ் தமிழர் நாவில் நிற்கும் வரையில்
எனக்கேது சாவு?

நினைப்பு : **நாக. இரகுபதி**
தலைவர்,
நினைவுத் தூண் அமைப்புக் குழு

25. தமிழ் காத்தார்

முனைவர் **இரத்தின. வேங்கடேசன்**
தமிழாசிரியர்,
சிங்கப்பூர்.

எவ்வுயிரும் நம்முயிரே எவ்வூரும் நம்மூர்தான்
என்றெண்ணி வாழ்ந்திருந்த இனிமைநிறை தமிழினத்தில்
வெவ்வேறு எண்ணங்கள் கருத்துக்கள் என்றாலும்
வேர்போன்ற செந்தமிழால் ஒன்றாய் நின்றார்
தொல்லுலகில் பழங்குடியாய்த் தொலைநாட்டார் போற்றிடவே
தொன்மரபில் சிறந்திட்ட எங்குலந்தான் தாழ்ந்ததெப்போ
கன்னல் சுவைதமிழைக் கற்காதார் போற்றாதார்
கடுங்கோலாட்சி செய்தார் தமிழைத் துச்சமென்று
தம்மொழியால் செந்தமிழைச் சாடிநின்றார் தமிழ்த்தாயோ
தனைக்காக்க ஆளில்லாது தளர்வுற்றுச் சோர்வுற்றாளே!

சோர்வுற்ற நந்தாயைக் கனித்தமிழைப் பெரும்புகழைச்
சென்மரபு புலவர்கள் நால்வருடன் ஆழ்வாரென
கருவுற்ற கார்மேகம் கவிழ்த்திட்ட பெருமழையாய்க்
கவியாலே காத்திருந்தார் பகைவென்றார் என்றாலும்
வந்தாரை வாழவைக்கும் நம்குணத்தால் வழிதேடி
வந்தவரே நமையாண்டார் மோசத்தால் மொழிசிதைத்தார்
ஐயகோ அவலமிது இன்றுவரை தொடர்ந்ததாலே
எழிச்சியுற்ற இளையார்கள் இயக்கமானார் கைகோத்துப்
போர்புரிந்தார் மொழிப்போரில் உயிர்நீத்தார் தன்னுயிரைத்
துச்சமென மண்ணில் சாய்த்து மொழிகாத்தாரே

மொழியெதிர்ப்பை ஒடுக்கிடவே முனைந்திட்ட அரசுதனை
மோதியே வெல்வதென முனைந்திட்ட நேரமது
கட்டிளங்காளையர் கற்றார் சான்றோரெனும் வரிசையில்
பூந்தோட்டச் சாலையதில் பூத்திருந்த (மருதவாஞ்)சேரியிலே
புகழ்சேர் கலியாணசுந்தரம் கோமளவல்லி பெற்றெடுத்த
நன்முத்தாம் சாரங்கபாணியெனும் சிங்கநிகர் வேங்கையொன்று
சீறிப்பாய்ந்தே இந்தியெனும் முயற்கூட்டம் இருந்தவிடம்
தெரியாது சிதறடிக்க வெந்தழலை உடலிலேற்றி
வெளிவந்து தமிழ்வாழ்க எனச்சொல்லிச் சாம்பலானார்
தமிழ்காத்தார் பேர்பெற்றார் புகழாய் நின்றார்.

26. உலக நாடுகளில் ஆட்சி மொழி

மலையமான்

இங்கிலாந்து

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஆங்கிலோ சாக்சன் மக்களும் ஜூட் மக்களும் இங்கிலாந்தில் குடியேறினர். அப்போது இலத்தீன் மொழி அரசியல் மொழியாக அமைந்தது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் அங்குப் புனித அகஸ்டின் வந்தார். அதற்குப் பிறகு, கிறித்துவ மதத்தின் மூலம் இலத்தீன் வேரூன்றி விட்டது. கிறித்துவக் கோயில்களை அடுத்து இலத்தீன் பள்ளிகளும் தோன்றின. சமயத்துறையில் இலத்தீன் மொழியின் செல்வாக்கு ஓங்கத் தொடங்கியது.

11-ஆம் நூற்றாண்டில், டேனிசு மன்னனான சுவெய்ன் இங்கிலாந்திற்கும் அரசனானான். அதனால் டேனிசு மொழிச் சொற்கள் ஆங்கிலத்தில் கலந்தன. பிறகு இங்கிலாந்திற்கு வந்த நார்மன் மக்கள் மூலமாகப் பிரெஞ்சு மொழி அந்நாட்டில் நுழைந்தது. பிரான்சில் வளர்ந்த இளவரசன் - பிரெஞ்சுக்காரியைத் தாயாகப் பெற்றிருந்த எட்வர்டு, இங்கிலாந்தின் மன்னன் ஆனதும், அவனுடன் வந்த அவனது ஏராளமான நண்பர்கள் மூலம் பிரெஞ்சு மொழி வேகமாகப் பரவி, செல்வாக்குடைய உயர்ந்த மொழியாயிற்று. பிரான்சு நாட்டு வில்லியம் கி.பி. 1066 இல் இங்கிலாந்தின் மீது படையெடுத்து, வெற்றி கொண்ட பிறகு பிரெஞ்சு மொழி அரசியல் மொழியாக மாறியது. ஆட்சி மொழியாகப் பிரெஞ்சும், சமய மொழியாக இலத்தீனும் விளங்க, ஆங்கிலம் பாமர மக்களுக்காக ஒதுக்கப்பட்டது. அது மட்டுமன்று, அம்மொழி நாகரிகமற்றவர்களின் பண்பாடு இல்லாதவர்களின் மொழியாக இழித்துரைக்கப்பட்டது.

ஆனால், இந்நிலை பிறகு மாற வேண்டிய கட்டம் வந்தது. ஆங்கில நாட்டரசனான ஜானுக்கும், பிரெஞ்சு மன்னனான பிலிப்புக்குமிடையே தோன்றிய பகைமையின் விளைவாக, ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருந்த நார்மண்டி என்ற பிரெஞ்சுப் பகுதியை ஜான் இழந்தான். இதனால் இங்கிலாந்தில் தங்கியிருந்த பிரெஞ்சு மக்கள் பிரான்சுக்குப் போக முடியாத நிலையில்

சா10.

இங்கிலாந்தையே தாயகமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் வந்தது. அவர்கள் பிரான்சு நாட்டை அயல் நாடாக நினைக்கும் மனநிலையைப் பெற்றனர். காலப் போக்கில் பிரெஞ்சு மொழியின் பற்று, குறையும் நிலைமை நேர்ந்தது.

மூன்றாவது ஹென்றி என்ற ஆங்கில அரசன் (1216 - 1272) பிரான்சு நாட்டுப் பிராவன்கல் பகுதியைச் சேர்ந்த இளவரசியை மணந்த போது அவளது தந்தையின் செல்வாக்கு இங்கிலாந்தில் ஓங்கத் தொடங்கியது. இதை மக்கள் வெறுத்தனர். மெல்ல எதிர்த்தனர். இங்கிலாந்து ஆங்கில மக்களுக்கே (England for English) என்ற குரலை எழுப்பினர். வேற்று மொழியாரைப் பற்றி மன்னனிடமே இடித்துரைக்க முற்பட்டனர். மக்களிடையே பிரெஞ்சு மொழி ஆதிக்கத்தை எதிர்க்கும் மனப்பான்மை பரவத் தொடங்கியது.

13 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மொழியின் மேலாண்மை சரியக் கூடிய சூழ்நிலை உருவானது. பிரெஞ்சு மொழி பல மாற்றங்களுக்கு உட்பட்டது. இதனால் இங்கிலாந்தில் பேசப்பட்ட பிரெஞ்சு மொழி அம்மொழியிலிருந்து வேறுபட்டது. அம்மொழி பேசுவோருக்குத் தயக்க நிலை தோன்றியதால் தேய்வு நிலை தோன்றியது. ஆகவே ஆங்கிலத்தின் செல்வாக்கு வளரத் தொடங்கியது.

14 ஆம் நூற்றாண்டில், நாட்டு மொழியாக ஆங்கிலமே அமைய வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றிய போது பிற ஐரோப்பிய மொழிகளைப் போலவே ஆங்கிலமும் வளர்ச்சிப் பாதையில் அடி எடுத்து வைத்தது. அச்சுப் பொறியின் புதுமையால் ஆங்கிலக் கல்விப் பெருக்கும் உண்டாயிற்று. பொது மக்களிடையே ஆங்கிலக் கல்வி கற்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. அனைவரும் ஆங்கில மொழியைப்படிக்க இயல்பாகவே முற்பட்டனர்.

1731 ஆம் ஆண்டில் இரண்டாம் ஜார்ஜ் மன்னர் பிறப்பித்த ஆணையின்படி அனைத்துத் துறைகளிலும் 1733 ஆம் ஆண்டு மார்ச்சு 20 ஆம் நாளுக்குப் பிறகு, ஆங்கிலம் ஒன்றே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்

என்றும், பிரெஞ்சு, இலத்தீன் மொழிகளை அறவே ஆளக்கூடாது என்றும் மக்கள் மொழியில் தான் வழக்காடு மன்ற நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமென்றும் இதனை மீறுவோர் 50 பவுன் தண்டம் செலுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தாலியில் ஆல்பொர்த்தியும், பிரான்ச நாட்டில் தூபெல்லேயும் செருமனியில் மார்டின் லூதரும், ஆங்கில நாட்டில் ரிச்சர்டு மல்கேஸ்டரும் இலத்தீன் மொழியின் மேலாண்மையை எதிர்த்துத் தம் தாய் மொழிக்காக உழைத்தனர்.

பிரெஞ்சு மொழித் தூய்மைக்காகச் சிற்சில அறிஞர்கள் பாடுபட்டதைப் போன்று, ஆங்கில மொழித் தூய்மைக்காகச் சிலர் முயற்சி செய்தனர். ஆங்கிலத்தை உலகப் பொது மொழியாக ஒப்புக் கொள்ளும் வகையில் அதை எளிமைப்படுத்தி அடிப்படை ஆங்கிலம் அமைக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது.

இசுரேல்

யூதர்கள் தங்களுக்கென்று தனிநாடு இன்றி, ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா முதலிய கண்டங்களிலுள்ள நாடுகளில் சிதறிக் கிடந்தார்கள். இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதும் **1948**-இல் இசுரேல் உருவாக்கப்பட்டது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் இசுரேல் நாட்டில் குடியேறினார்கள். அவர்கள் முன்பு வாழ்ந்து கொண்டிருந்த நாடுகளில் உள்ள மொழியை மட்டுமே அறிந்திருந்தனர். ஏமனிலிருந்து குடியேறிய யூதர்களுக்கு அரபு மொழி மட்டுமே தெரிந்திருந்தது. கிரேக்கத்திலிருந்து வந்தவர்களுக்குக் கிரீசு மட்டுமே பேச முடிந்தது. ஜெர்மனியிலிருந்து வந்தவர்களுக்குச் செருமனி தவிர வேறு மொழி தெரியாது. ஈப்ரு, யூதர்களின் சமய மொழி. அம்மொழியைச் சிலரே அறிந்திருந்தனர். இசுரேலில் வந்தேறிய யூதர்கள் ஈப்ரு மொழியே இனிமேல் தம் பேச்சு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டுமென்று முடிவெடுத்தார்கள் அதனால், **வழக்கழிந்து போயிருந்த ஈப்ரு மொழியை ஆட்சி மொழி ஆக்கினார்கள்.** தம் மொழியை வளப்படுத்தப் பல திங்களை மேற்கொண்டார்கள்.

ஈப்ரு மொழிக் *27-8-1953* இல் தோற்றுவிக்கப்பட்டது. அது **கலைக்கழகம், சொல், எழுத்து, சொல்லாக்கம்** பற்றிக் கவனித்தது. சிறப்பாக எழுத்து முறைச் சீர்திருத்தத்தில் ஆக்கப்பணி புரிந்தது. அக்கழகம் பின்வருவனவற்றை வெளியிடுகிறது.

1. ஆண்டறிக்கை

2. காலாண்டு இதழ், இதில் ஈப்ரு மொழி பற்றியும் அதன் தொடர்பான செய்திகளும் வெளிவருகின்றன.

3. திங்களிதழ் - இதில் மொழி பற்றிய பொதுவான செய்திகள் ஆசிரியருக்கும் மாணவருக்கும் அறிவிப்புகள், படித்தோருக்கும் ஏனையோருக்கும் தகவல்கள் முதலியன வருகின்றன.

4. திங்கள் படச் சுவரொட்டிகள், உங்கள் மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள் என்ற திட்டத்திற்குரிய இவ்வெளியீட்டின் வாயிலாக ஈப்ரு மொழியில் அவ்வப்போது புகுத்தப்படும் புதுமைகளும் மாற்றங்களும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. இவை கல்வி நிலையங்களிலும் அலுவலகங்களிலும் இடம் பெறுகின்றன.

5. தனிப்பட்டவர்களின் படைப்புகள், ஈப்ரு மொழித் தொடர்பாக எழுதப்படும் சிறப்பான நூல்கள் இவற்றை முழுத் தொகை தந்தோ பகுதிச் செலவு வழங்கியோ, இக்கழகம் வெளியிடுகிறது.

6. அகர முதலிகளும், சொல்லாக்கப் பட்டியல்களும் ஆசிரியர்களுக்கும், அலுவல் துறைப் பணியாளர்களுக்கும் தேவைப்படும். அகர முதலிகளையும், சொல் பட்டியல்களையும் இக்கழகம் ஆண்டுதோறும் வெளியிடுகிறது. அரசியல், போர்ப்படைத்துறை, பொறியியல், மின்னணுயியல் முதலிய துறைகளில் சொல்பட்டியல்கள் வெளியிடப்படுகின்றன.

இக்கழகம் முனைப்பாகச் செயல்பட வேண்டுமென்று எழுத்தாளர்களும் கவிஞர்களும் விரும்புகின்றனர். இக்கழகத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குள் முரண்பாடின்றி, ஒருங்கிணைந்து ஈப்ரு மொழியை ஆட்சி மொழியாகவும் மக்கள் மொழியாகவும் மாற்றுவதில் முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றனர்.

27. மொழிப் போராட்ட வரலாறு

பேரா. சு. தமிழ்வேலு

மயிலாடுதுறை

தாய்மொழிப்பற்றே தாய் நாட்டுப் பற்றாகும். உலகில் தமிழ் நாட்டுத் தமிழின மக்களுக்குத் தாய்மொழிப் பற்று இல்லையெனும்படி வாழ்ந்து வருகின்றனர். தங்களைச் சூழ்ந்த அனைத்துத் தளங்களிலும் தம் மொழியை இழந்து வருகின்றனர். அதை அறியாமல் வாழ்ந்து வருகின்றனர். தமிழர் மேல் நிகழ்ந்த பல்வேறு அரசியல், இன, பண்பாட்டுப் படையெடுப்புகளால் இந்நிலையை அடைந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் தமிழர் மேல் நிகழ்ந்த போர் இந்தித் திணிப்புப் போராகும். அதைத் தமிழர்கள் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பது வியப்புக்குரியது.

இந்தி மொழி

இந்தி மொழி ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. *15*-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **லல்லுசி லால்** என்பவர் **உருது** மொழியில் காணப்பட்ட பாரசீக - அரபு மொழிச் சொற்களோடு பிராகிருத மொழிச் சிதைவுகளையும் சமஸ்கிருத மொழிச் சொற்களையும் எடுத்துச் சேர்த்து **இந்தி** என்னும் புதிய மொழியை உருவாக்கினார்.

இம்மொழியை உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் முதலான மாநிலப் பகுதிகளில் ஏற்று அவ்வட்டாரத்தன்மைக் கேற்பச் சிற்சில மாற்றங்களுடன் பயன்படுத்தி வந்தனர்.

1400 - 1470 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த இராமானந்தர் எழுதிய **ஆதிகிரந்தம்** என்னும் நூலே இந்தி மொழியில் தோன்றிய முதல் இலக்கிய நூலாகும்.

பொது மொழி

1961 ஆம் ஆண்டு மக்கள் கணக்குப்படி இந்திய மக்களால் *1652* மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் குறிக்கத்தக்க

அளவில் உள்ளவை 125 மட்டுமே. எட்டாவது அட்டவணையில் அசாமி, வங்காளி, குசராத்தி, மராத்தி, இந்தி, காஷ்மீர், பஞ்சாபி, ஒரியா, தெலுங்கு, கன்னடம், தமிழ், மலையாளம், சிந்தி, உருது, கொங்கணி, நேபாளி, மணிப்புரி, சமஸ்கிருதம் என்னும் 18 மொழிகள் தேசிய மொழிகள் எனப் பட்டியலிடப்பட்டுள்ளன.

பட்டியலில் ஆங்கிலம் இல்லாதது குறிக்கத்தக்கது. இந்திய மக்களில் 42 சதவிகிதத்தினர் மட்டும் பயன்படுத்தும் இந்தி மொழியைப் பொதுமொழியாக அறிவிப்பது பல நேரங்களில் சங்கடத்தைத் தரக்கூடியது. (**கடிபோலி** என்னும் வழக்கு மொழியே ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கு. இம்மொழியை 3 சதவிகிதத்தினரே ஏற்று வருகின்றனர்.) எந்நிலையிலும் தகுதியில்லாத இந்தி மொழியைப் பொது மொழியாக ஏற்பதைக் காட்டிலும் வளங்கள் நிறைந்த சில மொழிகளைப் பொதுமொழியாக ஏற்கலாம்.

இந்தி மொழிக்காரரர்களின் ஆதிக்க வெறியும் அதிகார வெறியும், சர்வாதிகாரப் போக்கும் இந்நிலைக்குக் காரணமாகும். இந்தி பொது மொழி என்னும் கருத்துரு 1906 ஆம் ஆண்டில் வேர் கொள்ளத்தொடங்கி அனைத்துத் தரப்பு மக்களிடமும் போதைப் பொருள் போலப் பற்றிக் கொண்டது. காங்கிரசு கட்சியில் ஏற்பட்ட மொழிக் கொள்கை மாற்றங்களை 1925 ஆம் ஆண்டில் பெரியார் அவர்கள் குடியரசு இதழில், **தமிழுக்குத் துரோகமும் இந்தியின் இரகசியமும்** எனக் கட்டுரையாகவும் தலையங்கமாகவும் எழுதியுள்ளார்.

முதல் போர்

காங்கிரசு கட்சிக்கும் பெரியாருக்கும் வாதப்பிரதிவாதம் போன்று அறிக்கைப் போர் 1925 ஆம் ஆண்டு தொடங்கி நடந்து வந்தது. 1937 ஜுலை 14 ஆம் நாள் இராசாசி சென்னை மாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொள்கிறார்.

1937 ஆகஸ்டு 10 ஆம் நாள் தட்சிண பாரத் இந்தி பிரசார சபைக் கூட்டத்தில் இந்தியைக் கட்டாய மொழிப்பாட மாக்கப்படும் என்னும் அறிவிப்பை வெளியிட்டார். 1937 நவம்பர் 28 ஆம் நாள் பேரா. கா.சு. பிள்ளை தலைமையில்

மா.இராசமாணிக்கனார், பாவாணர், இளவழனார், காஞ்சி மணிமொழி முதலானோர் 3000 பேர்களுடன் சென்னையில் கண்டன ஊர்வலம் சென்றனர். இதுவே முதல் எதிர்ப்புக்குரலாகும். இதைத் தொடர்ந்து பல்வேறு நகரங்களில் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடந்தன.

1937 டிசம்பர் 26 ஆம் நாள் திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் முயற்சியில் **தமிழ் நாடு** கூட்டப்பட்டது. நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பெரியார், அண்ணா, அழகிரி, கா.சு.பிள்ளை, உமா மகேசுவரனார் முதலானோர் காலந்து கொண்டனர். இம்மாநாட்டில் தான் பெரியார் தமிழ்நாடு தனி நாடகப் பிரிய வேண்டும் என்த் தீர்மானம் கொண்டு வந்தார்.

1938 பிப்ரவரி 27 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடைபெறும் என்று பெரியார் அறிவித்தார்.

முதல் இந்தித் திணிப்பு

இராஜாசி அவர்கள் 1938 ஏப்ரல் 21 ஆம் நாள் 125 உயர்நலைப் பள்ளிகளில் மூன்று படிவங்களில் கட்டாய மொழியாக இந்தி கற்பிக்கப்படும் என அரசாணை வெளியிட்டார்கள்.

1938 மே 28 ஆம் நாள் இந்தி எதிர்ப்புப் போரை முறைப்படுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டக்குழு அமைக்கப்பட்டது. தலைவராக நாவலர் சோமசுந்தர பாரதியார், செயலராக கி.ஆ.பெ. விசுவநாதன், உறுப்பினர்களாகப் பெரியார், உமா மகேசுவரனார், சௌந்தரபாண்டியன் முதலானோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழகத்து நகரங்களில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் அதிக அளவில் நடைபெற்றன. இந்திப் பாடங்களைப் புறக்கணிக்கச் செய்தல், பள்ளிகளில் மறியல், முதலமைச்சர் வீட்டிற்கு முன் மறியல், உண்ணாநோன்பு, அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுதல் போன்ற முறைகளில் எதிர்ப்பு காட்டப்பட்டன.

முதல் மறியல்

1938 சூன் மாதம் *3* ஆம் நாள் கோடம்பாக்கத்தில் மறைமலையடிகள் தலைமையில் இந்தி ஒழிப்பு மாநாடு நடந்தது. அதே நாளில் வடசென்னை தியாசிபிகல் உயர்நிலைப் பள்ளி முன் மறியல் போர் நிகழ்ந்தது

1938 ஜுன் *3* தொடங்கி *1940* பிப்ரவரி *21* ஆம் நாள் வரை வேலை நாள்களில் மறியல் போர் தொடர்ந்து நடைபெற்றது. போராட்ட வீரர்களுக்கு *3* மாதம் முதல் *3* ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் தமிழ் அமைப்புகள் தொடங்கப்பட்டன. எதிர்ப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தித் தமிழர்களை விழிப்படையச் செய்தனர்.

நீண்ட நடைப் பயணம்

இந்தி எதிர்ப்பு இயக்கத்தை மக்களிடையே கொண்டு செலுத்தும் வகையில் திருச்சியிலிருந்து சென்னைக்குச் செல்லும் வகையில் ஊர்வலம் ஒன்று நடந்தேறியது. பட்டுக்கோட்டை அழகிரி தலைமையில் *1938* ஆகஸ்டு முதல் நாள் புறப்பட்டு *234* ஊர்கள் வழியாக *87* பொதுக்கூட்டங்களை நடத்தி *43* நாள்கள் பயணத்தில் *1938* செப்டம்பர் *11* ஆம் நாள் ஊர்வலம் சென்னைக்கு வந்தது. கடற்கரையில் மறைமலையடிகள் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தேறியது.

1938 நவம்பர் *13* ஆம் நாள் நிலாம்பிகை (மறைமலையடிகள் மகள்) தலைமையில் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் பெரியார் உரையாற்றினார். இம்மாநாட்டு உரைக்காகப் பெரியாருக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டச் சிறைத் தண்டனை (*1935* டிசம்பர் *16*) வழங்கப்பட்டது. அண்ணாவும் சிறைப்பட்டார். (*1938* செப்டம்பர் *26*).

சிறைச்சாவு

சிறையில் அடைக்கப்பட்டிருந்த பலர் நோய்வாய்ப்பட்டனர். அவர்களில் திரு. நடராசன் 1939 சனவரி 15 ஆம் நாள் உயிர் நீத்தார். இவர்களுடைய சடலங்கள் சுடுகாட்டில் புதைக்கப்பட்ட பொழுது பலருடைய மனத்தில் விதைக்கப்பட்டனர்.

போராட்ட வெற்றி

21.2.1940 ஆம் நாள் இந்திப் பாடமொழித் திட்டத்தை அரசு விடுவதாக அரசாணை வெளியிட்டது. 1938 தொடங்கிய போராட்டம் வெற்றியுடன் முடிந்தது. இவ்வெற்றி திராவிட இன உணர்ச்சியையும் தமிழ் மறுமலர்ச்சியையும் உண்டு பண்ண ஏதுவாக அமைந்தது.

இரண்டாவது போர்

1948 ஜூன் 20 ஆம் நாள் இரண்டாவது கட்டாய மொழி (இந்தி, சமஸ்கிருதம், அரபி, தெலுங்கு, மலையாளம், கன்னடம்) படிக்க வேண்டுமென அரசாணை வெளியிடப்பட்டது. அதில் இந்தியே முன்னிறுத்தப்பட்டது.

1948 ஜூலை 17 ஆம் நாள் பெரியார் தலைமையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பாளர் மாநாடு நடைபெற்றது. மீண்டும் போராட்ட வழிமுறைகள் திட்டமிடப்பட்டன. ஆகஸ்டு 10 முதல் முத்தியால் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் மறியல் போர் தொடங்கியது. இப்போராட்டம் திராவிடக்கழகத்துப் போராட்டமாகவே துளிர்த்தது. செப்டம்பர் இறுதி வரை மறியல் தொடர்ந்து நடந்தது.

ஐதராபாத்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போர் காரணமாகப் போராட்டம் நிறுத்தப்பட்டது. நவம்பர் 2 ஆம் நாள் மீண்டும் மறியல் போர் மீண்டும் தொடங்கியது. தமிழகம் முழுவதும் திராவிட கழகத்தினர் சிறைப்பட்டனர். 100 நாட்களுக்கு மேல் நிகழ்ந்த இம்மறியல் போர் அரசின் பின்வாங்குதலால் மீண்டும் வெற்றியைப் பெற்றது. ஆனால் நிரந்தர வெற்றியாய் அமையவில்லை.

மூன்றாவது போர்

1953, 54 ஆம் ஆண்டுகளில் ஆகஸ்டு முதல் நாளில் புகைவண்டி நிலையங்களில் இந்தியைத் தார் பூசி அழிக்கும் போராட்டம் நடைபெற்றது. 1960 ஆகஸ்டு மாதம் குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக் கொடி காட்டும் போராட்டம் 1963 நவம்பர் 17 சட்ட எதிர்ப்பு எனத் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் போராட்டங்கள் நிகழ்ந்த பொழுதும் 1965 சனவரி 26 ஆம் நாள் தொடங்கி இந்தி ஆட்சி மொழி என்னும் நிலையை அடைந்தது.

1963 ஆம் ஆண்டு நவம்பர் 17 தொடங்கி 25.1.1965 வரை திட்டங்கள் வகுக்கப்பட்டு தொடர் போராட்டங்கள் நிகழ்ந்தன. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எண்ணற்றோர் மாநிலம் முழுவதும் சிறைத்தண்டனை பெற்றனர்.

1965 சனவரி 26 ஆம் நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடித்தனர். கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டன. சில ஊர்களில் 25 ஆம் நாளே போராட்டம் வெடித்தது. சென்னை, வேலூர், சேலம், ஈரோடு, கோவை, தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லை, மயிலாடுதுறை, கும்பகோணம், சிதம்பரம், திருப்பூர், கரூர், நாகை, கடலூர், நாகர்கோயில், விருதுநகர், காரைக்குடி, பொள்ளாச்சி போன்ற ஊர்களில் இந்தி எதிர்ப்புப் போர் மாணவர்கள் எழுச்சிப் போராட்டமாக மாறியது.

அரசின் கடுமையான அடக்குமுறைகள், தடியடி, கண்ணீர்ப் புகைக்குண்டுகள், துப்பாக்கிச் சூடு, கைது, சிறைவாசம் எனப் பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்பட்டனர். இம் மூன்றாவது போர் அரசியல் வாதிகளிடமிருந்து மாணவர்கள் கைக்கு மாறியதால் எழுச்சியோடு இருந்தது.

மாணவர்கள் போராட்டத்தை அடக்க இராணுவம் வரவழைக்கப்பட்டது. 40 இடங்களில் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்பட்டது. 100 க்கும் மேற்பட்டோர் இறந்தனர். 50 நாட்கள் நடந்த போரில் 400 க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்துள்ளனர். மொழிக்காக உலகவரலாற்றில் இப்படிப்பட்ட நிகழ்வு நிகழ்வே இல்லை.

அண்ணாவால் போராட்டத்தை நிறுத்த அறிக்கை வழி கேட்ட பொழுதும் நிற்காது இயல்பாய்த் தானாகவே (மாணவர்களின் நாகப்பட்டின மாநாட்டுத் தீர்மானத்தால் 14.3.65) நின்றது.

இப்போர் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தாலும் வெற்றி தோல்வி இல்லாது முடிவுக்கு வந்தது.

தொடர்ச்சி

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் 5ஆம் வகுப்புவரைத் தமிழ் வழிக்கல்வியைக் (ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக மட்டுமே அமையலாம்) கட்டாயமாக்க வற்புறுத்தி 1998 ஆம் ஆண்டு அய்யா நா. அருணாச்சலம் அவர்கள் முயற்சியில் தமிழண்ணல் தலைமையில் 102 தமிழ் உணர்வாளர்களின் சாகும்வரை உண்ணா நோன்பு நடந்தது.

2004 ஆம் ஆண்டு பெயர்ப்பலகைகளில் இந்தி அழிப்புப் போராட்டம் நடந்தது.

மொழி நம் இனத்தின் அடையாளம். மொழியை இழந்த இனம் வேறு எவ்விதமான மொருளாதார வளமிருந்தாலும் நடைப்பிணம்தான். தமிழர் பல்வேறு அடையாளங்களை இழந்து வருகின்றனர். இந்திக்கு எதிர் ஆங்கிலம் என்றார்கள். ஆங்கிலம் இன்று அழித்துவரும் சூழலைக்காணக் கண் கோடி வேண்டும்.

கடந்த கால வரலாறுகள் படிப்பினைகள் எதிர்கால நிகழ்வுகள் சிந்தனைத் தெளிவுடன் நிகழ வேண்டும். வரலாறாய் வாழ வழியை ஏற்படுத்துவோம்.

இளைஞர்களே! தமிழ் ஒரு நாளும் அழியாது. அதனை அழிக்க எந்நாளும், எவராலும், எதனாலும் ஆகாது.

- திரு.வி.க.

சிறந்த கலைகளை எல்லாம் தமிழில் இயற்றுவதன் மூலம் மக்களுடைய அறிவையும் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் உணர்ச்சியாகும்.

- பெரியார்

நினைவுத்தூண் திறப்பு விழாவின் நினைவாக நடத்தப்பட்ட கல்லூரி மாணவர்க்கு இடையேயான தமிழ் இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர் பட்டியல்

கவிதைப் போட்டி

<u>முதலிடம்</u>

செல்வி. **க. மான்விழி,**

இளமறிவியல் (இயற்பியல்) அ.வ.அ.கல்லூரி

<u>இரண்டாமிடம்</u>

செல்வன். **சு. சதீஷ்குமார்,**

முதுஅறிவியல் (கணிதவியல்), அ.வ.அ.கல்லூரி

கட்டுரைப் போட்டி

<u>முதலிடம்</u>

செல்வி. **சு. புனிதவதி**

இளமறிவியல் (விலங்கியல்)

ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி

<u>இரண்டாமிடம்</u>

செல்வி. **வே. கயல்விழி**

இளம் இலக்கியவியல்

தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி

போட்டியில் பங்கேற்ற மாணவர் அனைவர்க்கும் மலர்க்குழுவின் நன்றி உரியது.


மலர் சிறக்க வாழ்த்துக்களுடன்...
இன்றைய
நிகழ்வுகள் நாளைய
இனிய நினைவுகள்
நிழற்படங்களாய்
ஒளிஓவியங்களாய்
பதிவுசெய்யுங்கள்
எங்கள் அழகிய பதிவு
உங்கள் தலைமுறைக்கும்!
அன்புடன்..
கி.தளபதிராஜ்
வீடியோபாய்ண்ட்
துவக்கம்:1986
நெ.2 சாலை,மயிலாடுதுறை,போன்:223954

எந்தக் கட்சியில் நீ இருந்தாலும்...

எந்தக் கட்சியில் நீ இருந்தாலும்
இனத்தை மறந்திடாதே! - தமிழா!
இனத்தை மறந்திடாதே! - உன்

சொந்தக் குடும்பம் தனைப்பல கருத்தால்
சுட்டுப் பொசுக்கிடாதே! - தமிழா,
சுட்டுப் பொசுக்கிடாதே!

எந்தத் திசையில் நீ இருந்தாலும்
எற்றந் துறந்திடாதே! - தமிழின்
எழிலைத் துறந்திடாதே! - பழங்

கந்தலை யுடுத்துக் கஞ்சியை யருந்தினும்
கனிவை யிழந்திடாதே! - இனக்
கருத்தை யிழந்திடாதே!

எந்த நிலத்தினில் நீ இருந்தாலும்
இயல்பை மாற்றிடாதே! - இனத்தின்
இணைப்பை யறுத்திடாதே! - உன்

முந்தையர் வாழ்ந்த முதுதமிழ் நாட்டின்
மொழியை மறந்திடாதே! - உணர்வை
மூளி யாக்கிடாதே!

எந்தப் படையினில் நீ இருந்தாலும்
இனத்தை எதிர்த்திடாதே! - தமிழா,
எதிரிக் குழைத்திடாதே! - உன்

சொந்தத் தமையனைத் தம்பியைக் கொல்லவே
சூழ்ச்சி நினைந்திடாதே! - பகைவன்
சோற்றில் நனைந்திடாதே!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

நன்கொடையாளர்களுக்கு நன்றி

1.	மரு. சொள. சுயம்புராஜன், மயிலாடுதுறை	5000.00
2.	கே.செல்வக்குமார், முன்னாள் ஆசிரியர்	2000.00
3.	பேரா. இராமலிங்கம், மயிலாடுதுறை	2000.00
4.	முனைவர் மு. வரதராசன், முதல்வர், அ.வ.அ. கல்லூரி	1000.00
5.	பேரா. கா.வே. சுப்பிரமணியன், பூம்புகார்	1000.00
6.	மரு. சுப்பையன், பசுபதி கோவில்	1000.00
7.	கி. அரவிந்தன், பெங்களூர்	1000.00
8.	முனைவர். மா.அ. அறவாழி, சென்னை	1000.00
9.	மரு. ஜெ. இராஜமூர்த்தி, திருவெண்காடு	500.00
10.	மரு. வீரபாண்டியன், செம்பனார்கோவில்	500.00
11.	நா.கு.கிருட்டினமூர்த்தி, வழக்குரைஞர், மயிலாடுதுறை	500.00
12.	தமிழ்த்துறை, பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி, மேலையூர்	1000.00
13.	பேராசிரியர்கள், தமிழ்த்துறை அ.வ.அ. கல்லூரி, மன்னன்பந்தல்	10000.00
14.	பேராசிரியர்கள், மாணவர்கள், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி	2000.00
15.	பேரா.மா. திருநாவுக்கரசு, முதல்வர், தருமபுரம் ஆதினம் கலைக் கல்லூரி	1000.00
16.	தமிழ்த்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி, மயிலாடுதுறை	2000.00
17.	ஆசிரியர்கள், கிட்டப்பா மேனிலைப்பள்ளி, கூறைநாடு	3000.00
18.	பொதுமக்கள் மற்றும் சாரங்கபாணியின் உறவினர்கள் மருதவாஞ்சேரி	4000.00
19.	செந்தமிழ்ப் புலவர். இரா. இராசசேகரன், மேலையூர்	500.00
20.	கவிஞர் கோ.கலைவேந்தன், குற்றாலம்	500.00
21.	புத்தகச்சோலை, மயிலாடுதுறை	500.00
22.	சு. கலியபெருமாள், சித்தர்காடு	1000.00
23.	கி. இராசமுத்து புதுக்கோட்டை	1000.00

24.	இரா. சந்திரமோகன், பொறியாளர், மூவலூர்	500.00
25.	நிவேதா மு. முருகன், ஒன்றியக்குழுத் தலைவர்	5000.00
26.	திரு. த. இராசகுமார், ச.ம.உ., மயிலாடுதுறை	5000.00
27.	திரு. அ. நடராசன், மு.ச.ம.உ., குத்தாலம்	1000.00
28.	புலவர் ஆ. வீரமணி, இரகுபதி கட்டளை	1500.00
29.	திரு. மங்கை. சங்கர், மங்கைநல்லூர்	500.00
30.	திரு. மு. ஞானவேலன், தி.மு.க. ஒ.செ, செம்பை	2000.00
31.	திரு. முத்துக்குமார், தேரழந்தூர்	1000.00
32.	பேரா. சு. விசுவநாதன், மயிலாடுதுறை	500.00
33.	திரு. சின்னதுரை, மருத்தூர்	2000.00
34.	மாணவர்கள், அ.வ.அ.கல்லூரி, மன்னன்பந்தல்	20000.00
35.	ஆசிரியர்கள், மாணவர்கள், ஏ.ஆர்.சி. காமாட்சி மெட்ரிக் பள்ளி, சித்தர்காடு	1500.00
36.	ப. அருளி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை,	1000.00
37.	பேராசிரியர்கள், பொருளாதாரத்துறை, அ.வ.அ. கல்லூரி,	500.00
38.	ஆர்.டி. இராஜசேகர், ஒளிப்பதிவாளர் சென்னை,	2500.00
39.	கா. செல்வராசு, சித்தர்காடு	500.00
40.	சு. மாலதி, ஊ.ம.த. சேத்திரபாலபுரம்	500.00
41.	கோ. நீலகண்டன், சேந்தங்குடி	500.00
42.	மயில் (எ) குருமூர்த்தி ஊ.ம.த. மன்னன்பந்தல்	1000.00
43.	பிரியா அ. கிருட்டினமூர்த்தி, மயிலாடுதுறை	1000.00
44.	திருமதி. குணவதி செம்பியன், செம்பனார்கோவில்	4000.00
45.	திரு. கோமல் அன்பரசன், சென்னை	1000.00
46.	திரு. மதிவாணன், மாப்படுகை,	500.00
46.	திரு. எம்.பி.எம். பாலு, வழக்குரைஞர், மாப்படுகை	500.00
47.	முனைவர் இரத்தின. வெங்கடேசன், சிங்கப்பூர்	500.00
48.	திரு. கி. திருமாறன், சிங்கப்பூர்	500.00
49.	திரு. கோ. இராமலிங்கம், சிங்கப்பூர்	500.00
50.	திரு. நாக. இரகுபதி, மயிலாடுதுறை	1000.00

(21.01.2007 ஆம் நாள் வரை நன்கொடை [illegible]த்தவர்களுடைய பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. இந்நாளுக்கு[illegible]ரித்[illegible]க்கு நன்றி பாராட்டுகிறோம்

- தாய் மொழியில் கையெழுத்திடுவோம்
- குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயரிடுவோம்
- கடைகளுக்குத் தமிழ்ப் பெயர் வைப்போம்
- ஈருருளை நான்குருளை ஊர்திகளில் தமிழ் எண் எழுதுவோம்
- தமிழ்வழிக் கல்வியை நிலைநாட்டுவோம்
- கோயில்களில் தமிழ் வழிபாட்டை வற்புறுத்துவோம்
- இல்லங்களில் தமிழ்வழியில் திருமணங்களைக் கொண்டாடுவோம்.